கல்கி

KALKI
3.8.97
ரூ. 4.00



பாரதிராஜாவின்
'பழைய'
கண்டுபிடிப்பு!

தி.மு.க., த.மா.கா:

உயிரை வாங்கும்
உட்கட்சிப் பூசல்கள்!



ஆரோக்கியமான கேசத்திற்கு
இயற்கையான மருத்துவ முறை
krithika
HAIR VITALIZER
krithika™
HAIR VITALIZER
7 times Concentrated with Natural Colour.
50 ml.
100 ml.
அரிய மூலிகைகளில் இருந்து
தயாரிக்கப்பட்டது. கேசத்தைப்
பொடுகிலிருந்தும் முடி
உதிர்வதிலிருந்தும் பாதுகாத்து,
உலர்ந்த கேசங்களை
உயிர்ப்பிக்கின்றது கிருத்திகா.
Herbal (Siddha) Hair Vitalizer
Free set of 5 Combs with 100 ml Pack
mothi Pharma Pvt. Ltd.
No. 703, Poonamallee High Road, Aminjikarai, Chennai - 29. (Tamilnadu)
Ph: 6445448, Fax: 044-614780
கேர்லெஸாய் இருந்தால் ஹேர்லெஸ் ஆகும்.

என்ன செய்யப் போகிறார்கள்?





தி.மு.க. - த.மா.கா:

உயிரை வாங்கும் உட்கட்சிப் பூசல்கள்!


சென்னை மயிலாப்பூர் பகுதியில் உள்ள 147வது வட்டத்தில் த.மா.கா. கொடி யேற்று விழா. சர்க்கிள் கமிட்டி (நான்கைந்து வட்டங்கள் சேர்ந்தது) தலைவர் ரவியின் பெயர், போஸ்டர்களிலும், நோட்டீஸ்களிலும் போடப்பட்டிருந்தாலும், கொடி பீடத்தில் பொறிக்கப்பட்டிருந்த கல்லில் அவர் பெயர் இல்லை. புகைச்சல் கிளம்பியது. வெங்கட்ராமன் என்ற த.மா.கா. தொண்டர் தாக்கப்பட், வட்டாரத் தலைவரான ரவியை, புகாரின் பேரில் விசாரணைக்காக போலீஸ் அழைத்துச் சென்று விட்டது.

இதே போல் 152வது வட்டத்திலும் விவகாரம், தென் சென்னை மாவட்டத் தலைவர் முக்தா ஸ்ரீநிவாசன் முன்னிலையில் விசாரிக்கப்பட்டது. வாக்குவாதம் முற்றி சமரசம் ஏற்படாமல் போனது. வெறுத்துப் போனார் முக்தா. கட்சியினரின் போக்கைக் கண்டித்து, வீட்டிலேயே உண்ணாவிரதம் துவங்கி விட்டார். எட்டு மணிக்கே துவங்கினாலும், பத்து மணி அளவில் தான் முக்கியப் பிரமுகர்களுக்கு உண்ணாவிரதம் பற்றித் தெரிய வந்தது. மதியம்

ஒன்றரை மணி வாக்கில் தில்லியில் இருந்த மூப்பனாருக்குத் தெரிவிக்கப்பட, அவர் சத்தியமூர்த்தி பவனுக்குத் தொடர்பு கொண்டார். உடனே கட்சிப் பிரமுகர்கள் விரைந்து முக்தா வீட்டுக்கு சென்று பழரசம் கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்கள். உட்கட்சிப் பிரச்னை தீர்ந்ததோ இல்லையோ உண்ணாவிரதம் முடிந்தது.

"முக்தா தனிப்பட்ட முறையில் மிகவும் நல்லவர். ஆனால் மாவட்டத் தலைவராக இருந்து செயல்பட அவருக்குத் தகுதி போதாது. சாதாரண மோதல், போலீஸ் ஸ்டேஷன் என்றாலே மனுஷன் டென்ஷன் ஆகி விடுகிறார். தென்சென்னையில் தி.மு.க. செயலாளராக இருக்கும் கிட்டுவுக்கு இணையாக எப்படி இவரால் அரசியல் நடத்த முடியும்? கோடம்பாக்கம், ஆயிரம் விளக்கு போன்ற இடங்களில் கூட்டங்கள் நடத்துவதில் தகராறு. ஒரு பொதுக்கூட்டத்தில் 'எனக்கும் இந்தக் கூட்டத்துக்கும் சம்பந்தம் கிடையாது' என்று மேடையில் பேசிவிட்டு வருகிறார். ஒரு மாவட்டத் தலைவர் இப்படிச் செய்யலாமா? இவர் திறமையாகச் செயல்படா விட்டால் தென்சென்னை த.மா.கா.வில் புதிய புதிய பிரச்னைகள் கிளம்பும்" என்று சொன்னார் த.மா.கா. பிரமுகர் ஒருவர்.

• பொன்முடி





• வீராசாமி

முக்தா அந்தப் பிரச்னைகள் பற்றி பத்திரிகையாளர்களிடம் பேச விரும்பவில்லை. "இது எங்கள் உட்கட்சிப் பிரச்னை சார். காந்திய முறைப்படி உண்ணாவிரதம் இருந்தேன். தலைவர் தலையிட்டு முடித்து வைத்தார். ரொம்ப சாதாரண விஷயம் இது!" என்று முடித்துக் கொண்டார் அவர்.

த.மா.கா.வில் உட்கட்சிப் பூசல் என்பது இன்று ஊராட்சியிலிருந்து மாநகராட்சிப் பகுதி வரை பல்கிப் பெருகியுள்ளது. உட்கட்சித் தேர்தலில் எம்.பி., எம்.எல்.ஏ., ஆகியோர் கட்சிப் பொறுப்புகளுக்குப் போட்டியிடக் கூடாது என்று மூப்பனார் சொல்லி விட்டார். இதன் காரணமாக மற்றவர்கள் பொறுப்புகளுக்கு வர முடிந்தது. தங்கள் பகுதிகளில் கட்சி 'தங்கள் கையை விட்டுப் போய் விடப் போகிறதே' என்ற கவலையில் லோக்கல் எம்.எல்.ஏ.க்கள், எம்.பிக்கள் அடாவடியாக நடந்து கொள்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் அவர்களுடன் மோத, பல மாவட்டங்களில் த.மா.கா. இரண்டு மூன்று கோஷ்டிகளாகப் பிரிந்து கிடக்கிறது. இது காங்கிரஸ் கலாசாரத்தின் பிரதிபலிப்பே என்றாலும், ஒரு புதிய சக்தியாகத் தங்களை வெளிக்காட்ட விரும்பும் தலைவர்களுக்கு மிகவும் சங்கடமாக இருக்கிறது.

வேலூர் மாவட்டத்தில் பலராமன் எம்.பி., ஞானசேகரன் எம்.எல்.ஏ. மற்றும் மாவட்டத் தலைவர் ஜெயமோகன் ஆகியோர் தலைமையில் தனி ஆவர்த்தனம். சமீபத்தில் மூப்பனார் வேலூருக்குப் போகும்போது நிறையவே அபஸ்வரங்கள். சேலம் மாவட்டத்தில் எம்.பிக்கள் தேவதாஸும், கந்தசாமியும் ரொம்பவும் படுத்துவதாக த.மா.கா. ஊழியர்கள் சொல்கிறார்கள். மாவட்டத் தலைவர் அன்பழகன் ஓரங்கட்டப்பட்டிருக்கிறார் என்று குறை சொல்கிறார்கள். இந்த கோஷ்டிப் பூசல் விளைவாக தலைவாசல் தொகுதியில் அண்ணா மறுமலர்ச்சி திட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமத்தையும் கூட மாற்றியிருக்கிறார்கள் எனத் தெரிகிறது. அதே போல் திருச்சியில் அடைக்கல ராஜுக்கும் கட்சிக்காரர்களுக்கும் பிரச்னை; மதுரை மாநகரத் தலைவர் மலைச்சாமிக்கு லோக்கல் எம்.பி., ராம்பாபு ஏகப்பட்ட தொல்லைகள் கொடுக்கிறாராம். இப்படித் தமிழ்நாடு முழுவதும் கோஷ்டிப் பூசல்கள்!

"தமிழ்நாட்டில் அடுத்த ஆட்சியை பிடிக்கப் போகும் கட்சி என்பதால், பொறுப்புகளுக்கு வரவும் முக்கியத்துவத்தைத் தக்க வைத்துக் கொள்ளவும், பிரமுகர்களிடையே போட்டி நடக்கிறது. கட்சி உயிரோட்டமாக இருக்கிறது என்பதற்கு இவையெல்லாம் அடையாளங்கள்" என்கிறார் சீனியர் த.மா.கா. பிரமுகர் ஒருவர். ஆனால் இளைஞர்களுக்கு வருத்தம் இருக்கவே செய்கிறது. நடந்து முடிந்த உட்கட்சித் தேர்தலில், போட்டி இருந்த போதும் தேர்தலை நடத்தாமல், மேலிடத்திலிருந்து வந்த லிஸ்ட்படி ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதுதான் கட்சியில் பூசல்களுக்

குக் காரணம் என்பது அவர்கள் கருத்து. குறிப்பாக தென்சென்னை போன்ற சில இடங்களில் இளைஞர்களின் வாய்ப்பைப் பறிப்பதில் ஒரு கோஷ்டி குறியாக இருந்ததாம். "தலைவர் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார். சரியான நேரத்தில், கோஷ்டி மனப்பான்மையோடு செயல்படும் ஆட்களை அடையாளம் காட்டுங்கள். புண், புரையோடிப் போக விட மாட்டார் ஐயா" என்று நம்பிக்கையுடன் சொன்னார் த.மா.கா. கவுன்சிலர் ஒருவர்.

ஆட்சிக்கு வருவதில் நாட்டம் காட்டும் கட்சியில் நிலைமை இப்படி இருக்கு. ஆட்சியில் இருக்கும் தி.மு.கவில் எப்படி?

சமீபத்தில் நடந்து முடிந்திருக்கும் பத்தாவது உட்கட்சித் தேர்தல் எல்லோரையும் பாடாய்ப் படுத்திவிட்டு முடிந்திருக்கிறது. தேர்தலில் நடக்கும் முறைகேடுகளையும், குறைபாடுகளையும், கட்சித் தலைமைக்கு எடுத்துச் சொல்ல அறிவாலயத்தில் தினமும் கட்சித் தொண்டர்கள் கூட்டம். சா. கணேசன், உசேன், குப்புசாமி, மிசா கணேசன் என்று ஆற்காட்டார் தலைமையில் பூசல்களைக் களைய ஒரு குழு போடப்பட்டிருந்தாலும் 99 சதவிகிதப் பிரச்னையில் ஆற்காட்டார் முடிவுதான் கட்சியின் முடிவாக அறிவிக்கப்பட்டது என்று வருத்தத்துடன் சொல்கிறார்கள் தொண்டர்கள். பல சீனியர் மாவட்டப் பிரமுகர்கள் உண்மை நிலைமையைக் கலைஞரிடம் எடுத்துச் சொல்லக் கூடிய வாய்ப்பு மறுக்கப்பட்டதாகவும் குமுறுகிறார்கள். "ஆற்காட்டார் அதிகாரம் எல்லை மீறிப் போய்க் கொண்டிருக்கிறது. கட்சியில் ஏதாவது பெரிய 'பிரச்னை' வெடித்தால் அதற்கு அவர்தான் பொறுப்பு!" என்று அடித்துச் சொன்னார் காஞ்சிபுரம் மாவட்ட ஒன்றியத் தலைவர் ஒருவர்.

கட்சி, ஆட்சியில் இருப்பதால் தேர்தலின் போது பண நடமாட்டம் மிகவும் அதிகம். சாராயம் விற்பவர்கள், ஒயின்கடை முதலாளிகள் வட்டிக்குப் பணம் விடுபவர்கள், தொழிலதிபர்கள் என்று கட்சிப் பொறுப்புகளைப் பிடிக்க பலத்த போட்டி. 'சம்பாதித்துக் கொள்ளலாம்' என்ற நம்பிக்கைதான்! இந்தப் போட்டியில் கட்சிக்காகச் சிறை சென்ற, அடி உதை பட்ட உண்மையான உடன் பிறப்புகள் காணாமல் போய்விட, ஆங்காங்கே கைகலப்பு, மோதல்கள். சில இடங்களில் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வர போலீஸ் தலையிட வேண்டியதாகிவிட்டது; கொரட்டூரில் கொலையே நடந்தது!

இந்த முறை உட்கட்சித் தேர்தலில் நடந்தது போன்று இதற்கு முன் நடந்ததே இல்லை என்று சொல்கிறார்கள் கட்சிக்காரர்கள். "ஒரு வட்டத்தில், ஒன்றியத்தில், மாவட்டத்தில் போட்டி என்று வந்துவிட்டால் தேர்தலை நடத்த வேண்டியதுதானே. அதை விட்டு விட்டு கூடிப் பேசி 'ஒரு மனதாக'த் தேர்ந்தெடுக்கிறார்கள். இந்த 'ஒரு மனதாக' என்று வரும் போதுதான் உண்மையான கட்சிக்காரன் அடிபட்டுப் போகிறான். பணம் இருப்பவர்கள்தான் பதவிக்கு வந்து விடுகிறார்கள். எங்களுக்கெல்லாம் வேறு கட்சி தெரியாது. வாழ்வோ, சாவோ, குமுறலோ, குதூகலிப்போ எதுவானாலும் இந்த கட்சிதான் எங்களுக்கு!" என்று சொன்னார் சென்னைப் புறநகர் உடன்பிறப்பு ஒருவர்.


• முக்தா சீனிவாசன்

ஆனால் அறிவாலயத்தில் செல்வாக்காக இருக்கும் சிலருக்குப் பிடிக்காதவர்கள் விஷயத்தில் இந்த 'ஒரு மனதாக' என்ற போக்கு கைவிடப்பட்டு சங்கடப்படுத்தும் எண்ணத்தோடு தேர்தல் நடத்தப்பட்டதாம். மாவட்டச் செயலாளர்களைப் பொறுத்த மட்டில் பழைய ஆட்களே தொடர்வார்கள் என்ற கொள்கை முடிவெடுத்துவிட்டு, விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் ஆளை மாற்றியதேன் என்று கேட்கிறார்கள் உடன்பிறப்புகள். விழுப்புரம் மாவட்டத் தேர்தல், அறிவாலயத்தில் நடத்தப்பட்டபோது, அடிதடி, ரகளை. பொன்முடியின் எதேச்சாதிகாரப் போக்கால் மாவட்டச் செயலாளராக இருந்த சம்பத் மிகவும் நொந்து போயிருக்கிறார்.

"அ.தி.மு.க.-ம.தி.மு.க. என்ற வலுவான அணி உருவாகி இருக்கிறது. இந்த நிலையில் உட்கட்சித் தேர்தலால் எங்களுக்கு பல மனக் கசப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. நாளை மிகவும் முக்கியமான தருணத்தில் பலர் அந்த அணிக்குத் தாவுவார்களேயானால் கட்சியின் நிலை என்னாவது? ஆகவே தலைவர் அவர்கள் யாருடைய உதவியையும் கோராமல், அவரே மாவட்டவாரியாகப் பிரச்னைகளை விசாரிக்க வேண்டும். அப்போதுதான் தலை வலி தீரும்" என்று சொன்னார் மூத்த கட்சிப் பிரமுகர் ஒருவர்.

— ப்ரியன்

முதலில் ஒயிட்ஸ் ரோடில் ஆரம்பிக்கப்பட்ட போது 169 மாணவிகள்தான். இப்போது ஐயாயிரம்!

எங்கே?... சென்னை, எத்திராஜ் கல்லூரியில்.

1948-ம் வருடம். பிரபல கிரிமினல் வழக்கறிஞர் வி.எல். எத்திராஜுக்கு அந்த ஐடியா தோன்றியது. அப்போதைய கவர்னர் ஜெனரல் ராஜாஜி, சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் சர். ஏ.எல். முதலியார், கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் ஆகியோரின் ஆசியுடன் அந்த ஐடியாவுக்கு கிடைத்த செயல் வடிவத்தின் பெயர் : எத்திராஜ் மகளிர் கல்லூரி.

இப்போதைய முதல்வர் இந்திராணி ஸ்ரீதரன் பொன் விழா ஆண்டில் ரொம்பவும் மகிழ்ச்சியாகவே இருப்பது நியாயம்.

"கடந்த பதினெட்டு வருடங்களாக நீதிபதி நடராஜன் நிர்வாகக் குழுத் தலைவராக இருக்கிறார். மாணவிகளுக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டுமென்றால் குழுவிடமிருந்து கிடைக்கும் ஒரே பதில் : ஓ.கே.

"மாணவிகளுக்கு இங்கே கிடைப்பது பேப்பர் டிகிரி மட்டுமல்ல. அதில் எங்களுக்கு நம்பிக்கையுமில்லை. அதையும் மீறி வாழ்க்கையில் தங்களை நிலை நிறுத்திக் கொள்ள, நிரூபிக்கத் தக்க வகையில் அவர்களைத் தயார் செய்ய வேண்டும். அதுதான் எங்கள் நோக்கம். எத்திராஜின் தனித்தன்மை என்று கூட அதைச் சொல்லலாம்.

"இங்கே ராகிங் கிடையாது. இங்கிருக்கும் 'இன்வால்மென்ட்' மாணவிகளுக்கும் சரி, ஆசிரியைகளுக்கும் சரி வேறு எங்காவது இருக்குமா தெரியவில்லை. இது எல்லா கல்லூரி முதல்வர்களும் தங்கள் கல்லூரியைப் பற்றிச் சொல்வதுதான் என்று உங்களுக்குத் தோன்றலாம். இங்கு படித்த மாணவிகளைக் கேட்டால் தெரியும்.

"பொன் விழாவை முன்னிட்டு புதிய நூல் நிலையம் ஒன்று உருவாகிறது. இரண்டு மாடி. முதல் மாடியில் நூல்கள். இரண்டாம் மாடியில் ஆராய்ச்சிக்காக இடம். கீழ் தளத்தில் படிக்க அறை. அதே போல புதிய மாணவியர் விடுதி ஒன்று பொன் விழாவை ஒட்டிக் கட்டப்படுகிறது."



* பொன் விழாக் கொண்டாட்டத்தில் ப. சிதம்பரம் & நளினி சிதம்பரம்

எத்திராஜின் முன்னாள் மாணவிகள் இந்நாள் பிரபலங்கள் பலர். லதா ரஜினிகாந்த், மத்திய அமைச்சர் ஜெயந்தி நடராஜன், மாநில அமைச்சர் சற்குணம் இப்படி.

வேறு சிலரைப் பார்த்துப் பேசலாம் என்று முயன்றபோது, இரண்டு சுதாக்கள் அகப்பட்டார்கள். சுதா ரகுநாதன், சுதா சுந்தரராமன்.

சுதா ஷா என்று ஒருவர் இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் கேப்டனாகவும் இருந்தார் நினைவிருக்கிறதா? அவரும் எத்திராஜ்தான்.

இனி சுதாக்களின் நினைவுகள்:

சுதா ரகுநாதன் (கர்நாடக இசைக் கலைஞர்) :

"நான் முதலாண்டு பி.ஏ. (பொருளாதாரம்) படிக்கும்போது ஈவா மாத்யூ கல்லூரி முதல்வர். எனக்குள் இருந்த இசை ஆர்வத்தையும், திறமையையும் அடையாளம் கண்டு என்னை பெருமளவு ஊக்குவித்தார். முதன் முதலாக 'நைட்டிங்கேல் ஆஃப் தி காலேஜ்' என்று என்னை வர்ணித்தவர் அவர்தான்.

முதலில் சயன்ஸ் குரூப் மீது எனக்கு நாட்டம் இருந்த போதும், வேண்டாம். உன் திறமையை வளர்த்துக் கொள்ள ஆர்ட்ஸ் சப்ஜெக்ட் செய். பரிசோதனைச் சாலையிலேயே உன் நேரத்தைப் போக்கி விடாதே என்று எனக்கு அறிவுரை சொன்ன டியூட்டர்களை இன்றும் நான் நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன்.

மற்றக் கல்லூரிகளோடு ஒப்பிடுவதாக

நினைத்துக் கொள்ளக் கூடாது. என்னைப் பொறுத்தவரை ஒவ்வொரு மாணவியையும் சிறப்பாக நடத்துவது எத்திராஜ் கல்லூரியின் தனித்தன்மை என்று சொல்வேன்! எந்தத் துறையில் ஆனாலும் இந்த மாணவிக்குள் ஒரு சிறிய பொறி இருப்பதாகத் தெரிந்தாலும் ஊதி ஊதி அதை வளர்த்து விடுவார்கள். நான் இன்று இசையில் ஓரளவு வளர்ந்திருக்கிறேன் என்றால் இந்தப் பயிரை வளர்த்த நாற்றங்கால் எத்திராஜ்தான். இன்றும் நான் என் கல்லூரியுடன் தொடர்பு வைத்துக் கொண்டுதான் இருக்கிறேன். விழாக்களுக்குப் போவேன். முன்னாள் முதல்வர்களின் இல்லத் திருமணங்களில் கச்சேரி செய்திருக்கிறேன். யார் முதல்வராக வந்தாலும் என் மீது அவர்களின் அன்பு தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது; இருக்கும்."

சுதாவின் கல்லூரி பொன் விழா ஆண்டில் அவருக்கும் ஒரு சிறப்பு வாய்த்திருக்கிறது - சென்னை, கிருஷ்ணகான சபா வழங்கும் சங்கீத சூடாமணி பட்டம் ஆகஸ்டு முதல் வாரத்தில் சுதா ரகுநாதனுக்கு வழங்கப்படுகிறது. இப்பட்டத்தைப் பெறும் ஜூனியர் மோஸ்ட் (வயசுல மட்டும்தாங்க!) கலைஞர் இவராகத்தான் இருக்கும்.



• சுதா ரகுநாதன்



• சுதா சுந்தரராமன்

"பேப்பர் டிகிரி மட்டுமே நோக்கமல்ல!"

சுதா சுந்தரராமன் : (பொதுச் செயலாளர், அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கம், தமிழ்நாடு)

"பி.ஏ., எம்.ஏ. இரண்டிலும் நான் ஆங்கில இலக்கியம் படித்தது எத்திராஜில்தான். 1975ல் சேர்ந்தேன். மூன்று வருடம் கல்லூரி விடுதி வாசம். சமூகத்தைப் பற்றிய புதிய பார்வையை எனக்கு அந்தக் கல்லூரிதான் தந்தது. குறிப்பாக என்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகளின் சார்பாக நான் வெளியே போனபோது பல்வேறு பிரிவு மக்களின் பிரச்னைகளைப் புரிந்து கொள்ள முடிந்தது. ஒரு மாணவியிடம் உள்ள தனித்தன்மைகளுக்குத் தங்கு தடையின்றி கதவுகளைத் திறந்து வைப்பதில் எங்கள் கல்லூரிக்கு இணையில்லை என்பது என் கருத்து.

காலை நேரங்களில் அஸெம்பிளியில் மாணவிகள் தங்கள் திறமைகளை அரங்கேற்றலாம். நான் கட்டுரைகள் எழுதிப் படித்திருக்கிறேன். யூனியன் தேர்தலில் நின்று நான் பொதுச் செயலாளராக வெற்றி பெற்றேன். என்னுள் முற்போக்குச் சிந்தனைகள் வளர எத்திராஜ் நாட்கள் தான் காரணம் என்பதை நான் மறுக்கவோ மறக்கவோ முடியாது. என்.சி.சி. மீது எனக்கிருந்த ஆர்வம், ஹவாயன் கிதார் வாசிக்கும் திறமை இவற்றை வளர்த்ததும் எத்திராஜ்தான்.

எனக்கு ஒரு வருத்தம் உண்டு. நான் படித்த சமயம் விடுதிகளில் அறைகள் ஒதுக்கும் போது தாழ்த்தப்பட்ட சமுதாய மாணவிகள் ஒரு பிளாக்கில் சேர்ந்து கொள்வார்கள். அறை அப்படி ஒதுக்கப்பட்டுவிடும். இது நிர்வாகத்தின் கோளாறு அல்ல. அந்த மாணவிகளே அப்படிக் கேட்டு வாங்கிக் கொள்வார்கள். இன்று நிலை மாறியிருக்கும் என்று நம்புகிறேன். இல்லையெனில் நிர்வாகமே முன் வந்து அவர்களை மற்றவர்களோடு கலந்து பழகி வசிக்க வற்புறுத்த வேண்டும். அப்போது போல் இப்போது இல்லை என்றால் மிகவும் மகிழ்வேன்."

சுதா சுந்தரராமனின் கடைசி பாராவைப் படித்துவிட்டு எத்திராஜ் முதல்வர் இந்திராணி ஸ்ரீதரன் மிகவும் உறுதியாகச் சொன்னார்:


"அப்போது எப்படியோ தெரியவில்லை. இப்போது நாங்கள் வெகுதூரம் வந்தாயிற்று! விடுதிகளில் அறை ஒதுக்கும் போது ஜாதி, மதம், பொருளாதாரப் படிக்கட்டுகள் எதுவும் முன் நிற்காது. சொல்லப் போனால் இப்போது எங்கள் விடுதிகளில் டார்மிட்டரி டைப் வந்து விட்டது. ஒரே இடத்தில் 20 மாணவிகள். முதல் வருடப் படிப்பு மாணவிகளை ஒரே இடத்தில் வைக்கிறோம். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்பதெல்லாம் நிச்சயம் இல்லை. சிலருக்கு 'ஹோம் ஸிக்' இருக்கும். அந்தப் பெண்களை மற்றவர்கள் தேற்றி மனதை மாற்றுவார்கள்!

பேட்டி : **ராணி மைந்தன்**

ஹீரோவும் ஹீரோயினும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளாமலேயே காதலிப்பதுதானே 'காதல் கோட்டை' படத்தின் முக்கிய அம்சம்! தமிழில் சிறந்த படமாய் காதல் கோட்டை தேர்ந்தெடுக்கப்பட்டதைப் போலவே, பிற மொழிகளில் தேர்வான திரைப்படங்களின் ஸ்பெஷாலிடி என்ன? ஒரு சிறு அறிமுகம்.

அதாஜ்யா

இது அசாமியப் படம். 40களில் வாழ்ந்த நிஜ கதாபாத்திரங்கள்தாம் படத்துக்கு இன்ஸ்பிரேஷன். படத்தின் முக்கிய கேரக்டர்கள் மூன்று விதவைகள். தம் வாழ்க்கைக்காக போராடிக் கொண்டிருக்கும் போது, அந்த ஊருக்கு, ஒரு அமெரிக்க ஆராய்ச்சி யாளர் வருகிறார். அவர் ஒரு விதவையை சுதந்தர மாய் சிந்திக்க வைக்கிறார். மூவரும் போராட்டத் தின் முடிவில் என்னவாகிறார்கள் என்பதுதான் கதை.



• அதாஜ்யா



• அமெரிக்கா! அமெரிக்கா!

அமெரிக்கா! அமெரிக்கா! (கன்னடம்)

சூர்யா, சஷாங்கன், பூமிகா மூவரும் பால்ய நண்பர்கள். தாய்நாட்டுப்பற்று மிகவும் கொண்ட, அறிவாளியான சூர்யா, படித்து முடித்த பின் இங்கேயே தொழில் தொடங்குகிறான். சஷாங் கனின் கனவோ, ஆடம்பரமான அமெரிக்க வாழ்க்கை. சூர்யாவுக்கு பூமிகா மீது காதல். ஆனால் பூமிகாவோ, சஷாங்கனை கல்யாணம் பண்ணிக் கொண்டு, அமெரிக்காவில் செட்டில் ஆகிவிடு கிறாள்.

சூர்யா பிசினஸ் விஷயமாய் அமெரிக்கா போகும்போது, சஷாங்கன்- பூமிகாவைச் சந்திக் கிறான். எதிர்பாராதவிதமாய் ஒரு விபத்தில் இறக் கிற சஷாங்கனின் ஆசை, பூமிகா, சூர்யாவை மணந்து கொண்டு மறுவாழ்வு தொடங்க வேண்டும் என்பதுதான். பூமிகா இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. தனி வாழ்வு தொடங்க பூமிகா இந்தியாவுக்கு பிளேன் ஏறுகிறாள்.

தாய்ரா (இந்தி)

தாய்ரா சிக்கலான லவ் ஸ்டோரி. ஒரு கிரா மத்துப் பெண்ணை, விபசார விடுதி நடத்துபவர் கடத்திக் கொண்டு போகும்போது, அவள் தப்பி விடுகிறாள். ஒரு நதிக்கரையில், ஸ்திரிபார்ட்களில் நடிக்கிற ஒருவரைச் சந்திக்கிறாள்.

அதன்பின், மூன்று பேர் அந்த கிராமத்துப் பெண்ணைக் கூட்டாய்க் கற்பழிக்கிறார்கள். மறுபடி ஸ்திரி பார்ட்காரர் - கிராமத்துப் பெண் [illegible]

கிராமத்துப் பெண் ஆண் உடையில் இருக்க வேண்டிய சூழ்நிலை. இருவருக்குமிடையே ஏற்படும் காதல், அதனால் நிகழும் சிக்கல் எல்லாமாய்ச் சேர்ந்து. படத்துக்கு தேசிய அளவில் ஓர் அங்கீகாரம் வாங்கிக் கொடுத்துவிட்டன.

தாமு (பெங்காலி)

அப்பாவியான கிராமத்து ஆசாமி தாமு கேஷுவலாய் தந்த வாக்குறுதியை குழந்தை ருங்கு சீரியஸாய் எடுத்துக் கொண்டுவிட, உடனே தாமுவும் அதை நிறைவேற்றும் பணியில் முழுமூச் சாய் இறங்குவதுதான் கதை. அளிக்கப்படும் வாக்குறுதி : குழந்தை ருங்குவை யானைமேல்

ஏற்றி, அவளுடைய தாத்தாவின் கிராமத்துக்கு அழைத்துப் போவதுதான்!

பலவித சிரமங்களை அனுபவித்து, கடைசியில் ஒரு சர்க்கஸ் கம்பெனி முதலாளியைக் கெஞ்சிக் கூத்தாடி, குழந்தையின் ஆசையை நிறைவேற்று கிறான் தாமு.

தேஷாடனம் (மலையாளம்)

மடாதிபதியாக நியமிக்கப்படத் தேர்வாகிறான் சிறுவன் பாச்சு. தாத்தாவுக்கு ஏக சந்தோஷம். ஆனால் அம்மாவின் மனம் அதை ஜீரணிக்க முடியாமல் திண்டாடுகிறது.

குடும்பத்தின் மத பாரம்பரியத்துக்கும், பாசத்துக்கும் இடையே போராட்டம். இறுதியில் அம்மா சம்மதிக்க, பாச்சு, முறைப்படி மடாதிபதியாகிறான்(ர்)


மடாதிபதியாகிவிட்டாலும், தாய் - மகன் பாசத்தை அறுக்க முடியாமல் கடும் போராட்டம். மடத்தைத் துறந்து அம்மாவிடம் வந்து விடுகிறார். ஆனால், மடாதிபதியை மறுபடி மகனாய் ஏற்க, தாயும், மற்ற குடும்பத்தினரும் மறுத்து விடுகிறார்கள். அற்புதமான உணர்ச்சிப் போராட்டக் கதை.

லட்டி (பெங்காலி)

65 வயதில் ரிடையராகிறார் பள்ளிக்கூட ஹெட் மாஸ்டர் ஒருவர். அவருக்கு ரிடையர்மென்ட் தினத்தன்று தரப்படும் பரிசுகளுள் ஒன்று கைத்தடி. ஆனால், 'எனக்கு இதனால் என்ன பலன்?' என்று நினைக்கிறார் அவர்.

ரிடையர் ஆன கிழவருக்கு வீட்டில் மகன்கள், மருமகன்கள் மத்தியில் மரியாதை கிடைக்கவில்லை. அவரது அட்வைஸ்களைக் கேட்க ஆளில்லை. வெறுத்துப் போய், கைத்தடியுடன் வீட்டை விட்டு வெளியேறி ஒரு குடிசைப் பகுதிக்குப் போய் வசிக்கத் துவங்குகிறார். அங்கே அவரது கல்விப் பணி தொடர்கிறது.

• ராவ் சாகிப்



தேஷாடனம்



இன்னும் சில காதல் கோட்டைகள்

ராவ் சாகிப் (மராத்தி)

மிக உயர்ந்த லட்சியங்களை ஊட்டி அம்மாவால் வளர்க்கப்பட்ட ராவ் ராகிப். சுபத்ராவைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்ளுகிறார்.

அரசியலில் நுழைந்து, லஞ்ச ஊழலில் உழன்று, 'பெரிய ஆளாகிறார்' ராவ் சாகிப். அம்மா, மனைவியின் அட்வைஸ் காதில் விழவில்லை.

அரசியல் எதிரிகள் சூழ்ச்சியில், உயர்நிலை பறிபோய், சுற்றி நின்று சுகம் அனுபவித்தவர்கள் விலகுகிறார்கள். ஒரு கட்டத்தில் மனைவியும் அவரை விட்டு விலகிப் போகிறாள். தனி மரமாகிறார் ராவ் சாகிப்.

தொகுப்பு : மௌலி

ஒரு ஸ்பூன்

தொழிலில் வெற்றி என்பது வெறித்தனமான உழைப்பால் மட்டும் சாத்தியமானதல்ல. நிறைய புத்திசாலித்தனம், கனிவு, கவனம்... பிறகு கஸ்டமர்கள் மேல் கொஞ்சம் தீவிரமான அக்கறை. இத்தனையும் வேண்டும்.

எஸ்.ஐ.ஆர்.

"என்னிக்கு இந்த கோயமுத்தூர்க்காரன் இங்க ஹோட்டல் திறந்தானோ, அன்னிய லேருந்தே நம்ம பிஸினஸ் படுத்துடுச்சிங்க முதலாளி" என்றான் மேனேஜர்.

முதலாளியாகப்பட்டவர் யோசித்தார். இருபது வருடங்களாகக் கொடைக்கானலில் ஹோட்டல் தொழிலில் கொடிகட்டிப் பறக்கிற வர் அவர். தம் ஹோட்டலை மேலும் விஸ் தரித்து, சென்னை, மதுரை பிற நகரங்களிலும் கிளைகள் தொடங்க முடிவெடுத்து, இங்கே தம் பையனைப் பொறுப்பாக விட்டுவிட்டு, தான் உலா கிளம்பியது எத்தனை பெரிய தவறாகப் போய்விட்டது என்று கலங்கினார்.

தம் ஹோட்டலின் மொட்டை மாடிக்குப் போய் நின்று, பக்கத்தில் எழும்பியிருந்த புதிய பூதத்தைப் பார்த்தார்.

ஸ்ரீ விநாயகா போர்டிங் அண்டு லாட்ஜிங். அமைப்பில் பெரிய பணக்காரத்தனம் ஏது மில்லை. சொல்லப் போனால் தன்னுடையதை விடவும் சிறியதாகத்தான் இருந்தது. அறை களும் கூடக் குறைவாகவே இருக்கும். வருகிற சுற்றுலாப் பயணிகளுக்கு அப்படியென்ன மோகம் அங்கே? மூன்று மாதத்தில் என்ன பெரி தாகச் சாதித்து விட முடியும்?

தானே நேரில் சென்று பார்த்து விட முடிவு செய்தார்.

உள்ளூர் ஆட்கள் கண்டுகொள்ளா திருக்க, முகத்தை மறைத்து ஒரு ஒட்டு தாடி, கறுப்புக் கண்ணாடி. கையில் ஒரு சூட்கேஸ். காரில் பஸ் ஸ்டாண்டுக்குப் போய், இறங்கி, அங்கிருந்து ஓர் ஆட்டோ பிடித்து ஸ்ரீ வினாயகா முன் இறங்கினார்.

வாசலில் தலை பார்த்ததும் ரிஸப்ஷன் இளைஞன் எழுந்து கொண் டான். இரண்டு கரம் கூப்பி, "வாங்க சார்!"

"ரெண்டு நாள் தங்குவேன். சிங்கிள் ரூம்..."

"ஓயெஸ்! ஒரு நிமிஷம்" லெட்ஜரைப் புரட்டி விவரங்கள் எழுதிக் கொண்டான். "ஐநூற்று இருபது ரூபாய் பிளஸ் டாக்ஸ். பரவாயில்லையா?"

"சரி. அட்வான்ஸ்..."

"அவசியமில்லை. நாங்கள் விருந்தாளிகளி டம் அட்வான்ஸ் வாங்குவதில்லை" புன் னகைத்தபடி சொன்னான் இளைஞன். வசீகர மாக இருந்தான்.

புறாக் கூண்டிலிருந்து அவன் சாவியை எடுத்தபோது எங்கிருந்தோ ஒரு ரூம்பாய் ஓடி வந்தான். பெட்டியை வாங்கிக் கொண்டான்.

லிஃப்ட் அருகே நிற்கிற சமயம், "என் பேர் முருகன். என்ன வேணும்னாலும் கூப்பிடுங்க."

ரிஸப்ஷனிஸ்டின் மலர்ச்சியை ரிலே முறையில் வாங்கிக் கொண்டு விட்டானோ?

"முதலில் காப்பி — போனதும். பிறகு பேப்பர்."

"சரி ஐயா..."

அவரை அறையில் விட்டு விட்டுத் திரும் பிய இரண்டாவது நிமிஷம் குட்டிப் பானையில் காப்பி வந்தது. தட்டில் தனியே சர்க்கரை. குடித்து முடித்ததும் ஹிண்டு, எக்ஸ்பிரஸ், தினத்தந்தி, தினமலர்.

பையனுக்கு ஏதாவது டிப்ஸ் தரலாம் என்று அவர் பையில் கைவிட்ட சமயம், "ஸாரி சார்! இங்கே டிப்ஸ் வாங்குவதில்லை. நன்றி!"

போயே விட்டான்!

அவர் குளித்து விட்டு கீழே ரெஸ்டாரண் டுக்கு வந்தார்.

மெனு கார்டைப் பார்த்ததில் லிஸ்ட் மிக நீளமாக இருந்தது.

காலை வேளையில் அவர் இட்லி யைத் தவிர வேறெதையும் தொடு வதில்லை. ஆகவே இட்லி நாலு.

சாப்பிட்டு விட்டு ரிஸப்ஷனுக்கு வந்து கொஞ்சம் நோட்டம் பார்த்தார். அறைப் பையன்கள் சுறுசுறுப்பாக ஓடிக் கொண்டிருந்தனர்.

மறுபுறம் டிராவல்ஸுக்கு ஒரு ஆள் உட் கார்ந்து, பாம்ப்லெட் வினியோகித்துக் கொண் டிருந்தான். கண்ணுக்குத் தெரியாத இடத்தி லிருந்து மேற்கத்திய இசை வந்து கொண் டிருந்தது. அவருக்கு அது பிடிக்காது. லேசாக முகம் சுளித்தார்.

அறைக்குப் போய் சானல் மியூசிக்கை ஆன் செய்தாலும் இதேதான் வரும். போர்.

ஆனால் அவர் அறைக்குப் போன ஐந்தாவது நிமிடம் ஓர் ஆச்சர்யம் நடந்தது. கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்த பையன் கையில் ஒரு டேப்ரிக்கார்டர். பாக்கெட்டில் சில கேஸட்டுகள்.


"மேனேஜர் குடுத்துட்டு வரச் சொன்னார் சார்! கர்னாடிக் மியூஸிக். அப்புறம் கொஞ்சம் சினிமாப் பாடல்கள். உங்களுக்கு எது பிடிக்குமோ..."

அதிர்ச்சியும் வியப்புமாக அவர் இண்டர்காமில் ரிஸப்ஷனிஸ்டைக் கூப்பிட்டு விசாரித்த போது,

"அது பெரிய விஷயமில்லை. சானல் மியூஸிக்கில் வந்த வெஸ்டர்ன் இசை உங்களுக்குப் பிடிக்கவில்லை என்பதை ஒருகணம் உங்கள் முகபாவம் காட்டி விட்டது. வயதானவராக இருக்கிறீர்கள். அதான் ஒருவேளை கர்நாடிக் இசை பிடிக்குமோ என்றுதான்..."

ஒருகணம் – ஒரேகண முக மாறுதலை கவனித்திருக்கிறார்





''டாக்டர்! என் பையன் அடிக்கடி மண்ணை அள்ளி வாயில் போட்டு மெல்ல றான்...!''

''பசங்க அப்படித்தான் பண்ணுவாங்க... கவலைப்படாதீங்க...''

''நான் கவலைப்படவேயில்லை... அவனோட மனைவிதான் அனாவசியத்துக்கு ரொம்ப பயப்படறா!''

– அஜந்தா மஹேந்திரநாத்.

கள்!

அன்று முழுவதும் அவர் அறையை விட்டு நகரவில்லை. மறுநாள் காலை பையன் கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தபோது ஒன்றைக் கவனித்தார்.

காப்பிக் கோப்பையுடன் சாக்கரின் குப்பி!

''இதென்ன?''

''நேற்று வைத்த சர்க்கரைக் கிண்ணத்தை நீங்கள் தொடவேயில்லை. ஷுகர் இருக்கும் என்று நினைத்து, மேனேஜரிடம் சொன்னேன். அவர்தான் இன்று முதல் சாக்கரின் கொண்டு போகச் சொன்னார்.''

நேற்றைப் போல நாலு பேப்பர் வராமல் வெறும் தினத்தந்தி வந்ததையும் கவனித்துக் கேட்டார்.

''நீங்கள் மற்ற எதையும் பிரிக்கவில்லையே!''

உள்ளுக்குள் வியந்து கொண்டபடியே ரெஸ்டாரெண்டுக்குப் போனபோது அடுத்த ஆச்சர்யம் காத்திருந்தது.

''குட்மார்னிங் சார்! நேற்று இங்கே இட்லியை மிக விரும்பிச் சாப்பிட்டீர்கள். இன்றும் அதேவா? அல்லது... மற்ற ஐட்டங்களும் அதே தரமான சுவையுடன் இருக்கும்!''

ஒரு நாளைக்கு சுமார் நூறு பேர் சாப்பிட வருவார்களா? இருநூறு பேர்? எப்படி ஞாபகம் வைத்துக் கொண்டு கேட்கிறான்!

அடுக்கடுக்கான ஆச்சர்யங்களில் அவர் திக்கித் திணறிக் கொண்டிருந்தார்.

அன்று முழுவதும் அந்தப் புதிய ஓட்டல் நிர்வாகத்தினரின் கவனிப்பு மழையில் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டிருந்தபின் தாங்கவே முடியாமல் மாலை ரிஸப்ஷனிஸ்டிடம் கேட்டார் :

''உங்கள் முதலாளியைப் பார்க்க வேண்டும்.''

''ஓ, தாராளமாக. ஆனால் அவர் ஊரில் இல்லை. அவரது மகனைப் பார்க்கிறீர்களா?''

''சரி.''

ரிஸப்ஷனிஸ்ட் அவரை அறைக்குப் போகச் சொன்னான். ''அவரே உங்களை வந்து சந்திப்பார்.''

அறைக்கதவு தட்டப்பட்டது. அவர் வரச் சொன்னபோது ரிஸப்ஷனிஸ்டும் ரூம் பாயும் நின்றிருந்தனர்.

''எங்கே உங்கள் முதலாளியின் மகன்?''

''இதோ, இவர்தான்'' என்று அவன் காட்டியது – ரூம் பாய்!

அவர் அதிர்ந்து போனார்.

''இவனா... ரா...?''

''ஆமாம் சார்! என்ன தப்பு? முதலாளி என்று நாம் ஏஸி அறையில் உட்கார்ந்திருந்தால் என்ன நடக்கிறது என்று எப்படித் தெரியும்? நம் கஸ்டமர்கள்தானே நமக்கு முதலாளி என்று அப்பா சொல்வார். முதலாளி மகனே ரூம்பாயாக சர்வீஸ் செய்வதைப் பார்த்தால் பிற பையன்கள் பணியில் எந்தக் குறையும் வராதல்லவா? பொதுவாக இந்த விஷயத்தை நாங்கள் வெளியே சொல்லுவதில்லை. நீங்கள் விரும்பிக் கேட்டதால்தான்! இதுவும் கஸ்டமர் சர்வீஸில் ஒரு பகுதி அல்லவா? மேலும் நீங்களும் ஒரு ஹோட்டல் முதலாளி!''

அதிர்ச்சி மேல் அதிர்ச்சி! எதிரே பேசிக் கொண்டிருந்த அந்த இருபது வயது ரூம்பாய் அவருக்கு கிருஷ்ணபரமாத்மா போல் தெரிந்தான்!

''நான்... நான்... ஓட்டல் முதலாளி என்று...''

அவர் திணறினார்.

''பக்கத்து வீட்டுக்காரரைத் தெரியாமல் எப்படி சார்? கேவலம், ஒரு தாடிக்கு ஏமாந்து விட்டால் அப்புறம் எப்படி நாங்கள் பிழைக்க முடியும்?''

புன்முறுவலுடன் கேட்டான்.

அவர் கைகூப்பினார்.


''எனக்குப் புரிந்து விட்டது!'' என்றார்.

''என்னது?''

''உங்கள் வெற்றியின் ரகசியம்!'' என்று சொல்லிவிட்டு அவர் பெட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினார்.

வாசல் வரை வந்து விடைகொடுத்த ரிஸப்ஷனிஸ்ட், ''இதுவும் எங்கள் கஸ்டமர் சர்வீஸில் ஒரு பகுதி''என்றான் சிரித்தபடியே.

காத்து நின்ற கடவுள்



வலம்புரி ஜான்

பாபிலோனியா நாட்டில் யோவாக்கிம் என்னும் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சூசன்னா என்கிற பெண்மணியை மணந்தார். சூசன்னா பேரழகி. ஆண்டவருக்கு அஞ்சி நடந்து வந்த அற்புதமான பெண்மணி. சூசன்னாவின் பெற்றோர்களும் நேர்மையானவர்களாக இருந்தார்கள். இவர்கள் தங்கள் மகளை மோசேயின் சட்டத்தின் வழியில் பயிற்றுவித்து வந்தார்கள். யோவாக்கிம் பெரும் செல்வந்தர். அவரது வீட்டுக்கு அருகிலேயே அவருக்கு ஒரு தோட்டம் இருந்தது. யூதர்கள் பலர் இவரிடம் வருவது வழக்கமாக இருந்தது. காரணம் யோவாக்கிம் செல்வாக்குப் படைத்தவராக விளங்கினார்.

அக்காலத்தில் மக்களுக்குள் முதியவர்களான இருவர் நடுவர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்கள் யோவாக்கிம் வீட்டில் வெகுநேரம் இருப்பது வழக்கம். தங்களுக்குள் தாவா உடையவர்கள் இவர்களை அணுகி, தங்களுக்குள் எழுந்த தகராறுகளுக்கு நியாயம் தேடுவார்கள்.

நண்பகல் வேளையில் மக்கள் எல்லோரும் சென்ற பிற்பாடு, சூசன்னா தம் கணவரின் தோட்டத்திற்குச் சென்று உலாவி வருவது வழக்கம். சூசன்னா நாள்தோறும் இவ்வாறு உலவி வருவதைப் பார்த்த முதியவர்களான நியாயாதிபதிகள் இருவரும் அவளை விரும்பினார்கள். ஒருவரும் அறியாமல் சூசன்னாவைத் தங்களது இச்சைக்கு உட்படுத்த நினைத்தார்கள். தங்கள் தங்கள் மனச் சுவர்களில் சூசன்னாவை அலங்கோல ஓவியமாக ஆக்கிப் பார்ப்பதே இவர்களுக்குப் பொழுதுபோக்கு ஆயிற்று.

இருவரும் தங்களது காம நோய் பற்றி ஒருவர் மற்றவரிடம் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. சூசன்னாவை அடைவதற்காகத் தாங்கள் மேற்கொண்ட முயற்சிகளை ஒருவர் மற்றவரிடம் வெளியிடவே வெட்கப்பட்டார்கள். எப்போது நண்பகல் வருமென்று முதியவர்கள் இருவரும் ஆவலோடு காத்திருப்பார்கள்.

ஒருநாள் நண்பகல் உணவு அருந்த நேரம் ஆயிற்று; வீட்டுக்குப் போவோம் என்று அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். அவ்வாறே பிரிந்தும் சென்றார்கள். ஆனால் சாப்பிடுவதற்காகச் சென்ற இரண்டு பேர்களுமே சாப்பிடாமல் திரும்பி அதே இடத்திற்கு வந்தார்கள். இப்போது இருவருமே சாப்பிடாமல் அதே இடத்திற்குத் திரும்பி வந்ததற்கான காரணத்தைத் தெரிவிக்குமாறு ஒருவர் ஒருவரை வற்புறுத்தினார்கள். ஆகவே சூசன்னாவை அடைவதற்காகவே இருவரும் இப்படி அலைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொண்டார்கள். இப்போது இருவருமாக ஒன்று சேர்ந்து சூசன்னாவை அடைவது என்று முடிவெடுத்தனர். இதற்கான தக்க தருணத்தை அவர்கள் எதிர்பார்த்து இருந்தனர்.

ஒருநாள் சூசன்னா வழக்கம் போல இரண்டு பணிப்பெண்களோடு மட்டும் தோட்டத்திற்குள் நுழைந்தாள். வெயில் கடுமையாக இருந்ததால் குளிக்க விரும்பினாள். "நான் குளிப்பதற்கு எண்ணெயும், நறுமணப் பொருட்களும் கொண்டு வாருங்கள்'' என்று சூசன்னா பணிப்பெண்களுக்குக் கட்

டளையிட்டாள். அவர்கள் அப் பொருட்களைக் கொண்டு வருவதற்காக, தோட்டத்தின் கதவுகளைப் பூட்டி விட்டுச் சென்றார்கள்.

முதியோர் இருவரும் உள்ளே ஒளிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பணிப் பெண்களோ, சூசன்னாவோ அறிந்திருக்கவில்லை. பணிப்பெண்களும் இல்லை; தோட்டத்தின் கதவும் தாழிடப்பட்டுவிட்டது என்று அறிந்த நியாயாதிபதிகளான முதியவர்கள் இருவரும் சூசன்னாவின் அருகில்



சென்றார்கள். அவளோ குளிப்பதற்குத் தயாரான நிலையில் அரைகுறை ஆடையிலிருந்தாள்.

அப்போது அந்த முதியவர்கள் இருவரும், ''எத்தனையோ நாட்களாக உன் மீது கொண்ட வேட்கையால் எரிந்து தணிந்து சாம்பலாகி வருகிறோம்; உன்னைக் கெஞ்சி மன்றாடுகிறோம்; எங்களது ஆசைகளுக்கு இணங்கிவிடு; இல்லாவிட்டால் வாலிபன் ஒருவனோடு வாழ்க்கை நடத்தினாய் என்று ஊரைக் கூட்டுவோம்; உரக்க முறையிடுவோம்'' என்றார்கள்.

சூசன்னா முட்செடியில் சிக்கிக் கொண்ட முல்லைப் பூவானாள். ''நான் பெரும் சிக்கலில் மாட்டிக் கொண்டேன்; நான் உங்களுக்கு இணங்கினால் எனக்குக் கிடைப்பது சாவு; இணங்காவிட்டால் நான் உங்களிடமிருந்து தப்ப இயலாது. ஆனால் ஆண்டவர் முன்னிலையில் பாவம் செய்வதைவிட உங்களிடம் மாட்டிக் கொள்ளுவதே மேல்'' என்று சூசன்னா பேசினாள்.

பின்னர் சூசன்னா உரத்த குரலில் கத்தினாள். அப்படியே இரண்டு முதியவர்களும் சூசன்னாவிற்கு எதிராகக் கூக்குரலிட்டார்கள். அவர்களுக்குள் ஒரு நியாயாதிபதி ஓடிச் சென்று தோட்டத்தின் கதவைத் திறந்தார். தோட்டத்தில் கூச்சல் கேட்டதும், என்ன நடந்ததோ என்று அறிந்து கொள்ள சூசன்னாவின் வீட்டுக்காரர் ஓடிவந்தார். முதியோர்கள் தங்கள் கட்டுக் கதைகளை அவிழ்த்தனர். எவருமே அவர்களின் கதைகளை நம்புவதற்குத் தயாராக இல்லை.



மறுநாள் சூசன்னாவின் கணவனான யோவாக்கிம் வீட்டில் மக்கள் திரண்டார்கள். இரண்டு நியாயாதிபதிகளும் சூசன்னாவை அழைத்து வருமாறு ஆணையிட்டார்கள். சூசன்னாவைப் பின்பற்றி அவளது பெற்றோரும், குழந்தைகளும், உறவினர்கள் அனைவரும் வந்தார்கள். முதியவர்கள் சூசன்னா தங்களோடு இணங்காததால் சாவுக்கு அவளைக் கையளிப்பதற்குத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சூசன்னா அழகு தேவதை. தனது முகத்தை மூடுதிரையால் அவர் மறைத்துக் கொண்டு வந்தார். முதியோர் இருவரும் அவளது அழகைக் காண வேண்டுமென்று முகத்திரையை அகற்ற வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அவளோ அழுதுகொண்டே வந்தாள். இறுதியாக முதியவர்கள் இருவரும், ''பணிப்பெண்களை அனுப்பிவிட்டு சூசன்னா, தோட்டத்தின் கதவைத் தாளிட்டாள். பிறகு ஒரு இளம் வாலிபனுக்குத் தனது உடலைத் தின்னக் கொடுத்தாள். இப்படி தவறான நடத்தையிலிருக்கிறாள் என்று கண்டு நாங்கள் அவளைப் பிரிக்கப் போனோம். எங்களால் அவர்கள் இருவரையும் பிரிக்க முடியவில்லை. மோகக் கிறக்கத்தில் அப்படி இணைந்திருந்தார்கள். வாலிபனைப் பிடித்துக் கொள்ளலாம்

''தலைவருக்கு அந்த நாளிதழ் மேலே ரொம்ப கோபம்...''

''ஏன்...?''

''கொள்கைக்காக ஆளும் கட்சிக்கு மாறினேன்'னு சொன்னதை, 'கொள்ளைக்காக ஆளும் கட்சிக்கு மாறினேன்'னு போட்டுட்டாங்களாம்!''

– வலங்கைமான் நூர்தீன்

என்று முயன்றால், அவன் எங்களிடமிருந்து தப்பித்துக் கொண்டான். அந்த இளைஞன் எவன் என்று கேட்டதற்கு இவள் எங்களுக்கு மறுமொழி சொல்ல மறுத்து விட்டாள்'' என்றார்கள்.

அவர்கள் மக்களுக்குள் மூப்பர்களாகவும், நியாயாதிபதிகளாகவும் இருந்ததால் அந்த வயோதிகர்கள் சொன்னவற்றை அனை வருமே நம்பினர். அதன் விளைவாக சூசன்னாவிற்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. நியாயக் கொடிமரத்தை நியாயாதிபதிகளே முறித்துப் போட்டார்கள். சிபிச் சக்கரவர்த்தி புறாக்கறி சாப்பிட்டால் எப்படியோ, அப்படி இருந்தது இந்த நியாயாதிபதிகளின் தீர்ப்பு.

இவ்வாறாக சூசன்னா கொலைத் தீர்ப்பால் இழுத்துக் கொண்டு போகப்பட்ட போது, இறைவன் தானியேல் என்கிற இளைஞனின் மீது பரிசுத்த ஆவியை ஊதினார்.

தானியேல் கூட்டத்திலிருந்து ''சூசன்னாவின் பாவத்தில் எனக்கு சம்பந்தமில்லை'' என்று கத்தினார். பிறகு தேவ ஆவியால் வழி நடத்தப்பட்டவராக, மக்களைப் பார்த்து தானியேல், ''அநியாயக்காரர்களான இந்தப் போலி நியாயாதிபதிகளின் தீர்ப்பிற்கு உட்பட்டு உண்மையான இஸ்ராயேல் மகளைக் கொலைக்களத்திற்குக் கொண்டு போகிறீர்களே'' என்றார்.

சூசன்னா உரத்த குரலில், ''எப்போதும் இருக்கிற இறைவா! மறைவானவற்றை அறிகிற மகத்துவம் உள்ளவராக நீர் இருக்கிறீர். ஆகவே உம்மைப் போற்றுகிறேன். எந்தக் குற்றமும் அறியாத என்னை இந்த வஞ்சகர்கள் தங்கள் ஆசைகளுக்கு இணங்காததால் கொலை செய்யப்படுவதற்குக் கையளித்தார்கள். இது நீதியா? தருமமா?'' என்று மன்றாடினாள். அவளது கன்னங்களில் உப்பு நீர் ஒழுகி ஓடிக் கொண்டிருந்தது.

பிறகு தானியேல் அந்த நியாயாதிபதிகளில் ஒருவரைத் தனியே அழைத்தார். ''வேசித்தனமே உனக்கு வேலையாகப் போயிற்று. நீ நியாயாதிபதியாக இருந்தால் எந்த இஸ்ராயேல் பெண் கற்போடு இருக்க இயலும்? நீ சூசன்னாவையும் அவளோடு சேர்ந்திருந்ததாகச் சொல்லும் இளைஞனையும் எந்த மரத்தடியின் கீழ் பார்த்தாய்?'' என்று கேட்டார். அதற்கு அவர் ''விளாமரத்தடியில்'' என்றார்.

அப்படியே தானியேல் அடுத்த நியாயாதிபதியைக் கூப்பிட்டார். ''நீ இஸ்ராயேல் பெண்களின் கற்பினைத் தொடர்ந்து சூறையாடிக் கொண்டிருக்கிறாய். கீழ்மகனே, மாசற்றவளுக்கு எதிராக தீர்ப்புச் சொன்னவனே! கடவுள் உன்னைத் தண்டிப்பார். நீ சூசன்னாவையும் அந்த இளைஞனையும் எந்த மரத்தடியில் இணைந்திருக்கக் கண்டாய்?'' என்று கேட்டார். அவரோ ''கருவாலி மரத்தடியில்'' என்றார். ஆண்டவராகிய கர்த்தர் அவர்களது போலி முகத்திரையை ஒரே நொடியில் பொசுக்கினார்.

ஆகவே மோசேயின் சட்டப்படி அந்த நியாயாதிபதிகள் இருவரும் அக்கணமே வெட்டி வீசப்பட்டார்கள். இஸ்ராயேல் மக்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றினார்கள். பத்தினிகளின் பதிவிரதமைக்குக் கடவுள் ஒருவரே கண்காணிப்பாளர் என்று அவர்கள் பாடினர். சூசன்னாவிற்கு உதடுகள் பிரிந்தன; சொற்கள் வரவில்லை. அவளது உள்ளம் ஆனந்தத்தால் அழுதது.

(தொடரும்)



''நீங்க புதுசா போன வீட்டுல எல்லா குழாயிலயும் தண்ணி வருதாமே!''
''ஆமாம்.''
''வாடகை எவ்வளவு?''
''அதை கேட்டா கண்ணுல கூடத் தண்ணி வரும்!''
— ராதாவாசுதேவன்

WE ACCEPT DEPOSITS

முத்துவேல்'ஸ்

கோல்டன் ஜூபிளி
பெனிபிட் பண்ட் லிமிடெட்

(Incorporated under Companies Act 1956)

Regd. No. 181 - 7336

அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்

– குறள் 754.

நல்ல வழியில், எவருக்கும் தீமை செய்யாமல் தேடிய செல்வம், அறத்தையும் தரும், நல் இன்பத்தையும் கொடுக்கும்.

அப்படி தேடிய செல்வம் மென் மேலும் பெருக நம்பிக்கையான நிறுவனங்களை தேர்ந்தெடுத்து சேமிப்பதே சிறந்த வழி!

வர்த்தகப் பரிவர்த்தனை உறுப்பினர்களுடன் மட்டுமே

Launched by: MUTHUVEL INDUSTRIES
Pioneers in file making since 1947
MUTHUVEL'S GOLDEN JUBILEE
BENEFIT FUND LIMITED
Regd. Office: 20-A, Race Course Road, DINDIGUL - 624005
Phone : (O) 26850, 27637 (R) 26858, 27011.

மணமக்கள் தேவை
கம்ப்யூட்டர் ஜாதகம்

அனைத்து சமூகத்திலும், ஆயிரக் கணக்கான வரன்கள் பெற உடன் பதிவு செய்ய தொடர்பு கொள்ளவும்.

கம்ப்யூட்டர் ஜாதகங்கள் நொடிப் பொழுதில்

ஆங்கிலம், தமிழ்	:	ரூ. 50/-
எதிர்கால கணிப்புடன்	:	ரூ. 150/-
கல்யாண பொருத்தம்	:	ரூ. 50/-

CONSULT DIVINE ASTROLOGER
THETIYUR V. MAHADEVAN
WITH PRIOR APPOINTMENT.

ASTROLOGY SOFTWARE FOR SALE.

ஸ்வயம்வராலயா

(GOVT REGD)

18, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம்,
சென்னை - 33. போன் : 4846427
மைலாப்பூர் போன் : 4984278
பெங்களூர் போன் : 3340146

ALL POOJA ENTHRA/RAKSHA
AVAILABLE RATES ON REQUEST

கதம்ப மாளிகை
ரெடிமேட்

36. பாண்டிபஜார், தி.நகர், சென்னை - 17.




சிறுவர், சிறுமிகளுக்கும் பெண்களுக்கும்!

- ★ லேட்டஸ்ட் டிசைன்கள் !
- ★ சில்லரையில் பம்பாய் ஹோல்சேல் விலை !
- ★ வகைவகையான வண்ணக்களஞ்சியம் !
- ★ வாங்கிச் சென்றால் எண்ணம் சிலிர்க்கும் !
- ★ தேர்ந்தெடுக்க ஆயிரத்திற்கும் மேல் !
- ★ அணிந்தால், கண்டு மகிழ்வோர் ஆயிரத்திற்கும் மேல் !



சுடிதார்	மிடி	டாப்ஸ்	பாபாசூட்
பேன்சிகவுன்	நைட்டீஸ்	ஜீன்ஸ்	சாட்ஸ்

அணிந்து மகிழ ஆயிரத்திற்கும் மேல்!





1997 ஆகஸ்ட் 3
ஈசுவர ஆடி 18
மலர் : 56
இதழ் : 1

கல்கி



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.


குழப்ப முன்னணி!

"பத்திரிகைகளெல்லாம் தலைக்குத் தலை முரண்பாடாக எழுதிக் கொண்டிருக்கின்றன. ஐக்கிய முன்னணியில் தி.மு.க. நிலை குறித்து தெளிவுபடுத்துகிறேன்..." என்று ஆரம்பித்தார் கருணாநிதி. சென்ற வாரம் முழுதும் குட்டையைக் குழப்பி, பத்திரிகைகளையும் பொது மக்களையும் சிணடைப் பிய்த்துக் கொள்ள வைத்தவர், ராஷ்ட்ரிய ஜனதா தளம் குறித்து தி.மு.க.வின் நிலை என்ன என்பதை விளக்கப் போக, முந்தைய குழப்ப நிலையே தேவலாம் என்று ஆக்கிவிட்டது அந்த விளக்கம்!

ராஷ்ட்ரிய ஜனதா தளத்தின் ஆதரவை ஐக்கிய முன்னணி அரசு ஏற்க வேண்டும் என்பது தமிழக முதல்வரின் நிலை. 'காங்கிரஸ் போல் வெளியிலிருந்தபடி ஆதரவு அளிக்கட்டும்' என்றார். ஆனால், அக்கட்சியைச் சேர்ந்த மூன்று மத்திய அமைச்சர்கள் ராஜினாமா செய்ய அவசியம் இல்லை என்றும் கூறினார்!

வெளியிலிருந்து ஆதரவு தெரிவிக்கும் ஒரு கட்சியின் எம்.பிக்கள் எப்படி அமைச்சரவையில் இடம்பெற முடியும்?!

'பீஹார் முதல்வர் பேரிலான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் வரை இந்த நிலை தொடரட்டும்' என்றார். ஆனால், 'லல்லு பிரசாத் யாதவ் தார்மீக அடிப்படையில் ராஜினாமா செய்வதும் செய்யாததும் அவரது சொந்தப் பிரச்னை' என்றார், அதே மூச்சில்! கூடவே, 'அவர் ராஜினாமா செய்து முன்னுதாரணமாகத் திகழட்டும்' என்றும் சொன்னார்!



ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் மற்றொரு கட்சியான சி.பி.ஐ. (எம்) நேர்மாறான கருத்து கொண்டிருந்தது : 'லல்லு ராஜினாமா செய்ய வேண்டும்; ஊழல் அஸ்திவாரத்தில் பிறந்த ஆர்.ஜே.டி.யின் ஆதரவு ஐ.மு.வுக்கு வேண்டாம்' என்பது அவர்கள் நிலை.


'ஊழலை விரட்டுவதிலும் ஜாதியை ஒழிப்பதிலும் ஐக்கிய முன்னணியின் அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமை காட்டும் - இதில் தி.மு.க. விதிவிலக்கல்ல...' என்று உடனே கருணாநிதி சுருக்கங்களை நீவப் பார்த்தார்!

இப்படி பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழன் என்கிற இரட்டை நிலையில் தி.மு.க. தொடர்ந்ததனால் ஐக்கிய முன்னணியின் ஐக்கியம் சோதனைக்குள்ளாயிற்று என்பது ஒருபுறமிருக்க, தி.மு.க.வின் ஆர்.ஜே.டி. ஆதரவு நிலை எத்தனை அநியாயமானது!

தமிழ்நாட்டில், ஊழலின் மொத்த உருவான ஜெயலலிதா தலைமைதாங்கும் அ.தி.மு.க.வுடன் கூட்டு வைத்துக் கொள்வதை விரும்பாமல், தார்மிகக் கோபத்தில் வெளியேறித்தான் மூப்பனாரும் பிறரும் த.மா.காவை ஆரம்பித்தார்கள். கருணாநிதியும் அவர்களைப் பாராட்டி, தேர்தல் உடன்படிக்கை செய்து கொண்டார். அந்த அரசியல் சாணக்கியத்தில் நேர்மை இருந்தது; அது நல்ல பலனையும் தந்தது.

ஆனால் பீஹாரில், லல்லு பிரசாத் யாதவ் அதையே 'ரிவர்ஸ் கியரில்' நிறைவேற்றியிருக்கிறார். ஊழல் குற்றச்சாட்டு இருந்தால் என்ன...? என் வலிமையில் தனி கட்சி ஆரம்பிப்பேன் என்று முனைந்திருக்கிறார். இப்படி ஊழலுக்கு மட்டுமின்றி, அடாவடித்தனத்துக்கும் உருவமாய் இருக்கிற கட்சியின் ஆதரவை ஏற்க, தமிழக முதல்வர் பலமாக சிபாரிசு செய்தது அரசியல் சாணக்கியமும் அல்ல; நேர்மையான, பலன் தரும் நடவடிக்கையும் அல்ல!

பீஹார் சட்டமன்றத்தில் லல்லு நம்பிக்கை வாக்கெடுப்பு கோரியபோது, காங்கிரஸ் கட்சி வெளிநடப்புச் செய்து அவருக்குத் தன் மறைமுக ஆதரவைக் காட்டிக் கொண்டது. 'நாங்கள்



எப்படி வாக்களித்திருந்தாலும் லல்லு பிரசாத் யாதவ் ஜெயித்திருப்பார்; அதனால் நாங்கள் வெளிநடப்புச் செய்ததில் ஏதும் தவறில்லை' என்று கேசரி கூறுகிறார்! கண்டிக்க வேண்டிய குற்றத்தைக் கண்டிக்காமல் இருப்பதே குற்றத்துக்குத் துணைபோவதாகத்தான் ஆகும் என்பதை மறந்து, தமது இழிசெயலை நியாயப்படுத்துகிறார்.

இதே போல், கருணாநிதியும், 'ஐக்கிய முன்னணி ஆட்சியில் நீடிக்க வேண்டும்; நாட்டில் ஸ்திரத்தன்மை மிக்க அரசு வேண்டும். அதனால் ஆர்.ஜே.டியுடன் சுமுகமாய் இருப்பது நல்லது' என விளக்கம் தரலாம். ஆனால், கேசரியின் 'நியாயப்படுத்துதலை'ப் போல்தான் இந்த விளக்கமும் வலுவின்றி பிசுபிசுத்துப் போகும்.

கருணாநிதியின் சமரச திட்டம் (compromise formula) ஐக்கிய முன்னணி அங்கத்தினர்கள் ஏற்றுக் கொள்ள முடியாததாக இருந்தது! நான் சொல்வதைக் கேட்காவிட்டால் தி.மு.க. அமைச்சர்கள் ராஜினாமா செய்வார்கள் என்று கருணாநிதி பூச்சாண்டி காட்டியதையும் இப்போது மாற்றிக் கொண்டுவிட்டார்.

ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள், ஆர்.ஜே.டியின் ஆதரவை ஏற்பதில்லை என்று ஏகமனதாக முடிவெடுத்துவிட்டனர். குழப்ப முன்னணி தெளிவடைந்து சரியான முடிவெடுத்திருப்பதை வரவேற்போம்.

'லல்லு பிரசாத் யாதவ்வின் ராஜினாமாவை எதிர்பார்த்தோம்... ஆனால் அவர் தம் மனைவியை முதல்வராக்குவார் என எதிர்பார்க்கவில்லை...' என அதிர்ந்துபோயிருக்கின்றனர் ஐ.மு. அங்கத்தினர்கள்.

ஜனநாயகத்தையும் அரசியல் நிர்ணயச் சட்டத்தையும் கேலிக்கூத்தாக்கும் லல்லுவின் இந்த நடவடிக்கையில் நாடே அதிர்ந்து போயிருக்கிறது. பிரதமரும் புதிய குடியரசுத் தலைவரும் இணைந்து, நாடு இழந்துள்ள கௌரவத்தை மீட்டுத்தர வேண்டும்.



'டிடித்தனத்தை'த் தவிர்ப்பார்களா?

●● பெப்ஸி உங்கள் சாய்ஸுக்குப் பொன் விழாவோ, வெள்ளி விழாவோ, வேறென்னவோ. நிறைய நட்சத்திரங்களைக் கூட்டி வைத்துக் கொண்டு, டெலிபோனர்களை அவர்களுடன் பேச விட்டுத் தான் ஒதுங்கிக் கொள்கிறார் உமா.

விவேக்குடன் பேசிய ஓர் அன்பர் : "ரீஸன்டா உங்க 'சக்தி' படம் பார்த்தேங்க. நல்லா இருந்திச்சி."

விவேக் : நான் அதுல நடிக்கலீங்களே. நீங்க பேசறது விவேக் கூட!

அன்பர் : சாரி. நான் வினோத்துனு நினைச்சேன்.

விவேக் : அதுவும் தப்பு. சக்தில நடிச்சவர் வினோத் இல்லை. வினீத்.

உமா : ஹி... ஹி...

உமா தன் கொஞ்சல் பாஷையைக் கொஞ்சம் விடுத்து, நடிகர்களின் பெயர்களைத் தெளிவாக உச்சரித்தால் ரசிகர்களும் நடிகர்களும் இப்படி த. சங்கடப்படத் தேவையிருக்காது.

●● இடரென்று தூர்தர்ஷனில் வியாழன் மாலை கிருபானந்தவாரியாரின் சொற்பொழிவு ஒன்றைக் கொஞ்ச நேரம் காண்பித்துப் பரவசப்படுத்தினார்கள். சுவாமிகளின் கடைசி நாட்களில் எடுக்கப்பட்ட பேச்சு போலிருக்கிறது. தள்ளாமை, வாய்க் குழறலையும் மீறி என்ன ஒரு அர்த்தபுஷ்டி, சென்ஸ் ஆஃப் ஹ்யூமர்! நினைத்து நினைத்து ரசிக்கும் படியான அப்படியொரு பேச்சு வேறு யாரிடமும் பிறகு நமக்குக் கிடைக்கவில்லை. இழப்பை நினைத்துக் கொஞ்சம் வருத்தம் வந்தது.

●● விஜய் டீ.வி.யில், இப்போது வருகிற புதுப் பாடல்களெல்லாம் எந்தெந்தப் பழைய பாடல்களிலிருந்து காப்பியடிக்கப்பட்டவை என்று தேடிப் பிராய்ந்து தரும் உத்தமமான நிகழ்ச்சி ஒன்று போடுகிறார்கள்.

பாட்ஷாவில் 'ஆட்டோக்காரன், ஆட்டோக்காரனி'ல் இரண்டாவது பேராவிலிருந்து (சங்கீத பாஷையில் சரணம்) வருகிற ட்யூன் பழைய நாகேஷ் பாட்டு ஒன்றிலிருந்து 'கட'ப்பட்டதை ஆதாரத்துடன் போட்டுக் காட்டினார்கள். ஜெயலலிதா தங்கையாக நடிக்க, நாகேஷ், 'தங்கச்சிக்கு அதைச் செய்வேன், இதைச் செய்வேன்' என்று பட்டியலிடுகிற அதே ட்யூன்!

நிகழ்ச்சி முடிவில் இதே போல காப்பிப் பாடல்களைக் கண்டுபிடிக்கிற போட்டி, பரிசு வேறு உண்டு! வெகு சுவாரஸ்யமாக இருக்கிறது.

●● டாப் - ஃபைவ், சிக்ஸ், டென் நிகழ்ச்சிகள் சினிமாப் பாடல்களை ஏகபோகமாகக் குத்தகை எடுத்துக் கொண்டு போரடிக்க, டிடியில் ஒரு வித்தியாசம். கர்நாடக இசைப் பாடல்களில் சூப்பர் ஹிட் போட்டி! கதிரி கோபால்நாத், எஸ். காயத்ரி, நித்யஸ்ரீ என்று பல கலைஞர்கள் இசை மழை பொழிகிறார்கள். விஷுவலுக்காக அவர்களை நிற்க வைத்து, நடக்க வைத்து, கடலோரம், நதியோரம் உலவவிட்டுப் படம்பிடித்திருப்பதெல்லாம் நன்றாகவே இருக்கிறது. ஆனால் நடுநடுவே அமெச்சூர் டான்ஸர்களை பார்க்கில் பரதநாட்டியம் ஆடவைத்து பாடல் வரிகளுக்கு அபிநயம் சேர்ப்பதுதான் இடிக்கிறது. 'டிடித்தனம்' தலைகாட்டுவது அங்கே தான். தவிர்த்தால் சந்தோஷம்.

●● 'சன்'னில் சிவாஜி வாரம், நகைச்சுவை வாரம், குடும்ப வாரம் என்று, திரைப்படங்களைப் போடுவதில் அக்கறை தெரிகிறது. சபாஷ்.

ஆகஸ்ட் மாதம் சுதந்தரப் பொன்விழா. தேசபக்தி - தேசபக்தர்கள் படங்களைப் போடலாமே!

\- 'டிஷ்'



கல்கி கன்ஸல்டன்ஸி

விஷ வட்டம்!

பணப்புழக்கம் அதிகமாகி, அதற்கேற்ப உற்பத்திப் பெருக்கம் நிகழாவிட்டால், விலை வாசி மளமளவென்று உயரும் என்பது பொரு ளாதாரத்தின் பாலபாடம். மாறாக, உற்பத்தி அதிகமாகி மக்கள் கையிலுள்ள பணத்தின் அளவு நிலையாக இருக்குமாயின், விலைவாசி குறையும்.

'விலைவாசியாவது, குறைவதாவது!' என்று நீங்கள் அலுத்துக் கொள்வது புரிகிறது. அலுப் போடு அதிர்ச்சியும் பயமும் சேர்ந்து கொள் கிற மாதிரிதான் அமைந்திருக்கிறது ஐந்தாவது சம்பளக் கமிஷனின் சிபாரிசுகள். அந்த சிபாரி சுகளின் நோக்கம் வேண்டுமானால் சரியாக இருக்கலாம். ஆனால் அவற்றை அரசு நடை முறையாக்கும்போது ஏற்படப்போகும் விளை வுகளை 'நடுத்தர வர்க்க இந்தியன் எப்படித் தாங்கப் போகிறான்?' என்கிற அச்சமே ஏற்படு கிறது.

ஐந்தாவது சம்பளக் கமிஷனின் சிபாரிசு க்களைச் செயல்படுத்த, உடனடியாகப் பதினோ ராயிரம் கோடி ரூபாய் தேவைப்படும். தொடர்ந்து அதே சிபாரிசுகள்படி அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கவோ, ஆண்டுதோறும் ஒன்பதாயிரம் கோடி ரூபாய் கூடுதலாக செலவாகும்!

இது மத்திய அரசு ஊழியர் களுக்கான செலவுதான்.

மாநில அரசு ஊழியர்களும், இதே போன்ற சம்பள உயர் வுக்குக் காத்திருக்கிறார்கள். தமிழ் நாடு உள்பட ஒரு சில மாநில அரசுகள் சம்பளக் கமிஷன் சிபாரிசுகளை அமுல்படுத் துவதாக ஏற்கெனவே அறிவித்துவிட்டன. மத்திய அரசு ஊழியர்களைப் போன்று இரண்டு மடங்குக்கும் அதிகமான பேர் மாநில அரசாங்கங்களில் ஊழியர்களாய் இருக் கிறார்கள். மாநில அரசுகளின் ஊழியர்களுக் கும் மத்திய அரசு ஊழியர்களைப் போலவே சம்பள உயர்வு தரும் பட்சத்தில் மேலும் 22,000 கோடி ரூபாய் புழக்கத்துக்கு வந்து விடும்.

மத்திய அரசு ஊழியர்களுக்கான
11,000 கோடி
+ மாநில அரசு ஊழியர்களுக்கான
22,000 கோடி

= மொத்த கூடுதல் செலவு : 33,000 கோடி

இது போதாதென்று உள்ளாட்சி அமைப்பு ஊழியர்கள், பொதுத்துறை நிறுவன ஊழியர் கள், வங்கி ஊழியர்கள் போன்றோரும் சம்பள உயர்வை எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறார்கள்.

ஆகவே மத்திய, மாநில அரசுகள், உள் ளாட்சி அமைப்புகள், இதர பொதுத் துறை அமைப்புகள் எல்லாமாகச் சேர்ந்து கொடுக்கப் போகும் புதிய சம்பளத்தால், கூடுதலாக சுமார் 50,000 கோடி ரூபாய் புழக்கத்துக்கு வரும் என்று எதிர்பார்க்கலாம். இந்த 50,000 கோடிக்கு ஏற்ப உற்பத்தி பெருகப் போகிறதா? என்றால்.... இல்லை; இல்லை; இல்லவே இல்லை! என்பதுதான் பதில்.

இந்தச் சூழ்நிலையில்தான் 'இந்திய அர சாங்கம், விலைவாசி உயர்வை ஐந்து சத விகிதத்தில் கட்டுப்படுத்தி வைத்துள்ளோம்' என்று பெருமையடித்துக் கொள்கிறது. உண்மையில் இது 8 அல்லது 9 சதவிகிதம் இருக்கும்! சம்பளக் கமிஷன் சிபாரிசுகள்படி ஊதியம் வழங்கப்பட ஆரம்பித்ததுமே பணப்புழக்கம் அதிகரிக்க, விலைவாசி உயர்வு இரட்டை இலக்க எண்ணைத் தொட்டுவிடும்!

இதற்காக நாம் அரசு ஊழியர்களைக் குறை கூற முடியாது. விலைவாசி பளுவைத் தாங்க முடியாமல்தானே அவர்கள் கூடுதல் சம்பளம் கேட்கிறார்கள்!

ஆனால், பணப்புழக்கம் அதிகமாகப் போவதால் அவர்கள் எதிர்பார்க்கிற பலன் இந்த ஊதிய உயர்வினால் கிடைக்காது! அரசு ஊழியர்கள்கூட ஒருவாறு சமாளித்து விடு வார்கள். அமைப்புச் சாராத தினக்கூலிக்காரர் களும் ஏழைகளும்தான் மிக அதிகமாக பாதிக்கப்படுவார்கள்.

விலைவாசி உயர்வு - அதனால் கூடுதல் சம்பளம் - அதனால் மீண்டும் விலைவாசி உயர்வு .... என இந்த விஷ வட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

இதற்கிடையே இன்னொரு கவலை தரும் செய்தியும் வெளியாகியிருக்கிறது. நமது ஏற்று மதி மதிப்பு கடந்த வருடம் 33 பில்லியன் டாலர். இந்த ஆண்டு அதில் இருபது சத விகிதம் வளர்ச்சி இருக்கும் என்று எதிர் பார்த்தோம். ஆனால், நேர்மாறாக, சென்ற ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு ஏற்றுமதி குறைந்து வருகிறது...! நம் பொருளாதாரம் என்றுதான் நிமிருமோ...?

— வி. கோபாலன்

"சென்னை ரொம்பவே பெட்டர்!"



16 ஜூலை, புதன்

காவல்துறை உயரதிகாரிகளுடனான கூட்டம் நடந்தது. முக்கியப் பிரச்னையாய் விவாதிக்கப்பட்டது, நகரில் திருடுபோகும் இரண்டு சக்கர வாகனங்கள், ஆட்டோ மற்றும் கார்கள் பற்றிய விஷயம்.. அண்ணா நகர் மற்றும் திருவல்லிக்கேணி பகுதிகளில், பல வாகன திருட்டுகள் துப்புத் துலக்காமல் இருப்பதை அறிந்து, உடனடி நடவடிக்கைக்கு உத்தரவிட்டேன். வாகனங்களின் சாவியை அதிலேயே விட்டுவிட்டுப் போவதால் திருட்டு நடப்பது அதிகரித்து வருகிறது. மக்களை எச்சரிக்க முடிவு எடுத்தேன். திருடர்கள் இரு சக்கர வாகனங்களின் எஞ்சின் எண், சேஸ் எண் ஆகியவற்றை ஆஸிட் ஊற்றி அழித்து விடுவதால், திருட்டுப் போனவை போலீசால் மீட்கப்பட்டாலும், உரியவரிடம் சேர்ப்பதில் சிக்கல் ஏற்படுவது என் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. வாகன உரிமையாளர்கள், வண்டி எண், எஞ்சின் எண் போன்றவற்றையோ அல்லது பிரத்யேக ரகசியக் குறியையோ வேறு மறைவான இடத்தில் வாகனத்தில் குறிப்பிட்டால், மீட்கப்பட்ட வாகனங்களை, உரியவரிடம் ஒப்படைப்பது சுலபமாகும். இதைப் பொது மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது அவசியம் என அறிவுறுத்தினேன். மாலையில் ஓய்வு பெற்ற டி.ஐ.ஜி குருவய்யா வீட்டுத் திருமண வரவேற்பில், ஓய்வு பெற்ற என் சீனியர்களைச் சந்தித்துப் பேசினேன்.

17 ஜூலை, வியாழன்

துணை கமிஷனர்கள், இணை கமிஷனர்கள் அனைவரும் கலந்து கொள்ள, வாராந்திர பத்திரிகையாளர் கூட்டம். அண்ணா சாலையில், நாலு வழிப் பாதையில் இரண்டு சக்கர வாகன ஓட்டிகள் நலன் கருதி ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றம் குறித்து, திருப்தி தெரிவித்தார்கள்.

வெளியூர் செல்லும் எக்ஸ்பிரஸ் மற்றும் இதர பஸ்களை அடையாறு, பீச்ரோடு வழியே மாற்றி

போலீஸ் கமிஷனர் வி.கே. ராஜகோபாலன் டைரியிலிருந்து...

விட்டதால் அடையாறு முதல் சாந்தோம் வரை சாலையில் போக்குவரத்து நெரிசல் மிக அதிகமாகிவிட்டதை நிருபர்கள் சுட்டிக் காட்டினார்கள். இது பற்றி போக்குவரத்துத்துறை உயரதிகாரிகளுடன் பேசுவதாய்க் கூறினேன்.

'விஞ்ஞான பூர்வமான புலனாய்வு' பற்றிய போட்டியில் சென்னை மாநகர போலீசுக்கு ஏழு தங்கப்பதக்கம், ஏழு வெள்ளி, ஆறு வெண்கலம்! இன்று மாலை பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டேன்.

18 ஜூலை, வெள்ளி

ஆறுமாதமாக காலியாயிருந்த துணை எக்ஸிகியூடிவ் இஞ்சினியர் (பொ.ப.துறை) பதவிக்கு இன்று சண்முகம் என்ற அதிகாரி பொறுப்பேற்றார். அவருடன் நகரின் பல்வேறு காவலர் குடியிருப்புக்களுக்கும் சென்றேன். அங்கு கட்டடங்களில் செய்யப்பட வேண்டிய பல்வேறு ரிப்பேர்களையும் உடனடியாய் நிறைவேற்றித் தரச் சொன்னேன்.

மாலையில் மிலாது நபி ஊர்வலம். டென்ஷனான நிமிடங்கள். அசம்பாவிதம் ஏதுமின்றி, அமைதியாய் நடந்து முடிந்ததில் நிம்மதி!

19 ஜூலை, சனி

முந்நாள் பஞ்சாப் காவல்துறை தலைவர் ரொபைரோ என்னை வந்து சந்தித்தார். ஆடியோ பைரஸியை ஒடுக்க நிறுவப்பட்டுள்ள புதிய அமைப்புக்கு அவர்தான் ஆலோசகர். சென்னையில் சில ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரிகளை அப்பணியில் ஈடுபடுத்துவது குறித்து என்னைக் கலந்தாலோசித்தார்.

மாலை, மயிலை மாதவ பெருமாள் கோவிலுக்குச் சென்றேன். தரிசனம் + டியூட்டி. ஆம்! அந்தக் கோவிலில் நடந்த திருட்டில் துப்புத் துலக்கி, காணாமல் போன கோவில் சொத்துக்களை மீட்டுத் தந்த போலீஸ் குழுக்கு, கோவில் சார்பில் நினைவுப் பரிசு வழங்கிப் பாராட்டினேன்!

20 ஜூலை, ஞாயிறு

ஓய்வு நாள். ஆனால் எனக்கு இல்லை. பத்து மணிக்கு அலுவலகம் வந்து, என் கையெழுத்துக்காகக் காத்திருந்த பைல்களைப் பார்த்தேன். மதிய உணவுக்கு வீட்டுக்குப் போனேன்.

மாலையில், ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள என் மகள் வீட்டுக்குப் போனேன். குழந்தைகளுடன் கொஞ்ச நேரம் சந்தோஷமாய்க் கழித்தேன்.

21 ஜூலை, திங்கள்

புதிய ஹூண்டாய் கார் கம்பெனியின் நிர்வாக இயக்குநர்களும், சில உயர் அதிகாரிகளும் என்னை வந்து சந்தித்தார்கள். சென்னை நகரின் சீரான போக்குவரத்துக்கும், மேம்பாட்டுக்கும் தாங்கள் பங்களிக்க விருப்பம் தெரிவித்தனர்.

பீகார், ஹிமாசல பிரதேசம், ம.பி., தவிர பார்டர் செக்யூரிட்டி ஃபோர்ஸ் போன்ற அமைப்புகளைச் சேர்ந்த போலீஸ் அதிகாரிகள் குழு ஒன்று, ஹைதராபாத்தில் பயிற்சி முடித்துவிட்டு, சென்னை வந்தார்கள். சென்னை நகரின் காவல்துறை சம்பந்தப்பட்ட பல விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். மற்ற நகரங்களுடன் ஒப்பிடுகையில் சென்னை ரொம்பவே பெட்டர் என்று கருத்து தெரிவித்தனர்!

22 ஜூலை, செவ்வாய்

விரைவு மற்றும் வெளியூர் பஸ்களை, அடையாறு, பீச்ரோடு வழியே மாற்றி விட்டதால் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பது எப்படி என்று போக்குவரத்துத்துறை, கழக உயரதிகாரிகளுடன் கலந்தாலோசித்தேன். சென்னையிலிருந்து புறப்படும் பஸ்களை அடையாறு வழியிலும், சென்னைக்கு வரும் பஸ்களை அண்ணா சாலை வழியிலும் வரும்படி செய்ய முடிவு செய்யப்பட்டது.

23 ஜூலை, புதன்

வரும் 31ம் தேதி, பணியிலிருந்து ஓய்வுபெறும் திரு. தேவாரம் அவர்களை மரியாதை நிமித்தம் சென்று பார்த்தேன். அவருக்குப் பிரிவுபசார அணி வகுப்பு வழங்குவது பற்றிப் பேசினேன்.

தலைமைச் செயலகத்தில் மீட்டிங். விரைவில், அயல்நாட்டுப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொள்ளும் தொழில் வளர்ச்சிக் கருத்தரங்கம் ஒன்று நடக்க உள்ளது. அதற்குச் செய்யப்பட வேண்டிய பணிகள் குறித்து விவாதித்தோம்.

தொகுப்பு: **கௌதம்**
படம்: **ஸ்ரீஹரி**


●● கல்கியில் தொடராக வெளிவந்த ஸ்ரீஹரியின் "வீட்டு வைத்தியம்" புத்தக உருவில் யாராவது வைத்திருந்தால், பணம் கொடுத்து பெற்றுக் கொள்கிறேன்.

- ராஜலக்ஷ்மி ராமமூர்த்தி,
2, நாலாவது மெயின் சாலை,
கஸ்தூரிபா நகர்,
சென்னை - 20.

●● ரோஸ் மில்க், ரோஸ் எசென்ஸ், செய்முறை, விற்பனை தகவல்கள் குறைந்த கட்டணத்தில் பெண்களுக்கு சொல்லித்தரப்படும்.

- கே. காஞ்சனா,
32, தெ.1, பிள்ளையார் கோவில் தெரு,
சேலம் - 1.

பாலம்



●● முந்நாள் மத்திய அமைச்சர் எம்.சி. சக்லா எழுதிய "Red Roses in December" மலிவு விலைப் புத்தகம் இருந்தால் பாதி விலையில் வாங்கிக் கொள்கிறேன்.

- பி. ஏ. வதூத்,
16, தாவுது ராவுத்தர் வீதி,
மேட்டுப்பாளையம் - 641 301.

●● லாபகரமான சிறுதொழில், குடிசைத் தொழில் அல்லது வியாபாரம், அரசின் கடனுதவி மற்றும் மானியம் பெற்று ஆரம்பிக்க எவ்வித கட்டணமும் இல்லாமல் ஆலோசனைகள் வழங்கப்படும்.

- எம். ஞானசேகர்,
B-9, கும்பத் காம்ப்ளக்ஸ்,
699, பூந்தமல்லி சாலை,
அமைந்தகரை, சென்னை - 29.

●● இந்துமதியை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த "அஸ்வினி" பத்திரிகையின் பிரதிகள் தேவைப்படுகின்றன.

- மு. முருகேசன்,
28-B, லெட்சுமண தீர்த்தம் தெரு,
ராமேஸ்வரம் - 623 526.

●● வீட்டிலேயே குடவில்லைகள், பால் பாயிண்ட் ரீஃபில், பிளாஸ்டிக் குடம், டிடெர்ஜெண்ட் சோப்பு தயாரிக்க ஆலோசனைகளுக்கு அணுகவும்.

- ஜி.ஆர். மோகன்,
25, வள்ளுவர் தெரு,
வெங்கமேடு, கரூர் - 639 006.

●● Langford எழுதிய "Basic Photography"; "Advanced Photography" ஆகிய புத்தகங்கள் நல்ல நிலையில் உள்ளன. தேவைப்படுவோர் குறைந்த விலையில் பெற அணுகவும்.

- ஜி.என். ராமபத்திரன்,
ஃப்ளாட் 3, ராம்ஸ் பில்டிங்,
120 ஏ, அபிராமபுரம் 4-வது தெரு,
சென்னை - 18.

●● ஆட்டோ எலெக்டிரிகல் பயிற்சி பெற ஆர்வம். பயிற்சி அளிக்கக்கூடியவர்கள் விவரம் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

- பி. சூரியமூர்த்தி,
3/96, இரசிலடி தெரு,
ஆக்கூர் (அ) - 609 301.

●● இ.ச. ராஜு எழுதிய "வேத வாழ்வினைக் கைப்பிடிப்போம்" என்ற பாரதி பதிப்பு நூல் வைத்திருப்பவர்கள் விலைக்கோ, படிக்கவோ கொடுத்தால் நன்றி.

- வித்யா தேவராஜன்,
ஜெ.எச். - 2, ஜவஹர் வீதி,
வட்டம் - 17,
நெய்வேலி - 607 801.

●● சிறிது மனவளர்ச்சி குன்றிய என் மகனுக்குப் பொது தொலைபேசி (PCO) கிடைத்திருக்கிறது. தெருவோரத்தில் இடம்தர மாநகராட்சி மறுக்கிறது. ஆலோசனை கூற தொடர்பு கொள்ளவும். நன்றி.

- என்.ஜி. பாலசுப்பிரமணியன்,
48, ஈஸ்வரன் கோயில் தெரு,
சென்னை - 33.

●● ஸ்ரீ ஆதிசங்கரரின் வாழ்க்கை வரலாறு நூல் யாரிடமாவது இருந்தால் கொடுத்து உதவக் கோருகிறேன்.

- எஸ். என். ராகவன்,
18, டோணப்பா சாலை,
பெல்லாரி- 583 101.

●● பாண்டிச்சேரி திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தில் PGDBA கோர்ஸ் பயில்கிறேன். Marketing Strategy பாடம் தேவை. விலை, விவரம் கூறி எழுதவும்.

- த. பிரபாகர்,
5, 11 வது தெரு, சாந்தி நகர்,
ஆதம்பாக்கம், சென்னை - 600 088.

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பு ஏற்க இயலாது. - ஆர்.)

சரித்திரத்தைக் கொஞ்சம்
திரும்பிப் பார்ப்போம்...
சமகாலத்தைச் சற்று
நிமிர்ந்து பார்ப்போம்!
எதிர்காலத்தையும் பற்றி
எண்ணிப் பார்ப்போம்!

கல்கி சுதந்தரப் பொன்விழா மலர்

- கதைகள்
- கட்டுரைகள்
- பேட்டிகள்
- கவிதைகள்
- அரிய புகைப்படங்கள்
- வண்ண மடல்களுடன் வடிவம் பெறுகிறது.



இது ஒரு முந்நூற்று இருபது பக்க பொக்கிஷம்!

விலை ரூ. 30. பதிவுத் தபாலில் பெற ரூ. 13 சேர்த்து
அனுப்ப வேண்டும். கடைசி தேதி: ஆகஸ்ட் 11.

நிர்வாகி, கல்கி, சென்னை - 600 097

இன்னொரு கலவரமா?

தில்லியிலிருந்து உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா வந்தார்! ரமாபாய் நகர் தலித்துகள், குண்டர்களோ அண்டர்வர்ல்ட் கும்பல்களோ அல்ல; தங்கள் தலைவனை அவமரியாதைப்படுத்தியதைத் தாங்க இயலாத சாதாரண தொண்டர்களை 'காக்காய் குருவியைச் சுடுவதைப் போல் சுட்டுக் கொன்றிருக்க வேண்டுமா?' என அங்கலாய்த்தார். ஆனால் ஆட்சியைக் கவிழ்க்க நினைக்கவில்லை; கவர்னர் அலெக்ஸாண்டர், தாக்கரேவுடன் (கூட ராஜ்தாக்கரே இருந்ததை ரசிக்காவிடினும்) 90 நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தினார். சகன்புஜ்பலின் வீட்டில் சிவசேனைக்காரர்கள் ரவுடித்தனம் செய்ததைக் கண்டித்தார். ஆனாலும் அரசை டிஸ்மிஸ் செய்வது பற்றி வாயைத் திறக்கவில்லை! ராம் விலாஸ் பாஸ்வான் மட்டும், ஆட்சி மாற வேண்டும் என்ற தேய்ந்த பிளேட்டாகக் கரகரப்பது, லல்லு யாதவ்வின் அரசைக் காப்பாற்ற கேசரி செய்யும் சதியாக, பி.ஜே.பி. செகரட்டரி பிரமோத் மகாஜனுக்குப் படுகிறது. எது எப்படி இருப்பினும், தலித்துகளின் எழுச்சிக்கே தடுமாறிப்போன மும்பை, அரசை பதவியிறக்கம் செய்வதால் ஏற்படக்கூடிய சிவசேனைக்காரர்களின் சினத்தைச் சமாளிப்பது சிரமம் என்பது மகாஜனுக்கு மட்டுமல்ல, மகாஜனங்களுக்கும் தெரிந்தேதானிருக்கிறது! டிஸ்மிஸ் செய்து, இன்னொரு கலவரத்துக்கு வித்திட யாருக்கு தைரியமிருக்கிறது?



* கஜோல்

குறை ஒன்றுமில்லை...

காந்தி குல்லாய், கதர் ஜிப்பா போட்டாயிற்று! பத்திரிகையாளர்களுடன் பக்குவமாய்ப் பேசக் கற்றாயிற்று; மனைவி ஆஷாவை, தொண்டர்களிடையே "அன்னை" பதவிக்கு உயர்த்தியாயிற்று; உலக சாந்தி(!)க்கென்று மனைவியுடன் அமர்ந்து பக்திப் பரவசமாய் யாகமெல்லாம் செய்தாயிற்று! ஓர் அரசியல்வாதிக்கான லட்சணங்களை எல்லாம், அண்டர்வர்ல்ட் டான் அருண் காவ்லி, ஒன்று விடாமல் படிப்படியாக பழகிக் கொண்டு வருகையில், பேரணி ஒன்று பாக்கியாயிருந்தது. அந்தக் குறையும் வேண்டாமே என்று, காட்கோபர் கலவரங்களை ஒட்டி, தனது அகில பாரதிய சேனையைத் திரட்டி, மாபெரும் ஊர்வலம் ஒன்றையும் நடத்திக் காட்டி விட்டார்! மோர்ச்சாவில் பங்கு பெற்ற ஒவ்வொருவருக்கும் தலா 500 ரூ முதல் 5000 ரூ வரை, தகுதிக்கேற்றார் போல் "அன்பளிப்பு" தவிர ஒரு டீ ஷர்ட், குடை, 'வடா-பாவ்' வேறு! 6-10 வயதுக் குழந்தைகள் எக்கச்சக்கமாகக் கலந்து கொண்டார்கள் என்பது தான் மாபெரும் அதிர்ச்சி! கவர்னர் அலெக்சாண்டரிடம், "ஊரில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது(!)" என்றொரு மெமோராண்டம் வேறு கொடுத்திருக்கிறார். கவர்னரும், நிலைமையைச் சீரமைப்பது குறித்துப் பதினைந்து நிமிடங்கள் பேசிக் கொண்டிருக்கிறார்! அரசியலில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்.

காற்றுள்ளபோதே...

புஜ்பல் சாமர்த்தியக்காரர்! விக்கலெடுக்கும்போது 'உன்னைக் கண் தேடுதே' பாடிய கதையாக, சிவசேனைக்காரர்களால் கலவரங்களின் போது சேதமாக்கப்பட்ட தன் வீட்டைச் சீர் செய்யாமல், போட்டது போட்டபடியே வைத்துக் கொண்டு, வருவோர் போவோரிடமெல்லாம் அதைக் காட்டி, அனுதாப அலைகளைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்! லேட்டஸ்ட்



* கரீஷ்மா கபூர்

காதலுக்குக் கண் மட்டுமா இல்லை?

விஸிட்டர் ரயில் மந்திரி ராம்விலாஸ் பாஸ்வான்! வேறு பாதுகாப்பான இடத்துக்கு மாற்றிக் கொள்ளவும் மாட்டாராம்; (பயந்தாங் கொள்ளியா என்ன?) இத்தனை வீரத்தோடு இருப்பவர்கூட, ஒரு



* இந்திரஜித் குப்தா

விஷயத்தை நினைத்துக் கலவரப்பட்டுத்தான் போயிருக்கிறார். அம்பேத்கருக்குப் பின் தலித்துகளிடையே எந்தத் தலைவரும் தலை எடுக்கவில்லை என்பதால் அங்கே தலைமைப் பஞ்சம். இன்னொரு பக்கம் அருண் காவ்லி, ஊர் வலமெல்லாம் நடத்தி ஹீரோ வாகிக் கொண்டிருக்க, ஒன்றும் ஒன்றும் இரண்டாகி, தலித்துகளும் காவ்லி பக்கம் சாய்ந்து விட்டால்? அடுத்த தேர்தலின்போது, வளர்த்த பசு மார்பில் பாய்ந்து விடுமோ என்ற கவலை சகன் புஜ்பல் உட்பட பல காங்கிரஸ்காரர்களைத் தாக்கி இருக்கிறது!

பாட்டா பாடுகிறாய்?

பிரபல பாகிஸ்தான் கவாலி பாடகர் நஸ்ரத் ஃபதே அலிகான் மும்பை வந்திருந்தபோது "இந்தி - பாக் - பாய்-பாய்" என்று பாடிவிட்டு, பாகிஸ்தான் திரும்பியதும் "இந்தி - பாக்-பை-பை" எனப் ப்ளேட்டை மாற்றி விட்டாராம்! 'இந்தியா, பாகிஸ்தான் மீதான தன் கலாசாரத் தாக்குதலை முதலில் நிறுத்த வேண்டும்' என அவர் கூறியிருப்பதாக, பாக் பேப்பர்களில் படித்துவிட்டு தப்புத் தாளத்துக்கு நானாயிற்று எனக் கிளம்பிவிட்டார் சிவசேனைத் தலைவர். ரெஹ்மானும், கானும் முத்ரா வீடியோகாரர்களுக்காக இணைந்து வழங்கியிருக்கும் ஆல்பம் மும்பைக் கடைகளில் தென்பட்டால் அவ்வளவுதான் - கக்கு நூறாகிவிடும் (கடையும்தான்) என அறிவித்து விட்டார்!

ரகசியம் அம்பலம்

மும்பையின் மூலை முடுக்கெல்லாம் - பஸ் ஸ்டாப், ரயில் நிலையம், கல்லூரி (நோட்டீஸ் போர்டு + சர்க்குலர்), பில்டிங்குகள் - என எங்கே பார்த்தாலும் கொட்டை எழுத்துக்களில் தென்படும் வாசகம் என்ன தெரியுமா? டெலிஃபோனை எடுத்ததும் 'ஹலோ'கூடச் சொல்லாமல் நண்பர்கள் கூறும் வாசகம் என்ன தெரியுமா? காட்கோபர் கலவரத்து வதந்திகளுக்கு இணையான பரபரப்பை ஏற்படுத்தும் விஷயம் என்ன தெரியுமா? "குப்த் கொலையாளி கஜோல்" என்ற மாபெரும் ரகசியம்தான்! பாபிதியோல், கஜோல், மனீஷா கொய்ராலா நடித்து வெளிவந்துள்ள, ராஜீவ் ராயின் புதிய படமான "குப்த்" பயங்கர த்ரில்லர்! கொலையாளி யார் என்பது, கடைசிவரை நாற்காலி நுனியில் உட்கார வைக்கும் விஷயமாக இருக்க, திடீரென்று ஊர் முழுவதும் இதே பேச்சாக மாறிவிட்டது! ஒரு இந்திப் படம் இப்படி ஒரு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் அதிசயம் மும்பைக்குப் புதிதுதான்!

கல்யாணப் பரிசு

ஹாலிவுட் அழகிகள், இளைஞர்களின் கனவுக்கன்னிகளாய் உலவுவது அதிசயமில்லைதான். ஆனாலும் இந்த தசரத் என்ற 20 வயது மத்திய பிரதேச இளைஞர் கொஞ்சம் ஓவராகப் போய் விட்டார். கனவில் மட்டுமின்றி நனவிலும் கரிஷ்மா கபூருடன் மணமுடிக்க, தந்தையிடம் 5 லட்சம் (கரிஷ்மாவுக்கு 'ப்ரபோஸ்' பண்ணும் போது 'பரிசு'கள் வழங்க) கேட்டு, அதைக் கொடுக்காததால் அவரை 'குளோஸ்' செய்து விட்டார்! கரிஷ்மா பற்றிய புள்ளி விவரங்களை சுலோகம் போல் மனனம் செய்து வைத்திருக்கிறார். இது 'நிறைவேறாக் காதல்' என்று யாராவது சொன்னால் கோபப்படுகிறார். ஸல்மான் கான், அபிஷேக் பச்சன் (அமிதாப் பிள்ளைதான்) போன்ற நிஜ வாழ்க்கை 'வில்லன்'களை எப்படி சமாளிக்கப் போகிறார் இவர்? "அன்பால்தான்! என் ஆழமான அன்புக்கு முன் அவர்கள் உடல் கவர்ச்சி எம்மாத்திரம்!?" என்கிறார். காதலுக்குக் கண்ணில்லை என்பார்கள்; இதயமேயில்லை போலிருக்கிறது!

— ஜெயஸ்ரீ ராஜ்

கல்கி : டைரக்டர்கள் என்றில்லை. எத்தனை முதல்தரமான கலைஞர்களாக இருந்தாலும் உங்கள் படங்களில் பங்குபெறும் போது மட்டும் அடையாளம் தெரியாமல் போய் விடுகிறபடி உங்கள் டாமினேஷன் தானே பிரகாசமாகத் தெரிகிறது? ஏன் அப்படி?

கமல் : இதை நான் ஒப்புக் கொள்ளவே மாட்டேன். தேவர் மகனை எடுத்துக் கொள்ளுங்கள். ஸ்ரீராமை நீக்கிவிட்டு அந்தப் படத்தை நினைத்துப் பார்க்க முடியுமா? அப்போது அது வேறு மகனாகத்தான் இருக்கும்! இளையராஜாவை விலக்கிப் பார்க்க முடியுமா அந்தப் படத்திலிருந்து? தேவர் மகன் என்று சொன்னவுடனே பாமர ரசிகனுக்கு ஞாபகம் வருவது 'இஞ்சி இடுப் பழகா'தானே? சினிமா தனிமுயற்சி என்று நானும் நம்ப ஆரம்பித்து விட்டால் அதற்கு மேல் வேறு வீழ்ச்சி இருக்க முடியாது! சினிமா ஒருபோதும் தனிமனித சாதனையாக இருக்கவே முடியாது! இப்போது நான் மருதநாயகம் தொடங்கியிருக்கிறேன். நான் ஒருத்தன் மட்டுமா அந்தப் படத்தில்? ஷாஜஹான் என்றொரு அஸிஸ்டெண்ட் டைரக்டர் என்னுடன் இருக்கிறார். என் தலைவேதனைகள் அத்தனையையும் என் முன் எடுத்து வைப்பவர் அவர்தான். அவர் இல்லாவிட்டால் இந்தப் படத்தில் என்னால் எதுவுமே செய்ய முடியாது! இதுபோல் எத்தனையோ பேர்! என் கலை இயக்குநர் சாபுசிரில், காஸ்ட்யூம் டிசைனர் சரிகா, ஒளிப்பதிவாளர்... இவர்களும் இன்னபிறரும் அந்தப் படத்தின் பெரும் சுமையை ஆளுக்குக் கொஞ்சமாகத் தோளில் சுமக்கிறார்கள். வெறும் கமலஹாசன் போதாது. ஒரு மயக்கத்தில் கூட, 'ஆமாமாம், என் படத்தில் நான்தான் எல்லாமும்' என்று என்னால். சொல்லவே முடியாது!



"எனக்கும் சினிமா பொழுதுபோக்குதான்!"

'மகாநதி, குணா போன்ற படங்களில் டைரக்டர் சந்தானபாரதியின் ஸ்டைலுக்குப் பதிலாக உங்கள் ஸ்டைல்தானே முழுக்கத் தெரிகிறது?' என்ற கேள்விக்கு, 'நான் வேறு அவர் வேறு அல்ல' என்று சென்றவாரம் இடம் பெற்றிருந்த பேட்டியின் இறுதியில் சொன்னார் கமல். அதன் தொடர்ச்சியாக...

கல்கி : கொஞ்சம் சமீபத்திய விஷயத்துக்கு வரலாமா? அவ்வை சண்முகியின் இந்திப் பதிப்பின் இயக்குநர் சாந்தனு ஷெராயுடன் உங்களுக்கு என்ன தகராறு? உங்களைத் தாக்கி அவர் பக்கம் பக்கமாக விட்ட அறிக்கைக்கு நீங்கள் ஏன் மூச்சே விடவில்லை?

கமல் : ஒரு விஷயம் சொல்லட்டுமா? அவருக்கு சினிமா எடுக்கத் தெரியவில்லை. சத்தியமாகத் தெரியவில்லை. ஜஹாங்கீர் சௌத்ரி என்றொரு புத்திசாலியான காமெராமேன் இல்லாவிட்டால் இந்தப் படம் சுருண்டிருக்கும். சாந்தனு ஷெராய் இளைஞர். சத்யா எடுக்கும்போது சுரேஷ்கிருஷ்ணா எப்படி இருந்தாரோ, அப்படித்தான் இருக்கிறார் பார்ப்பதற்கு. நல்ல வசதியானவர். பென்ஸ் காரில் ஷூட்டிங்குக்கு வருகிறார். ஆனால் சினிமா இயக்குவது பற்றி இவருக்கு எதுவுமே தெரியவில்லை!

கல்கி : எனில், எந்த அடிப்படையில் அவரைத் தேர்ந்தெடுத்தீர்கள்? இவரால் முடியுமா முடியாதா என்று உங்களுக்கு முன்பே தெரியாதா?

கமல் : அது என் தவறுதான். அவர் பேசின பேச்சை வைத்து நம்பிக் கொடுத்தேன். ஒரு நடிகன் என்றால் நடித்துக் காட்டச் சொல்லலாம்! இயக்குநரை எப்படி இயக்கிக் காட்டச் சொல்ல முடியும்? மேற்கொண்டு இது பற்றி நான் இப்போது பேச விரும்பவில்லை. பின்னால் ஒரு சமயம், என்ன நடந்தது என்பதை விளக்குவேன். இப்போது படம் ரிலீஸாக வேண்டும். அதுதான் முக்கியம். நான்தான் மேற்கொண்டு டைரக்ட் பண்ணிக் கொண்டிருக்கிறேன்.

கல்கி : டைட்டில் கார்டில் டைரக்டராக யார் பெயர் வரும்?


கமல் : என் பெயர்தான்! நான்தானே மறுபடி எடுத்துக் கொண்டிருக்கிறேன்? எதிர்பாராவிதமாக ஒரு இந்திப் படம் மூலம் நான் இயக்குநராதல் நிறைவேறி விட்டது. மருதநாயகம் இந்த வகையில் எனக்கு இரண்டாவது படம்தான்!

கல்கி : நல்ல நாவல்கள் மலையாளத்தில் திரைப்படமாக வருவது போல தமிழில் ஏன் முடிவதில்லை? நீங்களே கூட மரப்பசுவை சினிமாவாக்கலாம் என்றீர்கள். பொன்னியின் செல்வனை எடுக்கப் போவதாகச் சொன்னீர்கள்? ஆனால், ஏன் செய்யவில்லை?

கமல் : இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன் பாலகுமாரனும் சுப்ரமணியராஜுவும் என்னை எல்.எல்.ஏ. பில்டிங்கில் ஒரு இலக்கியக் கூட்டத்துக்குக் கூட்டிப் போனார்கள். அந்தக் கூட்டத்தில், 'சினிமாவுக்கும் இலக்கியத்துக்கும் தொடர்பு ஏற்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் சினிமாவுக்கு நல்லதல்ல' என்று பேசினோம். ஆனால் இன்னும் எதுவுமே நடக்கவில்லை! சினிமா, இலக்கியத்தைத் தாக்கியிருக்கிறதே தவிர, இலக்கியம் சினிமாவைத் தாக்காததற்குக் காரணம், இலக்கியவாதிகள் சினிமாவை இரண்டாம்பட்சமாகக் கருதுவதுதான். அவர்கள் ஞானபீடத்தை உயர்வாகக் கருதுகிறார்கள். வேறு பீடங்களை விரும்புவதில்லை!

கல்கி : ஏன், சுஜாதா, பாலகுமாரன், ரா.கி. ரங்கராஜன் போன்றோர் உங்களுடன் இருக்கிறார்கள். அவர்களைக் கூட சினிமாக் கதைக்குத் திரைக்கதை எழுத வைக்கிறீர்களே தவிர, ஒரிஜினலாகக் கதை எழுத வைத்தோ, எழுதிய கதைக்கு திரைக்கதை அமைக்கவோ நீங்களே முயலுவதில்லையே?

கமல் : நாவல்களைத் திரைப்படமாக்க எனக்குத்



தயக்கம் இல்லை. ஆனால் உலகத்தரத்தில் நாவல்கள் வேண்டுமே? ஏன், என் மகாநதியே நான் எழுதிய நாவல்தான்! முதலில் நாவலாக அதை எழுதிவிட்டுத்தான் பின் படமாக்கத் தீர்மானித்தோம்.

சுஜாதா விஷயம் வேறு. அவர் நாவல்களில் சில சினிமாவாகின. ஆனால் அதன் திரை உருவாக்கத்தில் அவர் முழுப்பங்கு வகிக்கவில்லை. அதனால் கதைகள் பல சினிமாவாகும்போது கெட்டுப் போயின. கெடுக்காமல் எடுக்கிற டைரக்டர்கள் அன்று இல்லை. என்னைக் கேட்டால், அவர் முதலிலேயே மணிரத்னத்தைச் சந்தித்திருக்க வேண்டும். பொன்னியின் செல்வனை என்னால் இன்னும் எடுக்க முடியாமல் இருப்பதற்கு அதன் பிரும்மாண்டம்தான் காரணம். டீவி சீரியலாக எடுக்கலாமென்றால் இன்றைக்கு வருகிற சீரியல்களுக்கு ஆகிற செலவைப் போலப் பல மடங்கு அதற்குப் பிடிக்கும். தூர்தர்ஷனுக்குச் செய்யலாம் என்று கேட்டபோது, இரண்டு எபிசோடுகளை 'பைலட்' எடுத்துத் தரச் சொல்லிக் கேட்டார்கள். செலவு என்னாவது? தவிர, நான் எடுத்துக் கொடுத்தபின் அவர்கள் நிராகரித்தால் அந்த அவமானத்தை என்னால் தாங்க முடியாது! டீவிக்காரர்கள் நிராகரிப்பதற்கு, தரம் மட்டுமே காரணமாயிருக்கும் என்றும் சொல்ல முடியாதே! (சிரிக்கிறார்.) நேஷனல் நெட்வொர்க்குக்கு வேண்டுமானால் செய்யலாம். ஆனால் என்னால் ராஜராஜனை இந்தி பேச வைக்க முடியாது! யாராவது தனியார் சேனல்கள் முன்வந்தால் எடுத்துத் தரத் தயாராக இருக்கிறேன்.

கல்கி : மருதநாயகத்துக்கு வருவோம். வருஷக்கணக்காகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்...

கமல் : (குறுக்கிட்டு) இதோ ஆரம்பித்து விட்டேன். இத்தனை நாளாகத் தள்ளிப் போனதற்குக் காரணம் பணம்தான்! அப்புறம் தொழில்நுட்பம். இப்போது பணப் பிரச்னை இல்லை. ஆனால் தொழில்நுட்பரீதியில் இந்தப் படத்துக்கு எக்கச்சக்கமாக உழைக்க வேண்டியிருக்கிறது. தொடத் தொட வளர்ந்து கொண்டே போகிறது! எப்படியும் இந்த வருஷம் ஆரம்பித்து விடுகிறேன்.

கல்கி : படத்தைப் பற்றி ஒரு அவுட்லைன் தரமுடியுமா?

கமல் : நானும் சுஜாதாவும் உட்கார்ந்து ஒரு வித்தியாச வில்லனைத் தேடி நாட்டுப் பாடல்களைப் படித்துக் கொண்டிருந்தோம். அப்போது அகப்பட்ட ஹீரோ இந்த மருதநாயகம். 1740–64 வரை நடந்த கதை இது. முதல் சிப்பாய்க் கலகத்தின் உண்மையான சரித்திரம். முதல் சிப்பாய்க் கலகம் என்பது நம் சரித்திரப் புத்தகங்களில் குறிப்பிட்டிருப்பது போல 1857ல் நடந்தது அல்ல. அதற்கு நூறு வருடங்கள் முன்பே இங்கே தமிழகத்தில் நடந்திருக்கிறது! எக்காரணங்களாலோ, இருட்டடிப்பு செய்யப்பட்டுவிட்ட இந்த வீர சுதந்தரப் போராளியின் கதையை, சரித்திர ஆதாரங்களுடன் நான் படமாக்குகிறேன்.

கல்கி : மருதநாயகத்தை எப்படி நீங்கள் உங்கள் லட்சியப் படமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களோ, அப்படியே சொல்லிக்கொண்டிருந்தவர் ஒளிப்பதிவாளர் பி.சி. ஸ்ரீராம். இப்போது நீங்கள் ஆரம்பிக்கிற வேளையில் அவர் விலகிப் போய் விட்டதன் காரணம் என்ன?

கமல் : எங்களுக்குள் சண்டை ஏதுமில்லை. இந்த சப்ஜெக்டை நாங்கள் இருவரும் பார்க்கிற 'vision' ஒன்றாக இல்லை! அதுதான் காரணம். ஒரே சப்ஜெக்டை இயக்குநரும் ஒளிப்பதிவாளரும் வேறு வேறு விதமாக நோக்கினால் சரியாக வராதல்லவா? அதான்! இருவரும் அவரவர் கருத்துக்களில் உறுதியாக இருப்பதால்தான் அவர் இதில் பணியாற்றவில்லையே தவிர, நட்புமுறையில் எங்களுக்குள் எவ்விதப் பிளவும் இல்லை. இப்போதும் அவர் என் அலுவலகத்துக்கு வருகிறார். அவரது பரீட்சார்த்த முயற்சிகளுக்கு ராஜ்கமலின் கதவுகள் திறந்தே இருக்கும்! ஏன், மருதநாயகம் சம்பந்தமாகவே கூட அவருக்கு ஏதாவது புதிய ஐடியாக்கள் தோன்றினால் உடனே எனக்குச் சொல்லுவார். அந்தப் பெருந்தன்மை அவருக்கு உண்டு. மருதநாயகத்துக்கு டெஸ்ட் போட்டோக்கள் எடுத்தது ஸ்ரீராம்தான். இதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது! நான் குறிப்பிட்ட 'vision' வேறுபாடு என்பதைப் புரிந்து கொள்ளக் கொஞ்சம் கலையுணர்வு வேண்டும். அதைப் புரிந்து கொண்டவர்கள், வதந்திகளில் வீழமாட்டார்கள்!

கல்கி : சினிமா ஆர்டிஸ்ட் யூனியன் என்று ஒரு புது அமைப்பு தொடங்கப்படுவதற்குப் பிள்ளையார் சுழி போட்டதே நீங்கள்தான் என்றொரு பேச்சு இருக்கிறது. அது உண்மையா?

கமல் : நானா? இல்லை! நல்ல தம்பி என்றொரு நடிகரின் முயற்சியின் விளைவு அது. அவர்தான் தொடங்கியவர். நான் சிறிய

வயதில் பார்த்த நாடக நடிகர்களெல்லாம் இன்று தொழிலுக்கும் சாப்பாட்டுக்கும் வழியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமாக ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டாமா? சோறு போடுவதை விட தொழில் தருவதுதானே முக்கியம்? அதற்காக, அவர்கள் நலனுக்காகத் தொடங்கப்பட்டதுதான் இந்த யூனியன். நான் இதன் ஆதரவாளன். அவ்வளவே.

கல்கி : ரஜினி நடிக்க, நீங்கள் ஒரு படம் இயக்குவதாகச் சொன்னீர்கள். அது நிஜமாகவே சொன்னதா? அல்லது....

கமல் : நிஜமாகவே அப்படியொரு ஆசை எனக்கு உண்டு. ஆனால் எல்லாம் கைகூட சமயம் வர வேண்டும். ரஜினியை வைத்து நான் மகாநதி போல ஒரு படம் எடுத்துவிட்டால் அவரது ரசிகர்கள் தொலைத்து விடுவார்களே!

கல்கி : உங்களுக்கும் ரஜினிக்கும் இருக்கிற இணக்கம், உங்கள் ரசிகர்களுக்கும் அவரது ரசிகர்களுக்கும் ஏன் இல்லாமல் போகிறது?

கமல் : அதான்! அதான்! இப்போது இந்திய கிரிக்கெட் வீரர்கள் கிரவுண்டுக்கு வெளியே பாகிஸ்தான் வீரர்களுடன் தோழமையுடன்தான் பழகுவார்களாயிருக்கும். ஆனால் எந்த ஒரு இந்திய ரசிகனாவது பாகிஸ்தான்காரனை – அவனது ஆட்டத்தை விரும்பி ரசிக்கிறானா? அது மாதிரிதான். கட்சி கட்டிக் கொண்டு விடுகிறார்கள். நான் கூட அதனால்தான் ரஜினியிடம் சொல்லுவேன், "நீங்கள்பாட்டுக்கு ரிடையராகிறேன் என்று போய் விடாதீர்கள். அவ்வளவுதான்; ஆட்டம் குளோஸ் என்று ரசிகர்கள் என் படத்தையும் பார்க்க வர மாட்டார்கள். நான் இன்னும் நிறைய செய்து பார்க்க மிச்சம் இருக்கிறது. அதுவரைக்கும் நீங்களும் நடித்துக் கொண்டிருங்கள்" என்று!

கல்கி: பத்திரிகைகளில் வரும் சினிமா விமர்சனங்களை நீங்கள் கவனிக்கிறீர்களா? அவை குறித்து உங்கள் அபிப்பிராயம்?

கமல்: ஆரோக்கியமான விமர்சனங்களை நான் வரவேற்கிறேன். அவை, கலைஞனின் வளர்ச்சிக்கு உதவும். மேலோட்டமான அபிப்பிராயங்களைத்தான் என்னால் ஏற்க முடிவதில்லை.

கல்கி: அவ்வை சண்முகிக்கு கல்கி எழுதிய விமர்சனமும் அதைத் தொடர்ந்து ஒரு சென்சார் அதிகாரி எழுப்பிய கண்டனமும், அந்த பதிலுக்கு பதில் என்று நீண்ட பிரச்னைக்கு, அந்தப் படத்தின் படைப்பாளி என்கிற முறையில் உங்கள் ரியாக்ஷனை அப்போது வெளிக்காட்டவில்லை. இப்போது சொல்ல முடியுமா?

கமல்: ஒரு குறிப்பிட்ட வகுப்பினரை அந்தப் படம் தவறாகச் சித்திரித்திருந்ததாக நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். அதை அந்த அதிகாரி பெரிதுபடுத்தியிருக்கத் தேவையில்லை என்பதுதான் என் அபிப்பிராயம்.

கல்கி: கேலிக்கும் கிண்டலுக்கும் ஐயர் மாமிதான் சரியா? ஒரு கிறிஸ்துவ மதத்தினரையோ, முஸ்லிம் சகோதரரையோ உங்களால் கிண்டல் செய்ய முடியுமா?


கமல்: மாமி கேரக்டர் என்பது எனக்கு நன்றாகத் தெரிந்த ஒன்று. எனக்கு எந்த மத, இன லேபிலும் இல்லை என்றாலும் என் தாய் ஒரு பிராமண குலத்துப் பெண். என் தந்தை ஓர் அந்தணர். எனக்கு நன்கு தெரிந்த பலரும் இக் குலத்தவர்கள். ஆகவே படங்களில், எனக்குத் தெரிந்த அந்த இனத்தவர்களைப் பாத்திரங்களாக்குகிறேன். முஸ்லிம், கிறித்தவ - பிற இனத்தவரைப் பற்றி ஏதும் தெரியாதபோது நான் எப்படி அவர்களைக் கையாள முடியும்?



கல்கி : குணாவில் முகத்தைக் கறுப்பாக, விகாரமாக ஆக்கிக் கொண்டீர்கள்; அப்புறம் இந்தியனில் கிழ வேஷம்... சண்முகியில் மாமி வேஷம்... மேக்-அப்புக்காக மெனக்கெடுதல், சிரமப்படுதல்... எதற்காக இப்படி நம்மை நாமே வருத்திக் கொள்ள வேண்டும் என்று எப்போதாவது தோன்றியிருக்கிறதா?

கமல் : இதுவரைக்கும் இல்லை. சினிமாவை நான் தொழிலாகவே நினைக்கவில்லை! சும்மா ஜாலியாக, பொழுது போக்காகத்தான் செய்கிறேன். இதற்குப் போய் பணமும் கொடுக்கிறார்களே என்கிற என் ஆச்சர்யம், போலியானதல்ல! இதற்காக நான் மெனக்கெடுவதாகத் தெரியவில்லை. என் இயல்பாகவே இதையெல்லாம் செய்து கொண்டிருக்கிறேன். எப்போதாவது அப்படித் தோன்றுமானால் இரண்டு விஷயங்களில் ஏதாவது ஒன்று நடந்திருக்கும். ஒன்று : நான் நடிப்பதை நிறுத்தியிருப்பேன்; அல்லது இறந்து போயிருப்பேன்!

சந்திப்பு : **ஔரங்கசீப்**
படங்கள் : **பிரவீன்குமார்**





முதல்வருக்கு ஒரு வேண்டுகோள்!

வி.கே. ராமசாமி

நேற்றுத்தான் தொடங்கினாற்போலிருந்தது. முப்பது வாரங்கள் ஓடியே விட்டன! ஒரு வெறியில் வீட்டை விட்டு ஓடி வந்து நாடக கம்பெனியில் சேர்ந்தது முதல் போராட்டமாகத்தான் இருந்திருக்கிறது வாழ்க்கை.



முதலில் சோற்றுக்குப் போராட்டம். பிறகு வாய்ப்புக்களுக்குப் போராட்டம். நல்ல பெயருக்குப் போராட்டம். அதைத் தக்க வைத்துக் கொள்ளப் போராட்டம்...

ஒரு நாடகக்காரன் என்கிற அழுத்தமான பின்னணி இருந்ததனால்தான் என்னால் சினிமாவில் இத்தனை நாள் நீடித்துத் தாக்குப் பிடிக்க முடிந்திருக்கிறது என்று நினைக்கிறேன்.

சினிமா என்பது என்ன? அது நாடகத்தின் பரிமாண வளர்ச்சிதான்!

இன்றைக்கு நாடகப் பின்புலம் இல்லாமல் நேரடியாக எத்தனையோ பேர் சினிமாவுக்கு வருகிறார்கள்; ஜெயிக்கவும் செய்கிறார்கள்தாம்! ஆனால் நாடகத்திலிருந்து வந்தவர்களின் நடிப்புத் திறனை, தரத்தைக் கொஞ்சம் ஒப்பிட்டுப் பாருங்கள்.

ஒரு சிவாஜியை சொல்வது போல் வேறு யாரைச் சொல்கிறார்கள் இன்று?

நான் இருக்கிறேன். நாகேஷ் இருக்கிறார். மனோரமா இருக்கிறார். காகா ராதாகிருஷ்ணன் இருக்கிறார்... இன்னும் எத்தனை பேர்!

எங்களுக்குப் போடப்பட்ட அடித்தளம் என்பது மிக பலமானது! பொழுதுபோக்காக அல்லாமல் கலையை எப்படி வாழ்க்கையாக அமைத்துக் கொள்வது என்பதைப் பாடமாகப் பயின்றவர்கள் நாங்கள்.

என் வருத்தமெல்லாம் இதுதான்: எத்தனையோ கலைஞர்களை உருவாக்கிய நாடகக் கலை என்கிற தாய் இன்று சீரழிந்து கிடக்கிறாள்!

சினிமாவும் சேடிலைட் சானல்களும் கூடாது என்பதல்ல! இவற்றுக்கெல்லாம் மூத்ததும் மிக முக்கியமானதுமான நாடகம் செழிக்க வேண்டாமா? வரப்புயர்ந்தால் தானே கோனுயர்வான்?

இன்றைக்கு மேடை நாடகமென்பது வெறும் துணுக்குத் தோரணமாகிவிட்டது!

நகைச்சுவை என்பது, நல்ல கருத்துக்களை வலிக்காமல் ஏற்றும் கருவி. கசப்பு மாத்திரைக்கு சர்க்கரை கோட்டிங் மாதிரி.

அதையே முழு விருந்தாகத் தருவதில்

தப்பில்லைதான். ஆனாலும் கலைகளிலேயே சிறந்ததான நகைச்சுவையையும் ஆபாசமாக, முகம் சுளிக்கும் வண்ணம் வசனங்களாக இட்டு நிரப்புகிற இன்றைய மேடை நாடகங்களைக் காண, உள்ளம் குமுறுகிறது.

நல்ல கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் கருவியாக நாடகம் ஒரு காலத்தில் செயல்பட்டது. இன்று அதற்கு யாராவது நல்லது செய்ய மாட்டார்களா என்று ஏங்குகிற நிலைமை!

அதிர்ஷ்டவசமாக நம் முதல்வர் ஒரு கலைஞராக இருக்கிறார். நாடகத் துறையோடு நெருங்கிய தொடர்பு உள்ளவர் அவர். இதை ஒரு வாய்ப்பாகக் கருதி அவரிடம் ஒரு வேண்டுகோள் வைக்கிறேன்.

அரசாங்கம், போலீஸ் ஸ்டேஷன் நடத்துகிறது. ரயில்வே ஸ்டேஷன் நடத்துகிறது. ரேடியோ ஸ்டேஷன் நடத்துகிறது. ஏன் ஒரு ட்ராமா ஸ்டேஷன் நடத்தக் கூடாது?

நல்ல நாடகக் கலைஞர்களை ஊக்குவித்து, தரமான நாடகங்களைக் கொண்டு வர அரசு ஏன் முனைப்புக் காட்டக் கூடாது?

அரசின் நல்ல பல திட்டங்களை - மக்கள் முன் எடுத்துச் செல்லும் பிரசாரக் கருவியாகவும் அது செயல்படலாமே?

சரி, நாடகங்கள்தான் அழிந்து வருகின்றன என்றால் சினிமாவாவது செழித்து வளர்ந்திருக்கிறதா?

நூறு படங்கள் வெளி வந்தால் பத்துகூட ஓடுவதில்லை! எத்தனை லட்சங்கள்! கோடிகள் இதில் மூதலீடாகின்றன! யார் பணம்? எத்தனை விரயம்?

சினிமா ஓடாததற்கு ரசிகர்களின் புறக்கணிப்புத்தான் காரணம் என்பதை நான் நிச்சயம் ஒப்புக் கொள்ள மாட்டேன்!

பிற மாநில ரசிகர்கள் யாரைக் காட்டிலும் தமிழ் ரசிகர்களுக்கு ரசனை சற்று அதிகம் தான்! இது, இத்தனை வருட என் அனுபவம் தந்த பாடம்!

நல்ல படங்களை அவர்கள் எப்போதும் புறக்கணிப்பதில்லை. நல்ல படம் என்று நான் சொல்லுவது - ஓர் அழுத்தமான கதை, போதுமான பொழுதுபோக்கு அம்சங்கள் இரண்டின் சரியான கலவை.

இது சினிமாக்காரர்களுக்கும் தெரியாததில்லை. ஆனால் என்ன நடக்கிறது இங்கே?

கலவை விகிதத்தில் சற்றுத் தடுமாறிப் போவதால்தான் பிரச்னை!

அன்றைக்கு சிவாஜிகணேசன் படங்கள் கோடிக்கணக்கில் செலவு செய்தா எடுக்கப்பட்டன? ஏன், எம்.ஜி.ஆர் படங்களேதான் ஆகட்டும். பார்ப்பதற்கு 'ரிச்'சாக இருக்கும் தான். ஆனால் ஒரு பட்ஜெட் போட்டு அதற்குள் என்ன செய்ய முடியுமோ, அதைத்தான் செய்வார்கள்!

இன்றைக்கு அதிகம் செலவு செய்து, பயங்கரமான பப்ளிஸிட்டி செய்து, மிக கிராண்டாகப் படம் எடுப்பதுதான் ட்ரெண்ட் என்று ஆகிப் போனது!

கோடிக்கணக்கில் கொட்டுகிறார்கள்! கார்கள் நொறுங்குகின்றன. பாம்கள் வெடிக்கின்றன. வண்ண வண்ண உடைகளில் திரையில் ஜவுளிக்கடைகளே தெரிகின்றன.

ஆனால் அடிப்படையில் கோட்டை விட்டு விடுகிறார்கள்.

அதுதான் கதை!

நல்ல கதை என்கிற ஒரு அம்சம்தான், ஒரு படத்தின் வெற்றிக்கு மூல காரணம் என்பது என் கருத்து.

பிற அலங்காரங்கள் யாவும் இரண்டாம் பட்சம்தான்!

எளிய, மிகைப்படுத்தப்படாத ஒரு சென்டிமென்ட். அதை மையமாகக் கொண்டு சுழலும் கதை. கதைக்கேற்ற நடிகர்கள். அதற்கேற்ற காட்சி அமைப்புகள்... இது போதும் ஒரு வெற்றிப் படத்துக்கு.

வெற்றி கண்ட படங்கள் எதை வேண்டுமானாலும் எடுத்துப் பாருங்கள். இந்த ஃபார்முலாதான் பிரதானமாக இருக்கும். பிற ஜோடனைகளெல்லாம் இதற்கு மேல்தான்!

இன்னொரு விஷயமும் சொல்ல வேண்டும். இன்றைக்கு எத்தனையோ பேர் படம் எடுக்கிற ஆசையில் ஊரிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டு சென்னைக்கு வருகிறார்கள்.

ஆனால், வெறும் பூஜையோடே காணாமல் போய் விடுகிறார்கள்! அதற்குள் சில லட்சங்கள் வரை செலவு வேறு ஆகிவிடுகிறது!

எத்தனை லட்சங்கள் இப்படி இழப்பாகின்றன தெரியுமா?

பிலிம் சேம்பர் போன்ற அமைப்புகள்தான் இவர்களுக்கு உதவ வேண்டும்.

புதிதாகப் படமெடுக்க வருபவர்களுக்கு வழி காட்ட வகுப்புகளேகூட இவர்கள் நடத்தலாம் என்பது என் அபிப்பிராயம்.

சினிமா என்பது என்ன? தோராயமாக என்ன செலவு பிடிக்கும்? ஹீரோவுக்கு எத்தனை? ஹீரோயினுக்கு எத்தனை? பிற தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு எத்தனை? எத்தனை பேர் ஈடுபடுகிறார்கள் என்று சொல்லித் தர வேண்டியது கடமை அல்லவா?

அந்தக் காலத்தில் ஒரு படத்துக்குப்

பூஜை போட்டது தெரிந்தால் போதும். விநியோகஸ்தர்கள் உடனே அட்வான்ஸ் தந்து விடுவார்கள்.

இன்று?

படம் தயாராகி முதல் பிரிண்ட் பார்த்த பிறகுதான் வாங்கலாமா வேண்டாமா என்றே யோசிக்கிறார்கள்.

இதற்கு என்ன காரணம் என்று யோசிக்க வேண்டும்.

அரங்கேற்றவேளை படப்பிடிப்பின்போது ஒரு தரம் மம்முட்டி என்னிடம் சொன்னார். "இங்கு (கேரளாவில்) கதைதான் முக்கியம்; கதாநாயகர்கள் முக்கியமில்லை" என்று.

ஆனால் நம்மவர்களுக்குக் கதையும் முக்கியம்; கதாநாயகர்களும் முக்கியம்; அது கதாநாயகர்களுக்கேற்ற கதையாக இருப்பது ரொம்பவே முக்கியம்!

அப்படி அமைந்திருக்கிறதா என்றுதான் விநியோகஸ்தர்கள் பார்க்கிறார்கள்.

இதனால்தான் இன்றைய கலைஞர்கள் நல்ல வியாபாரம் தெரிந்தவர்களாகவும் இருக்க வேண்டிய நிலை தோன்றியிருக்கிறது. ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும் என்கிற பழமொழி, மற்றவற்றுக்கு எப்படியோ, சினிமாவுக்கு ரொம்பப் பொருத்தமானது; அவசியமானது!

இதனை இத்தனை அழுத்தமாக நான் சொல்லுவதற்குக் காரணம் - எங்கே நாடகம் போல் சினிமாவும் ஒருநாள் அழிந்து விடுமோ என்கிற கவலையால்தான்!

ஒரு கலை வழிப் போக்கனின் பார்வையாக, என் வாழ்க்கையில் நான் சந்தித்த நபர்களை, தோன்றிய சிந்தனைகளை, பாதித்த விஷயங்களை, பெற்ற அனுபவங்களை, பாடங்களைக் கடந்த முப்பது வாரங்களாகக் கல்கி வாசகர்கள் முன் வைத்ததில் எனக்கு மிகுந்த சந்தோஷம். இதில் இன்னொரு சந்தோஷம் - என்னை நானே மறுமுறை பார்த்துக் கொண்ட அனுபவம்!

இந்தத் தொடரில் நான் சொல்லிய சங்கதிகளைப் போலவே சொல்லாமல் விட்டவைகளும் அநேகம்!

நாடகமோ, சினிமாவோ, எழுத்தோ, பேச்சோ - கலைஞனின் எந்த ஒரு வெளிப்பாடும் ஏதாவது ஒரு வகையில் ரசிகர்களுக்கு உபயோகமாக இருக்க வேண்டும் என்பதுதான் என் தீர்மானமான எண்ணம். இந்த என் வாழ்க்கை அனுபவங்கள் ஒரு துளியேனும் வாசகர்களுக்கு உபயோகமானதாக இருந்தால் அது போதும் எனக்கு!

முற்றும்

பப்லு



ஸ்கூல் பேகை எடுத்து முதுகில் மாட்டிக் கொண்ட நந்துவின் பிஞ்சு மனசுக்குள் ஏக்கம் பரவியது.

பள்ளிக்கூடம் போனதும் சுஜய் வந்து அவனோட பப்லுவைப் பற்றி பீற்றிக் கொள்வானே. வரவர சுஜய்யின் அலட்டல் நந்துவுக்கு அவ்வளவாகப் பிடிப்பதில்லை.

பிறகு என்ன?

எப்பொழுது பார்த்தாலும் சுஜய் அவனோட தங்கச்சிப் பாப்பா பப்லுவின் பெருமையையே பீற்றிக் கொள்கிறானே!

நந்துவின் எண்ணம் வீண் போகவில்லை.

பள்ளியில் இடைவேளை விட்டதும் சுஜய் நந்துவைப் பிடித்துக் கொண்டான்.

"நந்தூ... உனக்கொரு விஷயம் தெரியுமா? எங்க அத்தை வீடு ஆனியாறில் இருக்கிறதா சொன்னேன். ஞாபகம் இருக்கா?"

"ஆமாம். அதுக்கென்ன இப்போ?"

"நேற்றைக்கு எங்க அத்தை வீட்டுக்குப் போயிருந்தோம். ஆளியாறு டேமை சுற்றி பார்த்தோமாக்கும். எங்க பப்லுவையும் தூக்கிட்டு போயிருந்தோமே"

'போச்சுடா! பப்லுவின் பெருமையை ஆரம்பிச்சுட்டானே!'

நந்து பேசாமல் இருந்தாலும் சுஜய் விட்டபாடில்லை.

"ஆளியாறு டேமைச் சுற்றிப் பார்த்தபோது எங்க பப்லுவை போட்டோ எடுத்தோம். இங்கே பாரு எங்க பப்லுவை"

சுஜய் காட்டிய போட்டோக்களில் உண்மையிலேயே பப்லு மிகவும் அழகாக இருந்தான். கன்னம் இரண்டும் பஞ்சு மிட்டாய் மாதிரி இருந்தது.

"என்னோட சட்டை பேண்ட். சின்னதா போனதைப் போட்டு போட்டோ எடுத்திருக்கோம்"

ஒவ்வொரு போட்டோவாகக் காட்டி சுஜய் மிகவும் அலட்டிக் கொண்டான். நந்துவுக்கு மிகவும் தர்ம சங்கடமாக இருந்தது. பதில் பேசாமல் போட்டோக்களைப் பார்த்தான்.

நந்துவின் மனசுக்குள் வேறுவிதமான சிந்



தனை எழுந்தது.

எனக்கும் இப்படியொரு தங்கச்சிப் பாப்பா இருந்தால் எவ்வளவு நல்லா இருக்கும்? இந்த சுஜய் அலட்டிக் கொள்ளும் போது, மூக்கு மேல இடிச்ச மாதிரி என்னோட பப்லுவைப் பற்றி பெருமை அடித்துக் கொள்ளலாமே!

என்னிடமும் சின்னதாகப் போன சட்டை பேண்ட் நிறைய இருக்கின்றனவே! எனக்கு ஒரு பப்லு இருந்தால் அந்த சட்டை பேண்ட்களை எல்லாம் போட்டு அழகு பார்க்கலாமே?

பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வரும் போது நந்துவின் முகம் வாடிப்போன ரோஜாவாக தொங்கிப் போய்க் கிடந்தது.

நந்துவைத் தூக்கி, அப்பா மடியில் உட்கார வைத்துக் கொண்டார்.

"என்னடா நந்து கண்ணா, ஏன் ஒரு மாதிரி இருக்கிறே?"

ஒன்றுமில்லை என்பது போல் தலையாட்டி வைத்தான் நந்து. ஆனால் மனசுக்குள் என்னவோ இருக்கிறது! அப்பாவுக்கு அதைத் தெரிந்து கொள்ளாமல் விடுவதற்கு மனசு உடன்படவில்லை.

"சொல்லுடா ராஜா. டீச்சர் அடிச்சாங்களா?"

"இல்லை"

"அப்புறம் என்ன? குட்டி சைக்கிள் வேணுமா?"

"இல்லே அப்பா"

"பின்னே என்ன வேணும்? சொல்லு"

"குட்டி பாப்பா வேணும். சுஜய்யுக்கு மட்டும் பப்லு இருக்கான். எனக்கு மட்டும் வீட்டுக்கு வந்தால் விளையாட தங்கச்சி பாப்பா இல்லையே. போய் வாங்கிட்டு வரலாம்பா"

அப்பாவுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை.

"தங்கச்சி பாப்பா கடையில கிடைக்காதுப்பா"

"பின்னே?"

அந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் அப்பா திணறிப் போனார்.

"கடவுளா பார்த்து கொடுத்தால் உண்டு"

அப்பா ஒருவாறு சமாளித்துக் கொண்டார்.

"புவனா கேட்டியா? நந்து என்ன கேட்கிறான்னு"

பாலைக் கலக்கி எடுத்து வந்த அம்மாவின் முகம் குங்குமப் பூவாக சிவந்து போயிற்று.

அப்பாவும் அம்மாவும் ரகசியமாக சிரித்துக் கொண்டார்கள். அந்தச் சிரிப்புக்கான அர்த்தம் நந்துவுக்கு விளங்கவில்லை.

அடுத்தநாள் பள்ளிக்குக் கிளம்பியபோது யாருக்கும் தெரியாமல் சாமி படத்துக்கு முன்னால் நின்று நந்து வேண்டிக் கொண்டான்.

'கடவுளே, எனக்கும் ஒரு பப்லு வேணும். சீக்கிரம் வேணும். எப்போ கொடுப்பே?'

அன்றைக்கு சுஜய் வீட்டு பப்லுவுக்கு பிறந்த நாள். சுஜய் மிகவும் வற்புறுத்தி அழைத்திருந்தான்.

பப்லுவுக்காக ஒரு பொம்மை பாப்பாவை

அமுதகுமார்

வாங்கி பார்சல் செய்து அப்பா கொண்டு வந்து நந்துவிடம் கொடுத்தார்.

"நந்தா, இந்தப் பார்சலை பப்லுவுக்கு பிரசண்ட் பண்ணிடலாம். என்ன?"

நந்து சந்தோஷமாக பார்சலை எடுத்துக் கொண்டு அப்பா அம்மாவுடன் சுஜய் வீட்டுக்குக் கிளம்பினான்.

பப்லுவின் கையில் கத்தியைக் கொடுத்து சுஜய்யின் அப்பா பிறந்தநாள் கேக்கை வெட்ட உதவினார்.

வெட்டிய கேக்கின் முதல் துண்டை சுஜய் எடுத்து அலட்டலாகத் தன் தங்கச்சி பாப்பாவுக்கு ஊட்டி விட்டான்.

பிறகு அனைவருக்கும் தட்டில் கேக்கைப் போட்டு எடுத்து வந்து சுஜய் கொடுத்தான்.

அவற்றை எல்லாம் பார்க்கப் பார்க்க நந்துவின் மனசுக்கு எப்படியோ இருந்தது. சுஜய் கொடுத்த கேக்கைக்கூட சாப்பிடவில்லை.

சாப்பிடப் பிடிக்கவில்லை.

வீட்டிற்கு வந்ததும் சாப்பாட்டை தட்டில் போட்டு பிசைந்து நந்துவை மடியில் உட்கார வைத்து அம்மா ஊட்டி விட்டாள். அப்படி சாப்பிட நந்துவுக்கு மிகவும் பிடிக்கும். நந்து வீட்டில் இருக்கும் பொழுதெல்லாம் அம்மா அப்படித்தான் ஊட்டி விடுவாள்.

"நந்து, எதனால சுஜய் வீட்டில் கேக் சாப்பிட மாட்டேன்னு சொல்லிட்டே?"

"பிடிக்கலேம்மா"

"ஏன் பிடிக்கலே? உனக்கு கேக் ரொம்பவும் பிடிக்குமே?"

"ஏனோ பிடிக்கலேம்மா"

குழந்தையைப் புரிந்து கொள்ள முடியாமல் அம்மா அதோடு விட்டு விட்டாள். மறுபடி கேட்டு வற்புறுத்தவில்லை.

அன்றைக்கு அம்மாவை டாக்டரிடம் அழைத்துக் கொண்டு போயிருந்தார் அப்பா. வீட்டிற்கு வரும்பொழுது டாக்டர் நிறைய மாத்திரைகளை எழுதிக் கொடுத்திருந்தார்.

பாவம் அம்மா! இவ்வளவு மாத்திரை சாப்பிடற அளவுக்குக் காய்ச்சல் வந்திருச்சே! நந்து கவலைப்பட்டான்.

நந்துவுக்குப் பெரிய சாக்லேட் ஒன்றை அப்பா கொடுத்தார். சாக்லெட் சாப்பிட்டால் பல் சொத்தையாகி போயிடும்னு அடிக்கடி அப்பா திட்டியிருக்கிறார். இன்றைக்கு என்ன அப்பாவே சாக்லெட் வாங்கி வந்திருக்கிறார்?

நந்து அதிசயமாகப் பார்த்தான்.

அம்மாவின் மடியில் உட்காரப் போன நந்துவை அப்பா தடுத்தார்.

"நந்து, அம்மாவை தொந்தரவு பண்ணாதே. இங்கே வா"

"ஏம்மா, உனக்கு காய்ச்சல் வந்திடுச்சா?"

அம்மா பதில் பேசாமல் புன்னகையை மட்டும் உதடுகளில் படர விட்டாள்.

அப்பா சொன்னார் -

"நந்தா... நீதான் பப்லு வேணும்னு சொன்னியே? உனக்கும் ஒரு பப்லு வரப் போறான். டாக்டர் சொல்லிட்டார்"

அப்பாவை நம்பமுடியாமல் பார்த்தான் நந்து.

"ஆமாண்டா. இன்னும் ஆறு மாசத்தில் உனக்கும் ஒரு பப்லு விளையாட வந்திடுவான்"

அதைக் கேட்டதும் நந்துவின் மனசுக்குள் ஆயிரம் பலூன்கள் பறந்தன.

அன்று பள்ளியிலிருந்து நந்து வந்த பொழுது அப்பா மட்டுமே வீட்டில் இருந்தார்.

நந்துவுக்கு யூனிஃபார்மைக் கழற்றி விட்டு அவசரமாக வேறு துணியை அணிவித்தார்.

வேகமாகப் பால் கலக்கி நந்துவுக்கு கொடுத்தார்.

அம்மாவைத் தேடிப் பார்த்த நந்து அப்பாவிடம் கேட்டான்.



"நம்ம தலைவர் வாயிலே எந்த இங்கிலீஷ் வார்த்தையும் நுழையாதுன்னு எதிர்க்கட்சிக்காரங்க கேலி செய்யறதைக் கேள்விப்பட்டு, தலைவர் டென்ஷனாகி..."

"ஐயையோ! என்ன செஞ்சாரு?"

"சின்னதா ஒரு ஆக்ஸ்ஃபோர்டு டிக்ஷனரியையே முழுங்கிட்டாரு...!"

— பாஸ்

''இந்த சாமியார் போலி சாமியார்னு நினைக்கறேங்க!''

''எப்படி தெரிஞ்சது?''

''புலனடக்கம்னா என்ன சாமி?ன்னு கேட்டேன். 'புலன் விசாரணை நடத்தறப்ப வாயைத் திறந்து எதையாவது உளறிக் கொட்டி போலீஸில் மாட்டிக்காமல் அடக்கமாக வாயை மூடிட்டு இருந்துடறது தான்'னு சொல்றாரே...!''

— பாஸு



''அம்மா எங்கே போயிட்டாங்க?''

''உனக்கு விஷயம் தெரியுமோ? உனக்கு தங்கச்சி பாப்பா வந்துட்டாள்''

நந்து விழிகளை அகல விரித்தான்.

''பாப்பா எங்கே அப்பா?''

''அம்மாகூட ஆஸ்பத்திரியில் இருக்கிறாள். நாம ரெண்டு பேரும் ஆஸ்பத்திரிக்கு, புது பப்லுவைப் பார்க்கப் போறோம்''

பப்லு மிகவும் அழகாக அமுல் பேபி மாதிரி இருந்தாள். அவளைப் பார்க்க கூட்டம் கூட்டமாக நிறையப் பேர் வந்தார்கள்.

பப்லுவைக் கொஞ்சினார்கள்.

வந்தவர்கள் யாரும் நந்துவைக் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை.

அம்மா பப்லுவை எடுத்து மடியில் இருத்திக் கொண்டாள்.

பப்லுவைப் பார்க்கப் பார்க்க நந்துவுக்கு சந்தோஷம் பிடிபடவில்லை.

பள்ளிக்குச் சென்றதும் சுஜய்யிடம் மிகவும் அலட்டிக் கொள்ளலாம். அவனோட பப்லுவைவிட நந்துவின் பப்லு மிகவும் அழகு. ரொம்பவும் குட்டி.

பப்லுவை இரண்டு நாட்களில் வீட்டுக்கு எடுத்து வந்து விட்டார்கள்.

அவளைத் தொட்டுப் பார்ப்பதற்கே நந்துவை அம்மா விடுவதில்லை.

''நந்தூ, பப்லுவுக்கு தொந்தரவு கொடுக்காதே. போய் வெளியில விளையாடு''

நந்துவின் மனசுக்குக் கஷ்டமாக இருந்தது. பப்லு இல்லாமல் தனியே எப்படி விளையாடுவது?

இப்பொழுதெல்லாம் அம்மா ரொம்பவும் மாறி விட்டாள். நந்துவிடம் 'சிடுசிடு'வென நடந்து கொள்கிறாள். மீறி அழுதால் 'உனக்கென்ன பெரிய பையன்' என்று சொல்லி விடுகிறாள்.

நந்துவை மடியில் உட்கார வைத்து சோறு ஊட்டி விடுவதில்லை. தட்டில் சாதத்தைப் போட்டு நந்துவிடமே கொடுத்து விடுகிறாள்.

நந்துவுக்கு சாப்பிடவே பிடிப்பதில்லை. வெறுமனே சோற்றில் விரல்களால் அளைந்து கொண்டிருந்தால் சாப்பிடச் சொல்லி அம்மா மிரட்டுகிறாள்.

அம்மா அதட்டினால் நந்துவுக்கு 'களுக்'கென்று அழுகை தான் வந்து விடுகிறது.

ஊரிலிருந்து வந்த சவிதா சித்திகூட பப்லுவுக்குத்தான் புதுத்துணி எடுத்து வந்திருக்கிறாள். பொம்மை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறாள்.

பப்லுவைத்தான் அதிக நேரம் எடுத்து வைத்துக் கொஞ்சுகிறாள்.

அப்பொழுதெல்லாம் நந்து ஏக்கத்துடன் சித்தியைப் பார்த்துப் பெருமூச்சு விடுவதோடு சரி.

நந்துவின் பிஞ்சு மனசு உடைந்து போயிற்று.

பள்ளிக்கு வருத்தத்துடன் கிளம்பிச் சென்றான்.

சுஜய் கேட்டான் - ''என்னடா நந்து, உன்னோட பப்லுவை நான் பார்க்க வரட்டுமா?''

நந்துவுக்குக் கண்களில் நீர் கட்டிக் கொண்டது. துக்கம் தொண்டையை அடைத்தது.

''வேண்டாம் சுஜய். என்னோட பப்லுவை ஏனோ எனக்குப் பிடிக்கலை. எங்க அம்மா கிட்ட என்னை விடாமல் பண்றது அவள்தானே?''

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

குறையொன்றுமில்லை

ஜேஷ்டா, கனிஷ்டாவான மூதேவியும் ஸ்ரீதேவியும் உபன்யாஸம் நடக்கிற இடத்தில் எதற்குக் காத்திருக்கிறார்கள்...?

'இந்த சதஸ் எப்போது முடியுமோ...' என்று உதாசீனமாக ஒருத்தர் காத்திருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம்... அவரைப் போய் கெட்டியாகப் பற்றிக் கொள்வாள் அக்கா மூதேவி! எப்படிப் பிடித்துக் கொள்வாள்...? 'துக்க ரூபேண'! அதாவது ஒரு விஷயமும் அவர் காதில் விழாதபடி செய்து விடுவாள்.

யார் உன்னிப்பாக, பக்தி சிரத்தையோடு கேட்டுக் கொண்டிருக்கிறார்களோ அவர்களை தங்கை வரிப்பாள். - மஹாலக்ஷ்மி! அடடா! இவ்வளவு அழகாகக் கேட்கிறாரே என்று சந்தோஷமாக உடனிருப்பாள்.

இந்த விதி உபன்யாஸம் கேட்கிறவர்களுக்கு மட்டும்தானா...? சொல்கிறவர்களுக்கு இல்லையா?...

சொல்கிறவர்களும் பக்தி, சிரத்தையில்லாமல் காலத்தை ஓட்டுவதற்காகச் சொல்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். மூதேவி வந்து கெட்டியாகப் பிடித்துக் கொள்வாளாம்! அதற்காகச் சொல்கிறவர் கூடவா தூங்கிப் போய்விடுவார்...? என்று கேட்கலாம்... சொல்கிறவரை தூக்க ரூபமாக அவள் பிடிப்பதில்லை... அவர் சொல்ல வேண்டிய சுலோகத்தை மறக்கடித்து விடுகிறாள். முன்னுக்குப் பின் முரணான வார்த்தைகளைச் சொல்ல வைக்கிறாள். வாக்கிலே அபசப்தத்தை உண்டாக்குகிறாள்.... பலவிதமாகப் போட்டுப் புரட்டுகிறாள்... ஆகையினால், சொல்கிறவர் வாக்கிலே அமங்கலமான சப்தமெல்லாம் வந்து சேரும். அதே உபன்யாஸகர் பக்தி சிரத்தையோடு சொல்லும்போது அவரை மஹாலக்ஷ்மி வரிப்பாள்.

இதை உத்தேசித்துத்தான் ஆந்திர தேசத்திலே ஒரு வழக்கம். உபன்யாசம் பண்ணும்போதும் சரி, ஹரிகதையிலேயும் சரி... நடுவிலே 'சடார்' 'சடார்', என்று 'ஸ்ரீமத் ரமா ரமண... கோவிந்தா கோவிந்தா...' என்று உரக்கச் சொல்வார்கள். அப்படிச் சொல்லும் போது, மூலை முடுக்கிலே தூங்குகிறவர்கள் எல்லாம் கூட அலறி அடித்துக் கொண்டு எழுந்து உட்காருவார்களாம்... 'ஹா'... என்று! இப்படிப்பட்ட ரீதியிலே, எம்பெருமான் நாமத்தைச் சொல்லும்போது, எல்லோரும் 'ஹா' என்கிறார்கள். எதற்காக அப்படிச் சொல்வது என்றால், இத்தனை நேரமும் சொன்ன விஷயமிருக்கிறதே... அதைக் கேட்காவிட்டாலும் பரவாயில்லை... இனிமேல் சொல்லப் போகிற விஷயத்தையாவது முக்கியமாகக் கேட்க வேண்டும்... என்பதற்காக, இப்படி பகவான் நாமாவைச் சொல்லி எழுப்புவது வழக்கமாகியிருக்கிறது.

ஸ்ரீமத் பாகவதத்தில் எல்லோரும் பார்க்கலாம். சுகப்ரும்மம் அதை சொல்லும்போது 'மஹிபதே!' 'ராஜன்!' என்று இடையிடையே புகுந்து பரீக்ஷித்தைக் கூப்பிட்டுப் பேசுவார். ஏன்...?

பரீக்ஷித் கண்ணை மூடிக் கொண்டு கதையைக் கேட்டுக் கொண்டிருக்கிறான். அவன் கேட்கிறானா இல்லையா என்று சந்தேகம் இவருக்கு...! அவனானால் கண்மூடி அனுபவித்துக் கொண்டிருக்கிறான்....


பகவத் விஷயங்களை கவனிக்கும்படியான தருணத்திலே பலவிதமான இடைஞ்சல்கள் வந்து சேரும். ஆகவே உபந்யாசம் என்று உட்காரும்போது ஜேஷ்டா - கனிஷ்டாவும் வந்து உட்கார்ந்து கொள்வார்கள் என்பதை மறக்கக் கூடாது. சிரத்தையாகக் கேட்க வேண்டும்.

சிரத்தையாகக் கேட்க வேண்டுமானால் ஆகாரத்திலே சுத்தி வேண்டும். ஆகாரத்தில் சுத்தி இருந்தால்தான் புத்தி நல்லபடியாக வேலை செய்யும். நம்முடைய ஞானம் இருக்கிறதே... சங்கோச விகாசங்களுக்கு உட்பட்டது என்பதை விவரிக்கவே இவ்வளவு சொன்னேன். ஒரு சமயம் சங்கோசிக்கிறது; ஒரு சமயம் விகசிக்கிறது.

பகவான் அப்படி அல்ல... அவன் எப்படி இருக்கிறான்...?

'மாசுணா சுடர் உடம்பாய்
மலராது குவியாது...' இருக்கிறான்.

ஒருநாளும் மலர்தலும் இல்லை; குவிதலும் இல்லை. எப்போதும் விகசித்திருக்கிறான்.



அவன் எங்கே வேண்டுமானாலும் இருக்கட்டுமே.... எல்லாவற்றையும் இருந்த இடத்திலிருந்தே உணர்கிறான். அதுதான் சர்வக்ஞத்வம்.

நாம் கூட இந்த சம்சார பந்தத்தை விட்டுவிட்டு மோக்ஷத்தை அடைந்தோமானால் பகவானுக்கு எப்பேர்ப்பட்ட சர்வக்ஞத்வம் இருக்கிறதோ, அதை அடைந்துவிடுவோம். அப்போது அவனைப் போலவே நாமும் எல்லாவற்றையும் உணர முடியும்.

ஆனால், இந்த உலகத்திலே... கர்மாதீனமான இந்தப் பிறவியிலே இந்த த்ருகுணாத்மகமான சக்தி நிறைந்திருக்கும்படியான உலகிலே நமக்கு அந்த ஞானம் இல்லை; சங்கோச விகாசங்களுக்கு உட்பட்டு இருக்கிறோம். பரமாத்மாவோ, ஞானத்தினாலே எங்கும் பரவியிருக்கிறான்.

17

பரவுதல் என்பதைப் பலவிதமாகச் சொல்கிறார்கள். பகவான் ரூபத்தினாலே எல்லா இடத்திலும் பரவியிருக்கிறான். ஸ்வரூபத்தினாலே பரவியிருக்கிறான். ஞானத்தினாலே பரவியிருக்கிறான்.

ரூபத்தோடு பரவியிருக்கிறான் என்பதைக் காட்ட நரசிம்ஹ அவதாரத்தைச் சொன்னோம்.

ஸ்வரூபம்...? எல்லாமே அவனாய் இருப்பதால் அவன் ஸ்வரூபமாகவே இருப்பதால் ஸ்வரூபத்தினாலும் பரவியிருக்கிறான்.



அருள்வாக்கு

மனிதனாகப் பிறந்தவனுக்கு எவ்வளவோ பாக்கியங்கள் உண்டு. எல்லா பாக்கியங்களுள்ளும் மேலான பாக்கியம் பிறருக்குச் சேவை செய்வதே.

'சேவை' என்று தெரியாமலே அவரவரும் தமது குடும்பத்துக்காகச் சேவை செய்கிறோம். அதோடு நமக்குச் சம்பந்தமில்லாத குடும்பத்துக்கு, ஊருக்கு, நாட்டுக்கு சர்வ தேசத்துக்கும் நம்மால் முடிந்த சேவையைச் செய்ய வேண்டும் என்கிறேன். நமக்கு எத்தனையோ கஷ்டங்கள். உத்தியோகத்தில் தொந்தரவு, சாப்பாட்டுக்கு அவஸ்தை, வீட்டுக் கவலை – இத்யாதி இருக்கின்றன. நம் சொந்தக் கஷ்டத்துக்கு நடுவில் சமூக சேவை வேறா என்று எண்ணக் கூடாது. உலகத்துக்குச் சேவை செய்வதாலேயே சொந்தக் கஷ்டத்தை மறக்க வழி உண்டாகும். அதோடு கூட 'அசலார் குழந்தைக்குப் பாலூட்டினால், தன் குழந்தை தானே வளரும்' என்றபடி நம்முடைய பரோபகாரத்தின் பலனாக பகவான் நிச்சயமாக நம்மைச் சொந்தக் கஷ்டத்திலிருந்து கைதூக்கி விடுவான். ஆனால் இப்படி ஒரு லாப நஷ்ட வியாபாரமாக நினைக்காமலே பிறர் கஷ்டத்தைத் தீர்க்க நம்மாலானதைச் செய்ய ஆரம்பிக்க வேண்டும். ஆரம்பித்து விட்டால் போதும், அதனால் பிறத்தியான் பெறுகிற பலன் ஒரு பக்கம் இருக்கட்டும், நமக்கே ஒரு சித்த சுத்தியும், ஆத்ம திருப்தியும் சந்தோஷமும் ஏற்பட்டு அந்த வழியில் மேலும் மேலும் செல்வோம்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

ரூபம் வேறு; ஸ்வரூபம் வேறு. ரூபம் என்பது பார்ப்பதற்கு ரொம்ப ரமணீயமாய், அனுபவிக்க அனுபவிக்கத் தெவிட்டாத திவ்ய மங்களத் தோற்றமாய் இருப்பது.

பகவானுடைய ரூபம் எப்படிப்பட்டது? அது என்ன வர்ணமுடையது? என்பதெல்லாம் எல்லார் மனத்திலும் பதியும்படியாக அவனே எழுதுகிறான்.

ஜிதந்தா ஸ்தோத்ரம் என்று ஒரு ஸ்தோத்திரம் உண்டு. பஞ்சராத்ர ஆராதனை என்கிற சாஸ்திரரீதியாக ஆராதனம் செய்பவர்கள் எல்லாம் இந்த ஜிதந்தா ஸ்தோத்திரத்தை நித்தியம் சொல்ல வேண்டும்.

'அவனுக்கே ஜெயம்; அவனுக்கே மங்களம்; நீ ஜெயித்தாய்; ஜெயித்தாய்...' என்று பகவானைப் பார்த்துச் சொல்லக்கூடிய ஸ்தோத்திரம் இது. இந்த ஸ்தோத்திரம் என்ன சொல்கிறது...?

'உனக்கு ரூபம் கிடையாது!' என்கிறது. 'உனக்கு ஆயுதங்கள் கிடையாது; ஆபரணங்கள் கிடையாது...' என்றெல்லாம் அதிலே வருகிறது.

பாஷ்யக்காரர் ராமானுஜர் எழுதியிருப்பதோ வேறுவிதமாயிருக்கிறது. மூன்று கத்யம் எழுதியிருக்கிறார் அவர். சரணாகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம், வைகுண்ட கத்யம். அதிலே சரணாகதி கத்யம் ஆரம்பிக்கும்போது, வரிசையாக திவ்ய ஆபரணங்களையும் சங்கு சக்கராதிகளையும் விவரிக்கிறது. 'ஹே கருணாநிதே! தயாநிதே!' என்று எத்தனையோ குணங்கள் அவனிடம் இருப்பதைத் தெரிவிக்கிறது. 'ஸ்ரீயினுடைய பதியாய், அவாப்த சமஸ்த காமனாய், சமஸ்த கல்யாண குணோ பேதனாய்...' அவன் இருப்பதைச் சொல்கிறது.

உனக்கு குணமில்லை; ரூபமில்லை, ஆபரணங்கள் இல்லை... என்று ஒரு பக்கம் சொல்லப்படுகிறது. இன்னொரு ஸ்லோகம் இப்படி ஆபரணத்தையும் ஆயுதத்தையும் குணத்தையும் விவரிக்கிறது!

'பகவானுக்கு ஆபரணம் உண்டா இல்லையா?' என்று இரண்டையும் படிக்கக் கூடிய நமக்குச் சந்தேகம் வருகிறது. பகவானுக்கு ஆயுதங்கள் உண்டா இல்லையா...?

மகான்களான ஆசார்யர்கள் இதைச் சமன்வயப்படுத்தி நம் மனத்திலே நன்கு பதியும்படி எடுத்துரைக்கிறார்கள் : அவனுக்கு ரூபமில்லை என்று சொன்னால் என்ன பொருள்...?

அவனுக்கு ரூபமில்லை என்றால், அந்த ரூபம் அவன் பொருட்டு இல்லை... பக்தர்களெல்லாம் பார்த்து அனுபவிப்பதற்காக அழகான ரூபத்தில் பரமாத்மா இருக்கிறான். அந்த ரூபத்தைப் பார்த்து, திருமுடியிலிருந்து திருவடி வரையில் அனுபவித்து அனுபவித்து மகான்கள் பேசுகிறார்கள்!

அவனிடத்தில் ஈடுபடுவதற்காக, பக்தர்களுடைய ஹ்ருதயங்களை ஆகர்ஷிப்பதற்காக, நாம் விரும்பும்படியான ரூபத்தில் இருக்கிறான் பகவான். நாம் வைக்கும்படியான பெயரையும் தாங்குகிறான். ஆகையினால் பரமாத்மா இப்படி பரம பவ்யமாய், நல்ல ரூபத்தோடு காட்சியளிப்பது நாம் அனுபவிப்பதற்காகவே அன்றி அவன் பொருட்டு அல்ல....

ஆயுதங்களைக் கையில் வைத்திருக்கிறானே... அதுவும் அவன் பொருட்டு அல்ல... அவனுக்காக இல்லை அந்த ஆயுதங்கள். நம்மை ரக்ஷிப்பதற்காக அவற்றை வைத்துக் கொண்டிருக்கிறான். தனக்கு வரக்கூடிய இடுக்கண்களைப் போக்கிக் கொள்வதற்காகவா அவன் ஆயுதங்கள் ஏந்துகிறான்?... அவனுக்கு ஏது இடுக்கண்கள்!

ஆபரண விசேஷமும் அப்படித்தான். அது மொத்தம் நமக்காகவே அன்றி அவனுக்காக அல்ல. ஆபரணங்களை அவன் பேரிலே சார்த்தி அழகு பார்க்கிறவர்கள் நாம்தான். 'இவ்வளவு சௌந்தர்யமாய் இருக்கிறானே...'

ஒருத்தர் பெரிய, லட்ச ரூபாய் பெறுமானமுள்ள காசு மாலையைப் பண்ணிப் போட்டார் பகவானுக்கு... கற்பூர ஹாரத்தி பண்ணி, சேவை பண்ணும்போது, 'அடடா! அந்த பரமாத்மா எவ்வளவு அழகாய் இருக்கிறான்...' என்று சொன்னால் அது உபசாரமா அபசாரமா... என்று கவனிக்க வேண்டும்.

அந்தக் காசுமாலை இல்லையென்றால் அவன் அழகாய் இருக்க மாட்டானா...? 'இதனால்'தான் அவனுக்கு அழகு வந்தது என்றால் பொருந்துமா...? அப்படிச் சொல்வதுதான் அபசாரம். இந்தக் காசுமாலை அவன் திருமேனியில் ஏறி எவ்வளவு அழகுபெற்றது என்றல்லவா சொல்ல வேண்டும்...?

நாமெல்லாமும் கூட பகவானுக்கு ஆபரணமாக மாறி அவன் திருமேனியை அலங்கரித்தால் அழகு பெறுவோமேயொழிய நம்மால் அவனுக்கு அழகு என்றா சொல்ல முடியும்... இப்போது இந்த ப்ரக்ருதி மண்டலத்திலே துருப்பிடித்த இரும்பு போல் நாம் இருக்கிறோம். நமக்கெல்லாம் ஆசார்யர்கள் அப்படித்தான் பெயர் வைத்திருக்கிறார்கள் – துருப்பிடித்த இரும்பு!

ஆனால் ஆசார்யர்கள் ரொம்பவும் கெட்டிக்காரர்கள் – துருப்பிடித்த இரும்பு போன்ற நம்மை ஸ்வர்ணாபரணமாக மாற்றி பகவானுடைய திருவடியை அலங்கரிக்கச் செய்கிறார்கள்!

ஆக, 'எம்பெருமானுக்கு ரூபம் இல்லை' என்று சொன்னால் அது அவன் பொருட்டு இல்லை. 'ஆயுதங்கள் இல்லை' என்றால், அவன் பொருட்டு இல்லை. 'சங்கு சக்கர கதாபாணே, துவாரகா நிலையாச்சுதா' என்று அன்றைய தினம் திரௌபதி அழைத்தாள். துவாரகையில் இருக்கிற கிருஷ்ணன் கையிலே புல்லாங்குழல்தான் வைத்திருந்தானே தவிர சங்கு சக்கரம் வைத்திருக்கவில்லை.

திரௌபதி அப்படி ஏன் சொல்கிறாள்...? காரணத்தோடுதான் சொல்கிறாள்! என்ன காரணம் என்று அடுத்த வாரம் பார்ப்போம்

(தொடரும்)

"அரசாங்கத் திட்டத்தைச் செயல்படுத்தினதுக்காகவா உன்னைக் கைது பண்ணினாங்க?"

" 'நமக்கு நாமே' திட்டத்தின் கீழே எனக்கு வேணுங்கிற ரூபாயை நானே அச்சடிச்சுக்கிட்டது தப்பாம்!"

– மேல்மங்கலம் பத்ரா



சென்னை சேத்துப்பட்டிலுள்ள மகரிஷி மகேஷ் யோகியின் தியானப் பயிற்சி மையத்தில் சமீபத்தில், "யோகிக் ஃப்ளையிங் காம்படீஷன்" என்றொரு நிகழ்ச்சி நடத்தினார்கள். அதாவது யோகப் பயிற்சியின் மூலம் உடலை மேலெழும்பச் செய்யும் போட்டி.

இது நமக்கெல்லாம் சாத்தியமா என்ற கேள்விக்குப் போகும் முன்பாக என்னதான் நடக்கிறது என்று நேரில் பார்க்கலாமே என்று உள்ளே போனதில் நிறைய வியப்புகள்.

பெரிய ஹால். தரை முழுவதும் மெத்தைகள் விரிக்கப்பட்டிருந்தன. ஒரு பகுதியில் வெள்ளைச் சீருடை அணிந்த சிலர் கண்ணை மூடிக் கொண்டு ஆழ்நிலை தியானத்தில் ஈடுபட்டிருந்தனர். ஹாலின் மீதி இடங்களில் சாதாரண உடைகளில் நிறையப் பேர் அதே போல தியானம்.

'அதோ அந்த வெள்ளை உடை அணிந்தவர்கள்தான் இன்றைய 'பறக்கும்' போட்டியில் கலந்து கொள்ளப் போகிறவர்கள்' என்று நமக்குத் தகவல் சொன்னார் பெருமாள். நிலையத்தின் பொறுப்பாளர்.

நேரம் ஆக, ஆக, தியான ஈடுபாட்டில் இருந்தவர்களின் உடல் மெல்ல அதிர ஆரம்பித்தது. தலையை வேகமாக ஆட்டியும், உடம்பு அதிரக் குலுங்கியும் அவர்கள் விதவிதமான போஸ்களில்





இருந்தார்கள்.

"ஆழ்நிலை தியானம் மூலம் 'பறக்க' முடியுமா எப்படி சாத்தியம்?" கேட்டோம்.

"ஆழ்நிலை தியான சித்தி பயிற்சி என்று ஒரு ஏழு வாரகால முது நிலைப் பயிற்சி தருகிறோம். அதில் தான் இந்த பறக்கும் நிலை சாத்திய மாகும். இவர்கள் அதைப் பயின்றவர்கள்" என்றார் பெருமாள்.

போட்டிகள் ஆரம்பமாயின.

ஹாலின் நீள வாக்கில் இரண்டு சுவர்களையும் இணைப்பது

• நெல்லை நாயகம்

'பறக்கும்' மனிதர்கள்!

போல ரப்பர் மெத்தைகள் போடப் பட்டிருந்தன. நடுவே இரண்டு இடங்களில் குறுக்கே பாயைச் சுற்றி தடைகள் போல வைத்தார்கள். ஒரு முனையிலிருந்து போட்டியாளர் பத்மாசனம் போட்ட நிலையில் கையைக் கீழே ஊன்றாமல் தவளை போல தத்திக் குதித்து தடைகளைத் தாண்டி அடுத்த முனைக்குப் போக வேண்டும்.

சமிக்ஞை செய்யப்பட்டதும் போட்டியாளர் ஒரு சில வினாடிகள் கண்ணை மூடி தியானத்ததும் உடம்பில் அதிர்வுகள் ஏற்படுகின்றன. அடுத்த வினாடி பத்மாசன நிலையில் தவளையாய் துள்ளிக் குதிக்க அவரால் முடிகிறது. 25 மீட்டர் தொலைவு தடைகள் தாண்டிப் போக வேண்டும்.

அதே போல உயரத்தாண்டுதல். ஆறு அங்குல உயரம் கொண்ட ரப்பர் மெத்தைகளை ஒன்றன் மேல் ஒன்றாகப் போட்டு (மொத்தம் 3) அதாவது ஒன்றரை அடி உயரத்திற்கு - தாண்ட வேண்டும். அதே நிலையில் பத்மாசன நிலையில் அப்படியே எழும்பி மெத்தையின் மேல் அமர வேண்டும்.

வியப்பாகவே இருந்தது. மனித உடலை மனம் இயக்க முடியும் விதங்கள் பற்றி ஆச்சரியம் அதிகரித்தது.

போட்டிகளில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் வில்ஃபிரட். ஜெர்மனியில் இருந்து வந்து இங்கே பயிற்சி தருகிறார்.


• வில்ஃபிரட்

சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொண்டு சாம்பியன் பட்டம் பெற்றிருக் கிறார். இந்த மூன்று போட்டிகளிலும் அவர் கலந்து கொண்டு மிக எளிதாக வெற்றி பெற்றாலும் பரிசு அவருக்கு இல்லை. ஏனெனில் அவர் இப்பயிற்சியில் பல முதுநிலைகளைக் கடந்தவர். நம்மவர்கள் அவரோடு போட்டி போட்டு ஜெயிப்பது இயலாத காரியம். ஒரு காட்சிக்காகவே அவர் கலந்து கொண்டார். 63 செ.மீ. உயரம் வரை அவரால் உயரே போக முடியும். உலகச் சாதனை 80 செ.மீ. (பிரெஞ்சுக்காரர்).

போட்டிகளில் வெற்றி பெற்று பதக்கங்கள் பெற்றவர்களில் ஒருவரான நெல்லை நாயகத்தைச் சந்தித்து சில வினாக்கள்:

"எத்தனை காலமாக இந்தப் பயிற்சி?"

"பத்து வருடங்களாக."

"தினமுமா?"

"ஆம். தினம் ஒன்றரை மணி நேரம். ஞாயிற்றுக் கிழமைகளில் இங்கே வந்து விடுவேன். முழு தியானம்."

"வீட்டில் கூட இது மாதிரி மெத்தைகள் போட்டு வைத்திருக்கிறீர்களா?"

"ஆம்."

"என்ன வேலை?"

"ஆயுள் இன்ஷூரன்ஸ் ஏஜென்ட்டாக இருக்கிறேன். லேபர் கான்ட்ராக்ட் தொழிலும் செய்கிறேன்."


"தியான நிலையில் உடல் மேலெழும்புவது உண்மையானால் நீங்கள் தடை இருக்கும் இடத்துக்கு வரும்போது இங்கே 'பாய்' இருக்கிறது, தாண்ட வேண்டும் என்ற உணர்வுடன்தானே இயங்குகிறீர்கள். விளையாட்டுப் போட்டியில் தடை ஓட்டத்தில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்? இதுவும் ஒரு ஸ்போர்ட்ஸ் தானா? இங்கே மனத்தின் பலம் எங்கே வருகிறது?"

"நாங்கள் இயங்குவது தியான நிலையில்தான். நாம் என்ன செய்கிறோம், எங்கே தாண்ட வேண்டும், எங்கே தடை இருக்கிறது என்பதை உணர்ந்திருந்தாலும் கூட தியான நிலையில்தான் எங்கள் உடலை எழும்பச் செய்ய முடிகிறது. பத்மாசன நிலையில் காலை மடித்துப் போட்டு கையை கீழே ஊன்றாமல் ஒரு மில்லி மீட்டர் சாதாரணமாக எழும்பிக் குதிக்க முடியுமா பாருங்கள்! ஸ்போர்ட்ஸில் ஓடுவதும் இதுவும் ஒன்றாகாதே...."

போட்டியாளர்கள், போட்டி முடிந்ததும் உடல் இவ்வளவு சிரமப்பட்டதற்கான அறிகுறியே இல்லாமல் சர்வசாதாரணமாக சகஜ நிலைக்கு வந்து நடமாடிய போதுதான், தியான மகிமை புரிந்தது.

— ராணிமைந்தன்

படங்கள் : ஸ்ரீஹரி



சந்தன வீரப்பனுக்கு இரண்டாம் பரிசு!

ரயில் எஞ்சின் உருவத்திலேயே ராம்விலாஸ் பாஸ்வான்!

ஆர்டர்! ஆர்டர்! என்று நீதிபதி தட்டுகிற கட்டையால், பின்புறத்தில் தட்டப்படுபவர் எம்.எஸ்.கில் (முந்நாள் பஞ்சாப் போலீஸ் டி.ஜி.பி.)

படகில் இருந்தவர்களைக் கவிழ்த்து விட்ட கேசரி...

காதில் நெல் கதிருடன் 'எளிய விவசாயி' தேவகௌடா...

ரிமோட் கண்ட்ரோலினை இயக்கும் பால்தாக்கரே....

ஒற்றைக் காலில் பொறுமை காக்கும் கொக்காக ஜோதிபாசு.... மாடு போல லாலு... துடைப்பமும் கையுமாய் சேஷன்... நாய்கள் சூழ மேனகாகாந்தி... பிரம்மாண்டமான பணமூட்டையின் வாயில் ஜெ. இப்படி விதம்விதமான பர்சனாலிடிகள். மொத்தம் 300 பேர்.

ஹிந்துஸ்தான் டைம்ஸ் நாளிதழ் நடத்திய கார்ட்டூன் போட்டிக்கு வந்து குவிந்த ஆறாயிரத்திலிருந்து, சலித்து முன்னூறைத் தேர்ந்தெடுத்து, கண்காட்சியாய் வைத்திருந்தார்கள்.

ஸ்டிரோக்குகளில் உள்ள லாகவம், கற்பனைத் திறன் எல்லாம் அசரவைக்கின்றன.


வந்து குவிந்தவற்றுள் பெரும்பாலானவர்கள் கேரிகேசராய் வரையத் தேர்ந்தெடுத்திருந்த பர்சனாலிடி கேசரி! அடுத்து தேவகௌடா. மூன்றாவதாய் லாலு.


'நான் ஒரு தரம் சொன்னா...' என்று ஸ்டைலாய் சிகரெட் பிடிக்கிற ரஜினியைக் கூட ஒருவர் வரைந்திருந்தார். யானி, இம்ரான், பில்கிளிண்டன் போன்ற அயல்நாட்டு பர்சனாலிடிகளும்













உண்டு. மூலிகை பெட்ரோல் புகழ் ராமர் பிள்ளையைக் கூட ஒருவர் கோட்டுச் சித்திரமாய்த் தீட்டியிருந்தார்!

சில பர்சனாலிடிகளை அடையாளம் கண்டுபிடிப்பது சிரமமாக இருந்தது. முதல் பரிசு பெற்ற கேரி கேசர், முன்னாள் ஜனாதிபதி சர்மா. (மேலே பார்க்கவும்.) ரொம்ப சிம்பிளான படம். இரண்டாவது பரிசு சந்தனக் கடத்தல் வீரப்பனுக்கு!

ஐம்பதாண்டு சுதந்தரம் என்ற தலைப்பில் கார்ட்டூன் போட்டியும் உண்டு. அதில் தேர்வானவையும் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

'பளிச்'சென்று மனதில் ஒட்டிக் கொண்ட ஒரு கார்ட்டூன் + வாசகம்.

டீ.வி.யில் அறிவிப்பு :

"தேசிய கீதத்தின் அடுத்த பகுதி, விளம்பர இடைவேளைக்குப் பின்னர் ஒளிபரப்பாகும்."

— மௌஷ்மி

வையவன்

‘‘என்ன தாத்தா, என்ன ஆச்சு?’’

சைக்கிளை வெளியே நிறுத்திப் படியேறியதுமே நர்மதா கேட்டாள்.

அவர் வருகைக்காகக் காத்திருந்த மீனாட்சியும் எழுந்து நின்றாள்.

இருவரையும் மாறி மாறிப் பார்த்தார் அவர். இருவர் முகத்திலும் கிலி. இந்த மனோ நிலையை லகுவாக்க வேண்டும்.

"அபாயம் ஒண்ணுமில்லேம்மா."

இமைகொட்டாமல் அவரையே பார்த்தனர் இருவரும். சுருக்கமாக நடந்ததைத் தெரிவித்தார்.

"இப்ப மோகன்ராஜ் எங்கே?" மீனாட்சி கவலையோடு கேட்டாள்.

"ஆட்டோவிலே வீட்டுக்குக் கூட்டிண்டு போயாச்சு."

"டாக்டர் வந்து பார்த்தாரா?"

"ம்ம்... ஊசி போட்டு மாத்திரை கொடுத்திருக்கார்."

"என்ன சொன்னார்?"

"உள்காயம்தான். நாலஞ்சு நாள்ளே சரியாயிடும்னு சொன்னாராம்."

"நான் பொறப்படறேன் நர்மதா" என்று விடைபெற முனைந்தாள் மீனாட்சி.

"மோகன்ராஜைத்தானே பார்க்கப் போறே? இரு... நானும் வர்றேன். தாத்தா நானும் போய்ட்டு வந்துடறேனே" என்று அனுமதி கேட்டாள் நர்மதா.

சற்று யோசித்துவிட்டு, "சரி... போய்ட்டு சீக்கிரமா வந்துடு... இல்லேன்னா நான் சைக்கிள் எடுத்துண்டு வர வேண்டியிருக்கும்" என்றார்.

இப்படி அவர் சொன்னதேயில்லை.

"ஏன் தாத்தா பயப்படறேளா?"

"பயமில்லே... ஒரு சின்ன கவலை."

"எதுக்கும் அவசியமில்லே. தொணைக்கு மீனாட்சி வர்றா."

நர்மதாவின் முகத்தில் தெரிந்த உறுதி அவருக்குத் திருப்தி அளித்தது.

மோகன் வீட்டிற்குக் குறுக்கு வழியாக இருவரும் நடந்தனர். கோயிலை ஒட்டிச் செல்லும் பாதை அது. ஆற்றங்கரை ஓரமாகப் போக வேண்டும்.

"நான் போன மூணு மாசத்திலே என்னென்னமோ நடந்துண்டிருக்கே! என்னடி மீனாட்சி இதெல்லாம்?"

கோரையும் கற்றாழையும் காடாக மண்டியிருந்த கரையோரத்தில் ஆற்றுமேட்டில் நெளிந்து வளைந்து சென்றது ஒற்றையடிப்பாதை.

முன்னே மீனாட்சி. பின்னால் நர்மதா.

"அதோ அங்கே பாரு" என்று மீனாட்சி இடது கையைத் தூக்கிக் காட்டினாள்.

'தோல் பதனீட்டு ரசா



யனத் தொழிற்சாலைக்காக ஒதுக்கப்பட்ட இடம். பாதுகாக்கப்பட்ட பகுதி' என்று ஒரு பெரிய விளம்பரப் பலகை ஆங்கிலத்தில் அறிவித்தது.

கீழே கொட்டை எழுத்தில் இந்திய அரசாங்க நிறுவனம் என்ற கறுப்பு எழுத்துக்கள்.

"இங்கேதான் அந்த ரசாயனத் தொழிற்சாலையைக் கட்டப் போறாங்க" மீனாட்சி தொடர்ந்தாள்.

கரையை ஒட்டியிருந்த மேட்டுப் பகுதியில் தொடர்ச்சியாகக் கல் கம்பங்கள் நட்டு முள்கம்பி வேலி முளைத்திருந்தது.

கிழக்கும் மேற்குமாக ஐம்பது ஏக்கர் பரப்பிற்குக் கல் கம்பங்கள் நீண்டு சென்றன.

ஒரு கல்கம்பத்தின் மேல் உட்கார்ந்திருந்த மரங்கொத்திக் குருவி அவர்கள் நடையோசை கேட்டுத் திரும்பிப் பார்த்தது. விருட்டென்று எழுந்து பறந்தது.

"கட்டட்டுமே. இதிலே என்ன பிரச்னை? இதுக்கு ஏன் மோகன்ராஜ் அடிவாங்கணும்?"

மீனாட்சி திரும்பி அவளை முறைத்தாள்.

"என்னடீ?"

"தெரிஞ்சு கேக்கறியா... தெரியாம கேக்கிறியா?"


"தெரிஞ்சா ஏன் கேக்கப் போறேன்?"

"ஏற்கெனவே தோல் தொழிற்சாலைக் கழிவு ஊறி ஆத்துத் தண்ணி நாசமாயாச்சு. அதுக்கு மேலே ரசாயனத் தொழிற்சாலைக் கழிவு... இந்த எறக்கத்தைப் பாரு."

மேட்டிலே நடப்பட்டிருந்த

5

கன்னியாகி நிலவினில் ஆடி...



கல் கம்பங்கள் படுக்கை வாட்டில் சரிந்து மேலேறின.

"இங்கேதான் கழிவு பூராக் கூளம் கூளமாக வெளியே வரும். அதுவும் கெமிகல் வேஸ்ட்... நேரடியா வந்து ஆத்திலே கலக்கும்."

"போதும்... புரியுது"

நர்மதா திரும்பி எதிரே பார்த்தாள்.

கரை தாண்டி தூரத்தில் பசுமையில் தலை யாட்டும் பயிர்கள்.

கண்ணுக்கு எட்டிய துரம் வரை தென்னந் தோப்புகள். இடைவிட்டு இடைவிட்டு மாந் தோப்புகள். மீண்டும் பயிர் வரிசை. ஆங் காங்கே நீர் இறைக்கும் மோட்டார் பம்ப் ஷெட்கள்.

அந்தப் பசுமையிலேயே தோய்ந்து சிறிது நேரம் நின்றாள் நர்மதா.

இதற்கு மரண தண்டனை உத்தரவு பிறப் பிக்கப்பட்டது போல் ஒரு வேதனை அவளுள் எழுந்தது.

"இந்தப் பசுமை சிறுகச் சிறுக மாய்ந்து கருகி ஒருநாள் இல்லாமல் போய்விடும். நிரந்தரமாக."

ஒரு வெறுமை அவள் மனசைக் கவ்விற்று.

மீனாட்சியும் அந்த வெறுமையில் பங்கேற் பது போல் மௌனமாக நின்றாள்.

"இந்த எடத்தை சென்ட்ரல் கவர்ன் மெண்ட் ஆக்கிரமிச்சதிலே இருந்து உங்க தாத்தா ஆட்சேபணை எழுப்பிக்கிட்டே இருந் தார். எத்தினி தலைவருங்க எத்தினி அதி காரிங்க... எத்தினி ஆபீஸுங்களைப் போய்ப் பாத்திருக்கார் தெரியுமா?"

நர்மதா திரும்பி மீனாட்சியைக் கவனித் தாள்.

"ஒருத்தர் மாத்தி ஒருத்தரு அவரைப் பாருங்க இவரைப் பாருங்கன்னு காமிச்சுக் கிட்டே இருந்தாங்க."

நர்மதாவின் மனசில் அனந்தாச்சாரி அலு வலகம் அலுவலகமாக ஏறி இறங்கும் காட்சி வந்து போயிற்று.

அவர் சளைக்க மாட்டார். என்றும் எதிலும்.

மீனாட்சி தொடர்ந்தாள்.

"ஒண்ணும் நடக்கலே! கல் கம்பங்க வளர்ந்துகிட்டே போச்சு. ஜனங்களுக்கு மொதல்லே ஒரு கவலையில்லே. அப்புறமா தான் அவங்க தூக்கம் கலைஞ்சுது."

நர்மதா முள்கம்பி வேலியைத் திரும்பி ஒருமுறை பார்த்தாள்.

"இந்த பாக்டரி கட்டறதுக்கு வேண்டிய மணலை நம்ம ஊர் ஆத்துமேட்டிலே இருந்தே தோண்டப் போறாங்களாம். இந்தத் தகவல் கிடைச்சதும்தான் காந்திஜி இளைஞர் சங்கத் தின் சார்பிலே நேரடி மண்டபத்திலே மொதல் எதிர்ப்புக் கூட்டம் போட்டாங்க."

மோகன்ராஜ் வீடு வந்து விட்டது.

பாயில் படுத்திருந்தவன் இருவரையும் பார்த்து எழ முயன்றான்.

"வேண்டாம் எழாதீங்க" என்று தடுத்தாள் நர்மதா.

மீனாட்சியைப் பார்த்ததும் ஒரு புதிய ஒளி அவன் முகத்தில் கூடியது. நர் மதா அதைக் கவனித்தாள்.



"மீனாட்சியைப் பாத் திட்டீங்க இல்லே. சீக்கிரமா தேறிடுவீங்க."

"போங்க சிஸ்டர்" என்று ஒரு பெருமிதத் தோடு அந்தக் கிண்டலை ஏற்றுக் கொண் டான் மோகன்ராஜ்.

அந்த வீங்கிய முகத்தையும் வலது கையில் போட்டிருந்த பேண்டேஜையும் பார்த்து மீனாட்சி முகம் மாறுவதைக் கவனித்தாள் நர்மதா. என்ன கரிசனம்!

அவர்கள் இருவரும் சிறிது நேரம் தனித் திருக்க வேண்டிய அவசியத்தை நர்மதா உணர்ந்தாள்.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, "நான் கௌம்பறேன் மோகன்ராஜ்!" என்று அவனிடம் விடைபெற்றாள்.


"இரு நானும் வந்துடறேன். இவ்வளவு தூரம் வந்து எங்க வீட்டுக்கு வராமே போவற தாவது" என்றாள் மீனாட்சி.

"நாளைக்கு உங்க வீட்டுக்கு வர்றேன்! நீ மெதுவா இருந்து பேசிட்டுப் போ" என்று அவ ளிடமிருந்து கத்திரித்துக் கொண்டு கிளம் பினாள்.

மீனாட்சிக்கும் அவள் ஏன் உடனே புறப்

படுகிறான் என்பது புரிந்தது. ஆனால் நிற்கச் சொல்லி வற்புறுத்தவில்லை.

மீண்டும் வந்த வழியே திரும்பினாள் நர்மதா.



> "மனைவிக்கு பயப்படறவங்கள்ல அவர் தனி ரகம்!"
> "இதுல என்னங்க பெரிய வித்தியாசம் இருக்கப்போகுது?"
> "இருக்குங்க! அவர் யாரோட மனைவியா இருந்தாலும் பயப்படுவார்!"
> — மேல்மங்கலம் பத்ரா

கல் கம்பங்களும் கம்பி முன் வேலிகளும் நெருங்கின.

நின்றாள்.

அங்கே ரசாயனத் தொழிற்சாலையின் புகைப் போக்கிகளிலிருந்து கருநிற வாயுவும் நெருப்புப் பொறிகளும் சிதறும் காட்சி மனசில் ஓடியது.

எதிரே பசுமையின் பாய் விரிப்பு மறைந்து களிமண் மேடிட்ட பாலைவனம் முளைத்து ஆறு தன் முகவரி இழந்து கழிவுச் சாக்கடையாகும் காட்சி அடுத்து வந்தது. இல்லை. கூடாது. முடியாது.

அனந்த சயன பெருமாள் கோவில் ஓரம் அந்த ஒற்றையடிப்பாதை வளைந்து சென்றது.

கோவிலுக்குப் போய்விட்டு வரத் தோன்றியது அவளுக்கு.

பத்து மணி வெயில். வானம் மூடியிருந்ததால் அவ்வளவு உறைக்கவில்லை.

உள்ளே நுழைந்தாள்.

"ஹலோ".

தலைகுனிந்து நடந்து சென்றவள் நிமிர்ந்தாள்.

பத்ரிநாராயணன் நின்று கொண்டிருந்தான். சந்தன நிற ஸபாரி. கூலிங்கிளாஸ். பெர்ஃப்யூம் பார்த்த முகம்.

மீண்டும் ஹலோ சொன்னான்.

பாதிப்பற்ற பார்வையில் அவனைக் கடக்க முயன்றாள் அவள்.

"நீங்க சர்தார் அனந்தாச்சாரி பேத்தி தானே?"

அவள் தலையசைத்தாள்.

"ஐ'ம் பத்ரி நாராயணன். கன்ஸ்ட்ரக்ஷன் எஞ்சினியர். இங்கே அரை கிலோ மீட்டர் தள்ளி ஆத்தோரமா கெமிகல் பாக்டரி ப்ரபோசல் கேள்விப்பட்டிருப்பீங்களே!"

இவனுக்கு என்ன நெஞ்சழுத்தம்?

"நான்தான் அந்த ப்ராஜக்டுக்குப் பொறுப்பு" அவன் புன்னகை செய்ய முயன்றான்.

யார் கேட்டது இதை என்ற பாவனையில் அசிரத்தையாக, "உங்களுக்கு என்ன வேணும்?" என்றாள்.

"கொஞ்சம் பேசலாமா?" அவன் அனுமதி கோரினான்.

அவள் புருவத்தை உயர்த்தினாள்.

"நீங்க எஜுகேடடா இருக்கீங்க. படிச்சவங்களுக்குத் தெரிஞ்ச காலப்போக்கு படிக்காதவாளுக்கு தெரியற சான்ஸ் இல்லே... யூ ஸீ ஃபார் இன்ஸ்டன்ஸ்.. இந்த கெமிகல் பாக்டரி ப்ராஜக்ட் இருக்கறது பாருங்கோ..."

"த்தூ" என்று அவன் பேச்சை வெட்டுவது போல வாய் கொப்புளித்து யாரோ துப்பினார்கள். அவனுக்குப் பின்னால். கோயில் கிணற்றுக்குப் போட்டிருந்த 'பைப்' அடியில்.

பத்ரி திரும்பிப் பார்த்தான்.

பெருமாளைச் சேவிக்க வந்த ஒருவர் குழாயடியில் கால் கழுவிக் கொண்டிருந்தார். அவர் அருகே கழுவி முடித்து வாய் கொப்புளித்த பெரியவர் நின்றார். முகத்தில் விளக்கெண்ணெய் குடித்த நெளிசல்.

"வாழ்ந்தது போ... போ நாகசாமி! தண்ணில கால மட்டும் அலம்பு. வாய் கொப்புளிச்சே கதை கெட்டுடும்..."

"ஏன் அண்ணாத்தே?"

"கோவுல்லே தண்ணி கொளா போட்டிருக்காங்க பாரேன்! தண்ணி ஒரே சவுறுய்யா. இதிலே தான் பெருமாளுக்கு அவுசேகமா? தைலக் காப்புக்குப் பதில் உப்புக்காப்பு போட்டுரும் இந்தத் தண்ணி."

பத்ரி கூலிங்கிளாஸைக் கழற்றி விட்டுத் திரும்பினான். நர்மதாவைப் பார்த்தான்.

'என்ன நீங்க கேட்க உத்தேசிச்சிருந்த கேள்விக்கெல்லாம் பதில் வந்தாச்சா' என்ற மாதிரி இமை ஆடாமல் நர்மதா அவனைப் பார்த்தாள்.

தான் பாதிக்கப்படவில்லை என்று காட்டுவதற்கு பத்ரி முயன்றான். பளிச்சென்று சிரித்தான்.

"கெமிகல் பேக்டரி கட்டறதுக்கு தேவையற்ற எதிர்ப்பு உணர்வு உண்டாறது! ஈஸிண்ட் இட்? பாருங்க. வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பக்கம்... இப்படி..."

இவனை மேலே அனுமதிப்பது தவறு.

"வெல் மிஸ்டர்... உங்களுக்கு என்ன

வேணும்?"

இப்படி ஒரு கேள்வி முகத்தில் அறையுமா? பத்ரி எதிர்பார்க்கவில்லை. ஒருகணம், சமாளித்துக் கொண்டான்.

"ஆக்கவலி.. நேக்கு ஒண்ணும் வாண்டாம்"

"தென்... வாட்ஸ் யுவர் ப்ராப்ளம்?"

அவன் இந்தத் தாக்குதலையும் எதிர் கொண்டான்.

"நேக்கு ஒரு பிரச்னையும் இல்லே. எந்த வளர்ச்சியையும் தடுக்க நெனைக்கப்படாது இல்லியா... அட்லீஸ்ட் ஒங்களைப் போல முற்போக்கு சிந்தனை உள்ளவா?"

"அதாவது நாங்க எதுவும் 'ப்ராப்ளம்' பண்ணிடப்படாது!" அவன் எடுத்துக் கொடுத்தான்.

"எக்ஸாக்ட்லி" அரை சந்தேகத்தோடு அவன் புன்முறுவல் முயற்சி செய்தான்.

"நீங்க பிஸினஸ் அட்மினிஸ்ட்ரேஷன் படிச்சிருக்கேளா?"

"ஒண்டர்ஃபுல். ஒங்களுக்கு எப்படித் தெரியும்?"

அதுதான் முகத்தில் சமர்த்து வழிகிறதே என்று மனசிலும் "யூ ஆர் எ வெரிகுட் லயஸன் ஆபிசர்" என்று வாய்விட்டும் சொன்னாள் நர்மதா.

"தாங்க்யூ" அவன் புன்னகை அகன்றது.

"சேல்ஸ் மேனேஜரா போயிருந்தா இன்னும் பிரகாசமா வந்திருப்பீங்க."

பத்ரி அசடனல்ல. அந்த வஞ்சப் புகழ்ச்சியை கசப்பு காட்டாமல் விழுங்கினான்.

"பாத்தீங்க இல்லே" என்று குழாயடியிலிருந்து கர்ப்பக்கிரகத்துக்குப் போகிறவர்களைத் தலையசைத்துச் சுட்டிக்காட்டினாள்.

"நல்ல தண்ணி வேணும் மிஸ்டர்... பெருமாளுக்கு மட்டுமில்லே. மனுஷாளுக்கு... மாட்டுக்கு... பயிருக்கு. அதை ஒங்களாலே மீட்டுத் தர முடியுமா?" ஆத்திரமின்றி அவள் கேட்டாள்.

"நீங்க பொல்யூஷன்... எகாலஜி பேசறேள்... பட் யூ ஸீ.." அவன் மேலே வளர்க்க முயன்றான்.

நர்மதா அமைதியாக இடைமறித்தாள்.

"போஸ்ட்மேன்...! ஏதாவது கவர் இருக்கான்னு பாருங்க...?

"ஒண்ணும் இல்லே சார்..."

"நல்லா பாருங்க... கதை எழுதி அனுப்பி ரொம்ப. நாள் ஆச்சு. இன்னும் திரும்பி வரலை..!"

— சீர்காழி வி. ரேவதி



"தண்ணீர் மிஸ்டர் எஞ்சினியர்... தண்ணீர் அது வெறும் எகாலஜி இல்லே. சோஷாலஜி.. சோஷல் சைகாலஜி. பேதாலஜி... நெப்ராலஜி... நியூராலஜி... பாக்டீரியாலஜி.. வாட் நாட்... தண்ணியோட எல்லாமே இன்டர்லிங்க்ட்... த ஹோல் நேஷன்... த ஹோல் ப்யூசர் ஆஃப் மேன்கைண்ட்..."

தன்னையறியாமல் நர்மதா வலது கைப் பெருவிரலால் உதட்டுக்கு நேரே குடிதண்ணீர் சமிக்ஞை காட்டியவள், தன்னுணர்வால் சட்டென்று கையை விலக்கிக் கொண்டாள்.

பத்ரியின் பார்வை மாறுபட்டிருந்தது. அவன் கண்ணிலும் முகத்திலும் அவள் மீது அவனுக்கு ஏற்பட்டிருந்த சுவாரஸ்யம் தெரிந்தது. அவன், அவள் உதடுகளையே பார்த்தான். அவள் பெருவிரல் சுட்டிய சிவந்த உதடுகள்.

நர்மதா அவன் கண்களைத் தவிர்த்து, தலைக்கு மேலே பறந்த கருடனைப் பார்த்தாள்.

"இதெல்லாம் வீண் புரளி மிஸ். ஐ கேன் ப்ரூவ்... எகோ ப்ரண்ட்லியா சுற்றுச் சூழல் பாதுகாப்பா ஆர்க்கிடெக்ட் பில்டிங் டிஸைன் பண்ணியிருக்கார். நாங்க கட்டறச்சே..."

பத்ரி நிரூபிக்கத் துடித்தான். அவள் கண்களை மூடிக் கொண்டாள்.

"மிஸ்... மிஸ்..." என்று இழுத்தான். அவள் பெயர் அறியும் முயற்சியில்.

உனக்கு என் பெயர் தேவையில்லை. நர்மதா நினைத்தாள்.

"ஒரு சின்ன ஹெல்ப்..." என்று கேட்டாள்.

"சொல்லுங்க மிஸ்."

"உங்க கம்பெனி எம்.டியைப் பாப்பேளா?"

"ஜஸ்ட் ஹாபனவர்லே ஸைட்டுக்கு வரப்போறார். அவர்ட்டே என்ன ஹெல்ப் வேணும்?"

"மோஹன்ராஜ்னு ஒரு ஆட்டோ டிரைவரை யாரோ ஆள் வச்சு அடிச்சிருக்காங்க. பாக்டரி கட்டற பிரச்னையாலே யாண்ணு எங்களுக்கு சந்தேகம்."

அவன் முகம் மாறியது.

"நேக்குத் தெரியாதே!"

"ஒங்களுக்குத் தெரிய நியாயமில்லே. இந்த மாதிரி விஷயத்தையெல்லாம் எஞ்சினியர்ங்ககிட்டே டிஸ்கஸ் பண்ணியா செய்வா. அதுவும் குண்டாஸ் விவகாரம். ஊர் ரொம்ப கொதிப்பேறியிருக்கு. ஒங்க எம்.டிட்டே ஒரு வார்த்தை சொல்லி வைங்கோ. பாவம் யாராவது அவர் பேர்ல பழியைப் போட்டுடப்படா தோண்ணோ..."

"ஓகே" அவன் முகம் வெளிறியது.

எனினும் அவன் கண்கள், அவளைக் கடந்து கோயில் மூலஸ்தான வாயிலில் நுழையும் அவளையே பின்தொடர்ந்தன.

(தொடரும்)

"கை" வைத்தியம்

உடலின் எந்த பாகத்தில் ப்ளாஸ்டிக் சர்ஜரி அதிக அளவில் செய்யப் படுகிறது? மூக்கு? கன்னம்? மார்பகம்? இவற்றில் எதுவுமில்லை - கை!

அமெரிக்காவில் மட்டுமே ஒரு வருடத்திற்கு சுமார் ஒன்றரை லட்சம் பேரின் கைகளில் ப்ளாஸ்டிக் சர்ஜரி சிகிச்சை நடைபெறுகிறது! இந்தியாவிலும் ப்ளாஸ்டிக் சர்ஜரியில் முன் நிற்பது கைகள்தாம். என்ன காரணம்?

உடலின் மற்றப் பகுதிகளைவிட கைதான் அதிக ஆபத்திற்கு உள்ளாகிறது. பல்வேறு கருவிகள், ஹீட்டர், தீக்குச்சி, குக்கர், கத்தி - இவற்றுடன் உரசி உறவாடி (உடலின் மற்ற பாகங்களுக்கு இல்லாத) ரிஸ்க்கை ஏற்றுக் கொள்வது கைதான்!

சொல்லப் போனால் கைகளுக்குச் செய்யப்படும் ப்ளாஸ்டிக் சர்ஜரி சிகிச்சைக்கு முக்கியக் காரணம் அழகான தோற்றம் அல்ல; அவசியம். மீண்டும் கையை இயங்க வைக்க வேண்டும் என்ற காரணத்தினால்தான் பெரும்பாலான ப்ளாஸ்டிக் சர்ஜரிகள் கைக்கு செய்யப்படுகின்றன!



இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த கைகளை சரியாகப் பராமரிப்பது மிக அவசியம்தானே!

- வீட்டில் டிடர்ஜெண்டுகள், பாலிஷ்கள், சுத்தப்படுத்தும் திரவங்கள் இவற்றிற்கு நேரடியாக பலியாவது நம் கைகள்தான். அந்தப் பொருள்களில் உள்ள ரசாயனங்கள் நம் கையில் உள்ள நீர்ச்சத்தை முழுவதுமாகவே உறிஞ்சிக் கொள்கின்றன. இதனால் கைப்பகுதி உலர்ந்து போய் வெடிப்பு ஏற்படுகிறது. எனவே மேற்படி பொருள்களைக் கையாள நேர்ந்தால், உடனே கைகளை நன்கு கழுவிக் கொள்ளவும்.

- குளிர்காலம் கைகளுக்குச் சோதனைக் காலம். உலர்ந்த குளிர்க்காற்று கையில் உள்ள ஈரப்பசையை ஈர்த்துவிடுகிறது. இதற்கு சருமத்தில் ஈரப்பசையை வைத்திருக்க உதவும் லோஷன்களைப் பயன்படுத்தலாம். மணம் வீசாத, கொசகொசவென்றில்லாத லோஷனைப் பகல் வேளைக்கும், கலபத்தில் உலராத, அதிக க்ரீம் கொண்ட லோஷனை இரவு வேளைக்கும் தேர்ந்தெடுப்பது நல்லது. லோஷன்கள் என்பது வெறும் பொம்பளைங்க சமாசாரம் மட்டுமல்ல. ஆண்களின் கரங்களும் பாதுகாக்கப்பட வேண்டியவையே. விரல் நகங்களுக்குக் கீழ்ப் பகுதியிலும், விரல்களுக்கு இடையே உள்ள பகுதியிலும் லோஷனைக் கஞ்சத்தனமில்லாமல் தடவுங்கள்.

- வெந்நீரில் விரல்கள் படுவதை தவிர்க்கப் பாருங்கள். அதேபோல் குழைத்தவுடனேயே விர்ரென்ற உணர்வை ஏற்படுத்தும் சோப்புகளையும் தவிர்க்கவும்.

- படை, சொரி, எக்ஸிமா - கேட்கவே பலருக்கு அருவருப்பாக இருக்கும் இந்த நோய்கள் அரிப்பு, சிவப்பாதல், வெடிப்பு, நீர் வெளியேறுதல் என்று பலவித வடிவங்களை எடுக்கலாம். எந்தப் பொருளைக் கையாண்டதால் இப்படி நேர்ந்தது என்பதை மூளையைக் கசக்கிக் கண்டு பிடித்து, அதைத் தவிர்த்து விடுவதே புத்திசாலித்தனம்.

- சில லோஷன்களில் அடங்கியுள்ள சில ரசாயனப் பொருள்கள் (நியோமைசின் போன்றவை) ஒரு சிலருக்குக் கையில் அரிப்பு உணர்வை உண்டாக்கலாம். அலர்ஜி தவிர்க்க, வெள்ளை பெட்ரோலிய ஜெல்லியை லோஷன்களுக்குப் பதிலாகத் தடவிக் கொண்டு நிம்மதியாக இருங்கள்.

- யாராவது கையுறைகளை மாட்டிக் கொண்டாலே அவர் கொலை செய்யப் போகிறார் என்று முடிவெடுக்கும் அளவுக்கு தில் சினிமாக்கள் நம்மைப் பழக்கிவிட்டன! ஆனால் ப்ளாஸ்டிக்கும் பருத்தியும் சம அளவில் கலந்துள்ள கையுறைகளைப் பயன் படுத்துவது கைக்கு ரொம்பவே நல்லது.

- மணிக்கட்டுப் பகுதியில் அழுத்தமான ரப்பர் மற்றும் எலாஸ்டிக் பாண்டுகளைப் போட்டுக் கொள்ளும் நாகரிகத்தை நிறுத்திக்



கொள்ளுங்கள். இது கைப் பகுதியை ரொம்பவே பாதிக்கக் கூடும். அவ்வப்போது மோதிரத்தைக் சுழற்றி அதன் உள்பகுதிகளை சுத்தம் செய்யத் தவறாதீர்கள்.

• மன இறுக்கம் இருந்தால்கூட (முக்கியமாகப் பெண்களுக்கு) அது கைப்பகுதியில் நோயாக வடிவெடுக்கலாம் என்று ஆராய்ந்து கூறி ஆச்சர்யப்பட வைக்கிறார் பென்ஸில்வேனியா மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் பெர்னார்ட் என்பவர்.

ஒரு சந்தோஷமான விஷயமும் உண்டு. கைப்பகுதி என்னதான் தினசரி வாழ்வில் பாதிக்கப்பட்டிருந்தாலும், தகுந்த முறையில் பாதுகாக்கத் தொடங்கினால் மீண்டும் பழைய பொலிவுடன் விளங்கத் தொடங்கிவிடுமாம். காரணம் கைப்பகுதியில்-உள்ள தோல் அந்த அளவுக்குத் தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ளும் தன்மை கொண்டது என்கிறார்கள் மருத்துவர்கள்.

— அருண் சரண்யா



"நீங்க பல தடவை முயற்சி பண்ணியும், நீங்க எழுதின ஜோக் எதுவும் எந்த ஒரு பத்திரிகையிலேயும் வராம இருக்கலாம். ஆனா அதுக்காக, உங்க கல்யாணப் பத்திரிகையின் பின் பக்கத்தில் உங்களோட ஜோக்குகளை அச்சிட்டிருக்கிறது கொஞ்சம்கூட நல்லால்லே!"

— வலங்கைமான் நூர்தீன்



"உன் புருஷன் ஏன் பரண் மேல ஏறி ஏறி இறங்கறார்?"

"ரயில்ல வழக்கமா லோயர் பர்த்ல படுத்துக்கிட்டுப் போயிடுவார்; இந்தத் தடவை அப்பர் பர்த்தான் கிடைச்சுது... அதனாலதான் பழகிக்கிறார்!"

— ராதா வாசுதேவன்

லாட்டரி மோகம்... லாபம் ஏராளம்!

இந்தியாவின் வடகிழக்கு மூலையில் இருக்கும் மாநிலங்கள் - நாகலாந்தும், மணிப்பூரும். ஆனால் அந்த மாநில அரசுகள் வெளியிடும் லாட்டரி சீட்டுகளின் பெயர்களை கவனித்திருக்கிறீர்களா? தமிழ் ராசி, தமிழ் லட்சுமி, தங்கச் சுரங்கம்....

நாகலாந்து, மணிப்பூர் அரசுகளின் லாட்டரியில் தமிழ்ப் பெயர்கள் எப்படி சாத்தியம்? மதுரை கே.ஏ.எஸ். சேகரை சந்தித்துக் கேட்டோம்.



• சேகர்

"அந்த லாட்டரிகளை நடத்துவது மட்டும்தான் நாகலாந்து, மணிப்பூர் அரசுகளே தவிர, அதன் நூறு சதவீத விற்பனை தமிழ்நாட்டில்தான். எனவேதான் தமிழிலேயே பெயர் சூட்டி, தமிழிலேயே அச்சடிக்கிறார்கள்" என்றவர் தொடர்ந்து "இந்தியாவில் விற்பனையாகும் லாட்டரிச் சீட்டுகளில் எழுபது சதவீதம் தமிழ்நாட்டில்தான் விற்பனையாகிறது. மீதி மாநிலங்கள் அனைத்திலும் சேர்த்து விற்பனையாவது முப்பது சதவீதம்தான். எனவேதான் பல வடக்கத்தி மாநிலங்கள் தமிழ்நாட்டைக் குறிவைத்தே லாட்டரி சீட்டுக்களை ஆரம்பிக்கின்றன" என்றார்.

நம்மவர்களின் லாட்டரி மோகம் லேசுப்பட்டதா?

இப்படிப் பிற மாநிலங்கள் தமிழகத்தில் முற்றுகையிட்டு தமிழகப் பணத்தை அள்ளிக் கொண்டு போவதை தடுப்பதற்காக ஜெயலலிதா ஆட்சியில் பிற மாநில லாட்டரிகளுக்கு தடைச் சட்டம் போடப்பட்டது. ஆனால் அது சுப்ரீம் கோர்ட்டின் மூலம் நீக்கப்பட்டு விட்டது.

இப்படி நமது மாநிலத்தின் பணத்தைப் பிற மாநிலங்களுக்கு தாரை வார்ப்பது பற்றி என்ன நினைக்கிறார்கள்?

"கண்டிப்பா வருத்தம்தான்!" என்கிறார் சேகர். "ஆனால் பல லட்சம் முதலீடு போடும் தொழிலில் அதிக பட்ச லாபம்தான் யாருக்குமே குறிக்கோளாக இருக்கும். பிற மாநில அரசுகள் நடத்தும் லாட்டரியில் எங்களுக்கு லாபம் அதிகம். எனவேதான் தமிழக அரசின் லாட்டரியில் பெரிதாக அக்கறை செலுத்துவதில்லை."

லாப விகிதம் எப்படி மாறுபடுகிறது?

"பிற மாநில அரசுகள் டிக்கெட்டுகளை அச்சடித்ததும் மொத்தப் பரிசுத் தொகைக்கு மேல் ஒரு லாபமும் வைத்து அந்தத் தொகையைப் பெற்றுக் கொண்டு மொத்த விற்பனை உரிமையையும், டிக்கெட்டுகளையும் ('ஆர்கனைஸர்' என்று கூறப்படும்) தனி நபர்களிடம் கொடுத்து விட்டு ஒதுங்கிக் கொள்கின்றன. இதனால் அந்த அரசுகளுக்கு நஷ்டம் வர வாய்ப்பே இல்லை. அதே நேரம் - ஆர்கனைஸர்கள் கைக்கு வரும் ஒரு ரூபாய் டிக்கெட் ஒன்றின் மதிப்பு வெறும் பதினேழு பைசா அளவுக்குத்தான் இருக்கும். மீதி 83 சதவீதம் விற்பனைப் பிரிவுக்குத்தான். இது போக, பரிசுகள் நிர்ணயிக்கப்படுவதிலும் விற்பனையாளர்களுக்கு அதிக சலுகை உண்டு. சீட்டு வாங்கிய ஒருவருக்கு 500 ரூபாய் பரிசு விழுந்தால், அந்தச் சீட்டு விற்பனையாளர்களுக்கு 1000 ரூபாய்க்கு மேல் பரிசு தரப்படுகிறது. இதனால்தான் பல விற்பனையாளர்கள் ஒரு ரூபாய் மதிப்புள்ள சீட்டை வாங்கிய விலைக்கே (சிலர் வாங்கிய விலைக்கும் குறைவாகவே) 60 பைசா, 70 பைசா என்று விற்கிறார்கள்."

லாட்டரிச் சீட்டுகளில் போலி லாட்டரி, (சுரண்டும்) உடனடி லாட்டரியில் பரிசில்லா சீட்டுகளில் மீண்டும் மூலாம் பூசுவது போன்றவையெல்லாம் சாத்தியமான உண்மைகள்தானா?

"சாத்தியம்தான். ஆனால் அப்படி நடைபெறுகிறது என்பது பெருமளவில் உண்மையில்லை. ஓப்பன் லாட்டரியில் லாப விகிதம் 83 சதவீதம் எனும் போது போலி லாட்டரி அச்சடிக்கப்பட வேண்டிய அவசியமே ஏற்படாது. உடனடி லாட்டரிகளில் லாபம் குறைவு என்றாலும் விற்பனை விகிதம் அதிகம் என்பதால் அதே அளவு வருமானம் வந்து விடுகிறது. தினம், தினம் அங்கீகரிக்கப்பட்ட லாட்டரிகளே வந்து குவிந்து கொண்டிருக்கும்போது இந்த ஏமாற்று வேலைகளுக்கு அவசியமே இல்லை" என்றார் கே.ஏ.எஸ். சேகர்.

சந்திப்பு : **எஸ்.ஜே. இதயா**

படம் : **ராஜாமணி**

ஜோக் டைம்

சிறப்பு நீதிமன்றத்துக்கு வரும்




"கமலா, இந்த நாடு உருப்படாது!"

"ஏன், என்னாச்சு?"

"விசாரணைக்கு சிறப்பு நீதிமன்றத்துக்கு வரும் சிங்காரத் தலைவரே வருக, வருக'ன்னு வழியெல்லாம் நோட்டீஸ் அடிச்சு ஒட்டியிருக்காங்க!"

— டி. என். பாலகிருஷ்ணன்



"எங்க ஊர்ல பழைய நிலைமை திரும்பிடிச்சாம்..."

"அப்ப, கலவரமெல்லாம் ஓய்ஞ்சிடிச்சாமா...?"

"இல்லை. மறுபடியும் கலவரம் ஆரம்பிச்சிடிச்சாம்...!"

— செங்குன்றம் கே. ரமேஷ்ராமன்



"நேத்து வரை படுத்த படுக்கையா இருந்த நம்ம தலைவர், இன்னிக்கு இவ்வளவு உணர்ச்சிவசமா சிறப்புரையாற்றுகிறாரே எப்படி?"

"குளுகோஸுக்கு பதிலா சோடாவை 'டிரிப்' ஏத்திட்டாங்களாம்!"

— நெல்லையப்பபுரம் செல்வன்

சிங்காரத் தலைவரே, வருக வருக!

''இங்க பாரும்மா, இருக்கிறதே மொத்தம் மூணு கலர்தான்; உன் புடைவை கலருக்கு மேட்சா நீ கேக்கற மாதிரி கலர்ல ரேஷன் கார்டு கொடுக்க முடியாது!

— ஏ.ஜி. வல்லபதாஸ்





''எனக்கு, எல்லாத்திலேயுமே, அல்ப சந்தோஷந்தாண்டி!''

''ஏண்டி அப்படிச் சொல்றே?''

''பின்னே என்னடி? போன வாரம் 'மாமியார் சீரியஸ்'ஸுன்னு தந்தி வந்திச்சு; இந்த வாரம், 'உடம்பு பரவாயில்லே'ன்னு லெட்டர் வந்திருக்கு...!''

— தேவந்தி துரைராஜ்

''ஏண்டா அழுவறே?''

''அம்மா அடிச்சிட்டாங்க!''

''அப்பா எங்கே?''

''அவர் வீட்டுக்குள்ளேயே அழுதுகிட்டு இருக்காரு!''

— கு. உதயபாரதி



இருவேறா

காவிரி நீர் பிரச்னை மற்றும் தீர்வு பற்றி கருத்தரங்கு ஒன்றை சமீபத்தில் ஏற்பாடு செய்திருந்தது, பண்ருட்டி ராமச்சந்திரனின் மக்கள் நல உரிமைக் கழகம்.

பல முன்னாள் ஐ.ஏ.எஸ்.களும், தஞ்சை விவசாயிகள் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட இந்தக் கருத்தரங்கத்தில் கணிசமானவர்கள் எழுப்பிய கேள்வி இதுதான்: ''லாலு பிரசாத் கட்சியை சேர்த்துக் கொள்ளாவிட்டால் ஐக்கிய முன்னணி அரசிலிருந்து விலகிவிடுவதாக அறிவித்த கலைஞர், காவிரி நீர் பிரச்னையில் நீதிமன்றத்தின் ஆணையை கர்நாடக அரசு உடனடியாக நிறைவேற்றா விட்டால் - அதற்கு மத்திய அரசு உத்தரவிடாவிட்டால், ஆதரவை விலக்கிக் கொள்வோம் என்று ஏன் கூறவில்லை?''

• கார்த்திகேயன்





காவிரி நீர் பிரச்னையைப் பற்றி பலரும் உணர்ச்சி பொங்கப் பேசினார்கள்.

''எங்கள் பிழைப்பைக் கெடுத்து. இதில் அரசியல்வாதிகள் பிழைப்பு நடத்துகிறார்கள். வீரேந்திர பாட்டீலும், குண்டுராவும் இறந்து விட்டார்கள். ஹெக்டே முகவரியில்லாமல் போய்விட்டார். தேவேகௌடாவின் இறங்கு முகம் தெரிந்ததுதான். கர்நாடக முதல்வர் படேலுக்கு ஓர் எச்சரிக்கை. எங்கள் வேதனை உங்களைச் சும்மா விடாது'' என்றார் காவிரி டெல்டா விவசாயிகள் கூட்டமைப்பின் தலைவர் ரங்கநாதன்.

பிரச்னையின் பாதிப்புகள் ஓரளவாவது எல்லோரும் அறிந்தவைதான். தீர்வு என்ன?

அமெரிக்காவை (எதிர்பார்த்தது போலவே) உதாரணம் காட்டினார் டாக்டர்.எம்.எஸ். உதயமூர்த்தி. ''கல்வி அனைவருக்கும் சமம் என்று நாட்டில் சட்டமே இருக்க, அலபாமா மாகாண கவர்னர் ஒருவர் குறிப்பிட்ட பல்கலைக் கழகத்தில் வெள்ளையர் மட்டுமே சேரலாம் என்று அறிவித்தார். அனுமதி பெற வந்த கருப்பர் இன மாணவரை நேரடியாக அவர் தடுக்க, விஷயம் காதுக்கு எட்டியவுடன் ஜனாதிபதி ஜான் கென்னடி அந்த கவர்னரை சிறையில் அடைக்க உத்தரவிட்டார். அந்த மன திடம் இங்கு மத்திய அரசிடம் இருந்தால் பிரச்னை தீர்ந்துவிடும்! மாநில அளவிலேயே கூட இதற்கு ஒரு வழி உண்டு. நெய்வேலியிலிருந்து - அதுவும் எடுக்க எடுக்க குறைந்துவிடுகிற தன்மை கொண்ட - மின்சாரத்தை நாம் அளித்துக் கொண்டிருக்கிறோம். இதை நிறுத்தினால் பெங்களூரே இருண்டு போகும். பிரச்னைக்கு விடிவு கிடைக்கும்.

''ராஜ தந்திரத்துடன் இன்னொரு காரியத்தையும் செய்யலாம். பக்கத்து மாநிலங்களுடன் (மகாநதி பங்கீடு, ஆல்மட்டி அணை விவகாரம் போன்றவற்றின் காரண மாக) முறைத்துக் கொண்டு நிற்கிறது கர்நாடகம். இந்த சமயத்தில் மகாராஷ்டிரம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களோடு தமிழ்நாடு சேர்ந்து கொண்டு கர்நாடகாவைத் தனிமைப் படுத்தும் முயற்சியில் இறங்கலாம்'' என்றவர், ''நம் அரசியல்வாதிகள் உரிமைக்காக 'குரல் கொடுத்தது' போதும். இனியாவது செயல்படட்டும்!'' என்றார்.

• எம்.எஸ். உதயமூர்த்தி

''மிகவும் கவனத்தோடு அணுக வேண்டிய பிரச்னை இது. இல்லையென்றால் பெங்களூரில் வாழும் தமிழர்களுக்கு

காவேரி?

இது சிக்கலை ஏற்படுத்தும். பத்தாயிரம் பேர் கடப்பாரையுடன் சென்று கர்நாடக நீர்த் தேக்கத்தை இடித்தால் பிரச்னை தீரும்'' என்றார் பட்டுக்கோட்டை ஸ்ரீநிவாச ஐயர். ''இந்த சட்ட மீறல் வழியெல்லாம் சரியில்லை. என்றாலும் கர்நாடக அரசுக்கு அரசியல் நிர்ப்பந்தத்தை தமிழக அரசு உண்டு பண்ண வேண்டும். அதுதான் தீர்வு'' என்றார் முன்னாள் தலைமைச் செயலாளர் கார்த்திகேயன்.

''குழுவில் நிபுணர்கள் மட்டுமே இருக்கக் கூடாது. திறந்த மனமும், தைரியமும் கொண்ட சில நடுநிலைமையாளர்களும் அதில் பங்கேற்க வேண்டும். ஏனென்றால் சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்கள் இந்தப் பிரச்னை தொடர்வதையே விரும்புவது இயற்கை. அப்போதுதானே அவர்களுக்குத் தொடர்ந்து அதிகத் தொகை கிடைத்துக் கொண்டே இருக்கும்?'' இப்படித் தனது கருத்துக்களை வெளியிட்டார் முன்னாள் தலைமைப் பொறியாளர் (விவசாயம்) மணவாளன்.

கர்நாடக மாநிலத்திற்கு அளிக்கும் நிதித் தொகையை மத்திய அரசு நிறுத்திவிட்டால், தானாக இறங்கி வருவார்கள் என்ற அதிரடி யோசனையை வெளியிட்டார் மக்கள் நல உரிமைக் கழகத்தின் தலைவர் வைத்தியலிங்கம்.

''இந்தப் பிரச்னையைத் தீர்க்க 356ம் பிரிவைப் பயன்படுத்த வேண்டுமென்பது நடைமுறைக்கு ஒத்து வராது. காரணம் அந்தப் பிரிவே சரியா இல்லையா என்பதைப் பற்றி பட்டிமன்றம் நடக்கிறதே இங்கே'' என்றார் உழவர் உழைப்பாளர் கட்சித் தலைவர் செல்லமுத்து. ''மகா பாரதத்தில் கிருஷ்ணன் தூது போனது போல பண்ருட்டியார் கர்நாடகத்திடமும், மத்திய அரசிடமும் தூது போக வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.


> ''பத்தாயிரம் பேர் கடப்பாரையுடன் சென்று கர்நாடக நீர்த் தேக்கத்தை இடித்தால் பிரச்னை தீரும்''

இறுதியாகப் பேசிய பண்ருட்டி ராமச்சந்திரன், ''அறிவார்ந்த முறைகள் தோற்றுப் போகும்போது ஆயுதப் போராட்டம் அரங்கேறும். நாம் தோற்றால் பிரச்னை கை விட்டுப் போய்விடும். பிறகு கட்டுப்படுத்த முடியாது. நம்மைப்போல நான்கு மடங்கு நீர்வளம் கொண்ட கர்நாடகம் நம் நியாயத்தை உணர வேண்டும். மத்திய அரசு தெளிவான சிந்தனையோடும் இரும்புக் கரத்தோடும் செயல் பட வேண்டும். முதலில் தனது நிலையை அது தெளிவாக்க வேண்டும். தனது ராணுவத்தை அனுப்பியாவது(!) நீதிமன்றத் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டும். நாமே ஒரு ராணுவத்தை உருவாக்க வழி வகுக்காமல் செயல்பட வேண்டும்'' என்றார்.

— ஜி.எஸ்.எஸ்

• பண்ருட்டி ராமச்சந்திரன்





அரசுத் தூதுவராக சந்தன வீரப்பனைச் சந்தித்து வந்தார் 'நக்கீரன்' ஆசிரியர் கோபால். அவர் திரும்பி வரும்வரை வீட்டில் பதைபதைப் போடு காத்திருந்த அவரது மனைவி. விஜயலட்சுமி, தம் தவிப்பை நம்மிடம் சொன்னார் :

"எனக்குக் கொஞ்ச நாளாகவே சந்தேகம்தான். நான் பக்கத்துல இருந்தா அவர், டெலிபோன்ல ரொம்ப மெது வான குரல்ல பேசுவார். சில சமயம், 'நானே அப்புறமா டெலிபோன் பண்ணறேன்'னு சொல்லிடுவாரு. ஆனா, பேப்பர்ல எல்லாம் இவரு அரசாங்கத் தூதுவரா வீரப்பனைப் பார்க்க மறுபடி போறாருன்னு எழுதிக்கிட்டே இருந்தாங்க. அதைப் பத்தி நான் கேட்டபோதெல்லாம், 'இல்லை. கவலைப்பட சொன்னாலும், நான் போக போறது இல்லை. தம்பிங்கதான் போறாங்க. அவசியம்னா நான் ஈரோடு போய் வர வேண்டியிருக்கும்'னு சொல்லிட்டாரு.

"சனிக்கிழமை சாயங்காலம் ரெண்டு முதலமைச்சர்களும் பாது காப்புக்கு உத்திரவாதம் கொடுக்கிறதா கையெழுத்து போட்டுக் கொடுத்த ரெண்டு லெட்டர்களைக் காட்டி, 'எதுக்கும் பயப்பட வேணாம்; நான் ஈரோடுல தங்கி, அரசாங்கத்துக்கும், காட்டுக் குள்ள போற தம்பிங்களுக்கும் இடையில கோ.ஆர்டினேட் பண் ணிக்கிட்டு இருப்பேன். என்னை இந்த நெம்பர்ல காண்டாக்ட் பண்ணலாம்'னு ஒரு ஈரோடு டெலிபோன் நெம்பர் கொடுத் தாரு. அப்பகூட, நான், 'நிசம்மா சொல்லுங்க. நீங்களும்தானே வீரப்பனைப் பார்க்கப் போறீங்க?'ன்னு கேட்டேன். அவரு, 'இல்லை. இல்லை. நான் போகலை'ன்னு சொல்லிட்டாரு!

"மறுநாள் ஈரோட்டுல இருந்து போன் பண்ணி, பத் திரமா இருக்கேன்னாரு. அப்பவும்தான் வீரப்பனைப் பார்க் கப் போறேன்னு சொல்லலை. அதுக்கப்புறம் தகவல் இல்லை. பேப்பர்ல எல்லாம், இவர் காட்டுக்குள்ளாற போயிட்டதா நியூஸ் வந்துச்சு. பதறிப் போனேன்! அவுங்க தம்பிகிட்ட கேட்டா, 'அண்ணன் வீரப் பனைப் பார்க்கப் போயிருக்காரு; ஆனா, மேற் கொண்டு தகவல் ஏதுமில்லை'ன்னு சொல்லறாரு!

"எனக்கு மனசு திக்திக்குன்னு அடிச்சுகிட்டது. என் பெரிய மக(வயது 7) 'அப்பா காட்டுக்குள்ள வீரப்பனைப் பார்க்கப் போயிருக்காராமே? எப்ப வருவாரு'ன்னு கேட்டா. எனக்கு என்ன பதில் சொல்லணும்னு தெரியலை. 'வந்திடுவாங்க'ன்னு மட்டும் சொன்னேன்.

"நடுநடுவுல, பல வதந்திகள். இவுங்க, காட் டுக்குள்ள சில சமயம் மாறுவேஷத்துல போவாங்க. இவுங்க மீசை வீரப்பனுடைய



• விஜயலட்சுமி • கோபால்

— நக்கீரன் கோபால்



• வீரப்பனுடன் கோபால்

"அவர் பத்திரமா திரும்பி வர வேண்டாத தெய்வமில்லை!"

மீசை போலவே இருக்குமா? போலீஸ் தப்பு அடையாளத்துல ஏதாவது தவறு செஞ்சிட்டா என்ன ஆகும்னு எல்லாம் கற்பனை! ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகமா நகர்ந்தது. திருவேற்காடு கருமாரியம்மன் கோவிலுக்கு வர்றதா வேண்டிக்கிட்டேன். நேரம் ஆக ஆக, பயம் அதிகமாயிட்டே இருந்தது. திருப்பதி வெங்கடாஜலபதி வரை வேண்டாத சாமியில்லை!"

"இவர்தான் ஏற்கெனவே ரெண்டு முறை வீரப்பனை சந்திக்கப் போய் வந்திருக்கிறாரே? இப்போது மட்டும் ஏன் பயம்?"

"முதல் தடவை போனபோது, வீட்ல யாருக்குமே சொல்லலை. கேஸ் விஷயமா திருச்சி போயிட்டு ரெண்டு நாளுல வந்துடறதா சொல்லிட்டுப் போனவரு, சொன்ன மாதிரியே திரும்பி வந்தாரு. எங்க சொந்தக்காரங்க எதேச்சையா அப்ப வீட்டுக்கு வந்திருந்தாங்க. எல்லாரையும் ஹால்ல உட்கார வெச்சு, 'ஒரு கேஸட் போடறேன்; பாருங்க'ன்னாரு.

"வீரப்பனை இவர் சந்திச்ச பேட்டி காணற கேஸட்! எங்களுக்கெல்லாம் பயங்கர ஷாக் ஆயிட்டது! அப்பகூட அவர் வேற ஒண்ணும் சொல்லலை. அவர் எப்படியெல்லாம் கஷ்டப்பட்டு, வீரப்பனை சந்திச்சாருன்னு நக்கீரன்ல படிச்சு, பயந்து போனேன்!

"இனிமே இது மாதிரி போகக் கூடாது'ன்னு நான் சொன்னபோது கூட, 'சரி! போகலை'ன்னு தான் சொன்னாரு. நானும் நம்பினேன்.

"இரண்டாவது தடவை போன போதும், என்கிட்ட சொல்லலை. கேஸ் விஷயமா மதுரை போகறதா சொன்னார். மதுரை ரயில் டிக்கெட் கூட ஆபீஸ்லே இருந்து வந்தப்ப, நான்தான் வாங்கி வச்சேன். இவர் மதுரை போறார்னுதான் நினைச்சேன். ஆனா, போனது வீரப்பனைப் பார்க்கன்னு, திரும்பி வந்து கேஸட் காட்டினப்பதான் தெரிஞ்சுகிட்டேன்!

"முதல் ரெண்டு தடவையும், உண்மையில வீரப்பனைத்தான் பார்க்கப் போயிருக்காருன்னு எனக்குத் தெரியாது. அதனால நான் பயப்படலை. ஆனா இந்த தடவை, எனக்கே சந்தேகம் இருந்திச்சு. பேப்பர்ல போட்டாங்க. அதனால தான் ஒவ்வொரு நிமிடமும் பயந்து பயந்து செத்தேன்!

"ஆனா, இப்ப ஒண்ணு புரிஞ்சு போச்சு! நான் சொன்னாலும் இவர் கேட்க மாட்டார்! ஆண்டவன் விட்ட வழின்னு என்னை நானே சமாதானப்படுத்திக்கறேன்."

குரல் கம்முகிறது. கண்களில் கண்ணீர்.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

பூலான்தேவிக்கு வீரப்பன் பதில்

நக்கீரன் கோபாலின் 'பிரஸ் மீட்'டில் அவர் நம்மிடம் கூறிய ஸ்பெஷல் செய்தி :


"பொது மன்னிப்பு பற்றி வீரப்பனுடன் பேசிக் கொண்டிருந்த போது, பூலான்தேவி, கல்கிக்கு அளித்த பேட்டியில், 'வீரப்பன் முதலில் சரணடையட்டும்; அரசு அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கட்டும், அதன் பிறகுதான் மற்றதெல்லாம் சாத்தியம்' என்று கூறியுள்ளார் என்று நான் சொன்னேன்.

"எல்லாக் கேள்விகளுக்குமே தயாராய் பதில் வைத்திருக்கும் வீரப்பன், இதற்கு என்ன பதில் சொன்னான் தெரியுமா? 'அவ இப்ப அரசியல்வாதி ஆயிட்டா இல்ல? அப்பிடித்தான் பேசுவா.'

மனைவி கண்ணீர் பேட்டி...



கோலம்



உன் வீட்டு
வாசலில் கோலமுண்டா?

என் வீட்டு வாசலில்
அனேகமாக இல்லை!


இருப்பதெல்லாம்
பட்டைகள்.

கோலங்கள் குறித்து
குதூகலமடைகிறாயா நிஜமாகவே?

பழைய
நினைவுகளில் மட்டுமே ஆனந்திக்கிறாயா?


கோலம்
தேவையா இன்றைக்கு?

அடுக்கு வரிசை வீடுகளில்
அகல வாசலேயில்லை, அறிவாயா?



கோலம்,
மரபு.
வெறும் வாசல்,
எதார்த்தம்.

கவிஞனென்பதற்காகவே
கோலத்தைக் கொண்டாடுகிறாயா?
வீதியடைத்த தேர், யானையெல்லாம்
மலையேறிப் போயிற்று
வண்ணம் சேர்த்துப்போட்ட கோலமெல்லாம்
போயிற்று



காலமாற்றத்தின் அறிகுறி போல
கோலம் காணாமல் போனதும்.

— விக்ரமாதித்யன்

தேர்ந்தெடுக்கப்பட்ட எழுத்துக்களுக்கு

ரூபாய் ஐந்து லட்சம் மதிப்புள்ள உஜாலா பரிசுகள்



உங்களுடைய கருத்துக்களை எங்களுக்கு எழுதவும்

இப்போது உஜாலாவின் டாம்ப்பர் - புரூஃப் மூடியும், ஃபில்ஃபர் - புரூஃப் டிராப்பரும் ஜோதி ஆய்வுக்கூடத்தில் டிசைன் செய்யப்படுகின்றன. உங்களைப் பாதுகாக்க அவை எவ்வாறு வேலை செய்கின்றன ?

இன்று, தின் லேயர் க்ரோமெடோகிராஃபி (TLC) மற்றும் காஸ் க்ரோமெடோகிராஃபி மாஸ் ஸ்பெக்ட்ரோமெட்ரி (GCMS) பரிசோதனைகளில் முன்னேற்ற நாடான ஜெர்மனியில் தடை செய்யப்பட்டுள்ள அமின்ஸ் இல்லாத ஒயிட்னர் உஜாலா-வுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. சருமத்தில் எரிச்சல் மற்றும் வாயில் பட்டால் விஷத் தீங்கு இல்லை என்று பரிசோதனையில் தெரிகிறது. மேலும் விஷத்தன்மையற்றது. அதோடு, உஜாலா பல இதர தனித்தன்மை வாய்ந்த குணங்களைக் கொண்டுள்ளது. அவை என்ன ?

உஜாலாவை உபயோகிப்பதற்கு சரியான முறை என்ன ?

விஞ்ஞான ரீதியற்ற ஒயிட்னர்களை நீண்ட நாட்களுக்கு உபயோகிப்பது ஆரோக்கியத்திற்கும், உடைகளுக்கும் நல்லதல்ல. ஆகவே அதுபோன்ற தயாரிப்புகளை உபயோகிக்கத் துவங்கியவர்கள் மீண்டும் உஜாலாவையே உபயோகிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

Write to : **Jyothy Laboratories (UJALA)**, 2- A, Singarayar Mansion, Abhirami Avenue, Meenambal Salai, K. Kannadasan Nagar, Madras - 600 118.

அ.தி.மு.க. நிகழ்ச்சிகளுக்குத் தனி சானல்....?

● ஆர். ஜெயசீலன், களப்பாள் அஞ்சல்.

? குஜ்ரால் அரசை, 'அவசர பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளி போன்றது' என்று அத்வானி கூறியது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! காங்கிரஸ் என்கிற ஆக்ஸிஜன் சிலிண்டர் இருக்கும்வரை ஆபத்தில்லையே!

● வ. வைகுண்டன், சென்னை - 61.

? பழியைச் சுமந்து கொண்டு, பதவியில் ஒட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் மக்களுக்கு எவ்வாறு தொண்டாற்ற முடியும்?

! முடியாதுதான். பதவியைக் காப்பாற்றிக் கொள்வதில்தான் முழுக் கவனமும் செல்லும். அந்த அரசியல்வாதிகளின் ஆதரவை நம்பியிருக்கும் மற்ற அரசியல்வாதிகளாலும் நல்ல ஆட்சி தர முடியவில்லை.. நாடு ஸ்தம்பிக்கிறது என்பதுதான் வேதனை.

● லீலா ராம், தக்கலை.

? குஜ்ரால் அரசுக்கு ஆதரவு அளிப்பதிலிருந்து தி.மு.க. விலக உத்தேசித்துள்ளதைத் தெரிவித்த கலைஞரின் அறிக்கையைப் பார்த்தீர்களா....? அதில் 'சீரியஸ் மேட்டர்', 'தமாஷா' போன்ற பிற மொழிச் சொற்கள் தலைநீட்டியுள்ளது குறித்து....?

! இது தமிழ்க் குடிமகனுக்குத்தான் சீரியஸ் மேட்டர்.. நமக்கென்ன, 'தமாஷா'வை ரசித்து விட்டுப் போவோமே!

● ஜி. ஜெயராமன், கூத்தலூர்.

? வரதட்சணை - லஞ்சம் - ஒப்பிடுக?

! வரதட்சணை - கரும்பு தின்னக் கூலி; லஞ்சம் - கடமை செய்யக் கையூட்டு!

● புளியரை கணேசன், சென்னை - 30.

? டி.என். சேஷனின் டெபாசிட் பறிபோனது பற்றி....?

! டெபாசிட் பறிபோனது பெரிய விஷயமல்ல. 'சே! இவரும் பதவி ஆசைக்காரர்தானா?' என்று பலரும் எண்ண இடமளித்ததில் மக்களிடையே இருந்த மதிப்பு பறிபோய்விட்டதே; அதுதான் சோகம்!

● கதி. அருணாசலம், ஈரோடு.

? தங்களின் மனம் கவர்ந்த தமிழக அரசியல் தலைவர் யார்....?

! அவரும் கறுப்புக் கண்ணாடிக்காரர்தான்!

● கே.எம். கருப்பையா, மதுரை - 1.

? நம் அரசியல் சாக்கடை என்பதற்கும்; இல்லை, சந்தனம் என்பதற்கும் ஓர் உதாரணம்?

! 'ஹிந்து பத்திரிகை சொல்லிவிட்டால் வேதமா?' என்று கேட்டபோது சாக்கடை; பின்னர் தவறு உணர்ந்து நடவடிக்கை எடுத்த போது சந்தனம்.

● தஞ்சை பெஞ்சமின், தஞ்சாவூர் - 7.

? ரஜினி இலவசத் திருமணங்கள் நடத்தி வைத்திருக்கிறாரே... விரைவில் அவருடைய அரசியல் பிரவேசத்தை எதிர்பார்க்கலாமா?

! ஏற்கெனவே அரசியலில் பிரவேசித்தவர் தானே... மறுபடி அவசியம் ஏற்பட்டால் வருவார்.

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? ஐ.மு. அரசில் யார் கோமாளி என்று பட்டி மன்றம் நடத்தலாம் என வை.கோ. கூறியிருப்பது சரியா?

! சரிதான். தமிழக அரசியலில் யார் பெரிய குட்டிக்கரண expert. சு. சுவாமியா? வை.கோவா? என்றும் பட்டிமன்றம் நடத்தலாம்.

● தெரிசை ஐயப்பன், திருப்பூர் - 4.

? மதத்தின் பெயரால் கலவரத்திலும் வன்முறையிலும் ஈடுபடுபவர்கள் மதம் காட்டும்



• நம்பிக் கெடுகிறார்...!



• எதிர்பார்ப்பைத் தாண்டினார்...!



• உத்தரவாதம் தந்தார்!

நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கிறார்களா என்ன?

! மதத்தின் நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பவர்களாயிருந்தால் வன்முறையிலும் கலவரத்திலும் ஈடுபடவே மாட்டார்களே!

● ஆர். மார்டின், திருமானூர்.

? இந்தக் காலத்துப் பெண்களுக்கு, தங்களது பெற்றோர் சொல்லும் அறிவுரைகள் பாகற்காயாய்க் கசக்கிறதே, ஏன்?

! ஐயய்யோ! எந்தக் காலத்திலும் அப்படித்தாங்க! அது காலம் கடந்து நிற்கும் தலைமுறை இடைவெளி!

● சி. கிருஷ்ணசாமி, பொள்ளாச்சி.

? தமிழ்நாட்டுக்கு சட்ட மேலவை தேவைதானா?

! தேவைதான். அதை நம்பித்தான் சிலர் கலைஞரைப் புகழ்ந்து தள்ளுகிறார்கள் என்பது தெரியாதா என்ன?!

● வி. பரமசிவம், மதுரை - 16 ❑

? வெடிகுண்டு, துப்பாக்கி ஆகியவை தயாரிப்பது தமிழகத்தில் குடிசைத் தொழில் ஆகிவிட்டதே?

! காவல் நிலையத்தைக் கைப்பற்றுவது 'உபதொழில்' ஆகிவிட்டதே! சமீபத்திய திருச்சி வட்டார சம்பவங்கள் கலக்க மூட்டுகின்றன. முதல்வர் என்ன செய்யப் போகிறார்?

● கே. ரமேஷ்ராமன், சென்னை - 52.

? அரசியலில் நிரந்தர எதிரியும் இடையாது; நிரந்தரப் பகைவனும் இடையாது என்கிறார்களே... அப்படியானால் எதிர்காலத்தில் கருணாநிதியும் ஜெயலலிதாவும் கூட கூட்டு சேர்வதற்கு வாய்ப்பு இருக்கிறதா?

! லல்லுவை ஆதரிக்கிற ஒருவரால் ஜெவையும் ஆதரிக்க முடியும் என்றே தோன்றுகிறது.

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன் கோட்டை.

? அ.தி.மு.க. நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப தனி டீ.வி. சேனல் தொடங்குவோம் என்று ஜெயலலிதா கூறியுள்ளாரே?

! கோர்ட்டுக்குப் போய் வந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளையா?

> ❑ ரூ. 50 பரிசு பெறுபவர்:
> வி. பரமசிவம்
> பாஸ்டின் நகர்,
> ஐந்தாவது தெரு,
> மதுரை - 16.



• ஆக்ஸிஜனை மறந்தார்!



• மதிப்பை இழந்தார்!



• அதிரடியாய் அறிவித்தார்!



• மனத்தைக் கவர்ந்தார்...

● ஏ. காதர், நாகூர்.

? எங்களைக் கேட்காமல் தி.மு.க. அரசு எதையும் செய்யாது என சோ. பாலகிருஷ்ணன் கூறியுள்ளது பற்றி?

! அதை த.மா.கா. எம்.பி. கே. கந்தசாமியிடம் சொல்லச் சொல்லுங்கள். அவர்தான் மத்திய அரசு ஆதரவோடு நடக்கும் திட்டங்களை அமுல்படுத்துவது குறித்து எம்.பி.க்களைக் கலந்தாலோசிக்கவில்லை என்று புகார் செய்திருக்கிறார்.

● இரா. கமலக்கண்ணன், நாமகிரிப்பேட்டை.

? அரசியலைவிட மோசமானது ஏதாவது உண்டா?

! அரசியல்வாதிகள்!

● அவ்வை கே. சஞ்சீவி பாரதி, கலிங்கியம்.

? சித்திரம் எழுத சுவர் தேவைப்படுகிறது; அதனால்தான் அ.தி.மு.க.வுடன் கூட்டு வைத்துள்ளோம் என்கிறாரே வை.கோ?

! கடைசியில் இவரை சுவராக்கி 'ஜெ' சித்திரம் எழுதிவிடப் போகிறார்!

11:29

மூலம்: டேனியல் ஸ்டீல்

தமிழில்: ரா. கி. ரங்கராஜன்

ஆஸ்பத்திரியில், வெயிட்டிங் அறையில் இருந்த நாற்காலியில் சுருண்டு மடங்கி உட்கார்ந்தபடியே ஞாயிற்றுக்கிழமை இரவையும் கழித்தான் பேஜ். அசௌகரியமான நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறோம் என்பது அவளுக்கு உறைக்கவே யில்லை. ஆலிஸனைப் பற்றிய கவலை வாட்டியெடுத்தது. துளியும் கண் மூடவில்லை. ஆஸ்பத்திரியின் சப்தங்கள், நெடிகள், எந்த நிமிடம் ஆலிஸன் கைநழுவிப் போய் விடுவாளோ என்ற திகில் – எல்லாமாகச் சேர்ந்து அவளைத் தூங்கவொட்டாமல் பண்ணின.

காலை ஆறு மணி அடித்தது. அவள் துன்பத்துக்குச் சற்று விடிவு கிடைத்தது. ஆலிஸனை வந்து பார்க்கலாம் என்று தெரிவித்தார்கள்.

ஓர் அழகிய இளம் நர்ஸ் அவளை அழைத்துப் போனாள். எண்ணற்ற கூடங்களையும் ஹால்களையும் கடந்து செல்ல வேண்டியிருந்தது. வழி பூரா ஆலிஸனைப் பற்றியே சளசள வென்று பேசிக் கொண்டு வந்தாள் அந்த நர்ஸ். 'என்ன அழகான பெண்! எவ்வளவு அருமையான முடி!' என்றெல்லாம் அவள் சொன்னது பேஜின் காதில் விழுந்ததே தவிர மனம் தவித்துத் தறிகெட்டு ஓடிக் கொண்டிருந்தது.

உடம்பு மொத்தமும் கட்டுப் போட்டுப் படுக்கையில் கிடக்கும் ஆலிஸனை அழகான பெண் என்று எப்படித்தான் இவர்களால் சொல்ல முடிகிறதோ! ஆலிஸனின் கண்களுக்குக் கூடக் கட்டுப் போட்டு மூடியிருப்பார்களே!

வழியெங்கும் லிஃப்டுகள். தானே திறந்து மூடிக் கொள்ளும் கதவுகள். அவற்றின் வழியே செல்லும்போது பேஜ் மனசைத் திடப்படுத்திக் கொண்டாள். கன்னாபின்னாவென்று கற்பனை செய்து கொண்டிருக்காமல் பிரத்தியட்ச நிலைமையைப் பார்க்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள். பிராடைக் குறித்தும் அவன் சொன்னவற்றைக் குறித்தும் ஒரு நிமிடம் சிந்தனை செய்ய முயன்றாள். பிறகு அந்த எண்ணத்தை உதறிவிட்டு, ஆலிஸனை நல்ல நிலைமையில் பார்க்கப் போகிறோம் என்று தனக்குத் தானே நம்பிக்கை ஊட்டிக் கொண்டாள்.

ஆனால் ஆலிஸனை நேருக்கு நேராகப் பார்த்தபோது அவள் நம்பிக்கை குலைந்தது.

ஆபரேஷனுக்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் கோரமாக இப்போது காட்சியளித்தாள் ஆலிஸன். தலை மொட்டையடிக்கப்பட்டு, பயங்கரமான கட்டுக்களுடன் இருந்தது. முகம் பிரேதம் போல் வெளுத்திருந்தது. மானிட்டர்களும் கருவிகளும் அவளை எங்கு பார்த்தாலும் சூழ்ந்திருந்தன. நினைவிழந்த கோமா நிலைமையில், லட்சக்கணக்கான மைல்களுக்கப்பால் இருப்பவளாகத் தோற்றமளித்தாள்.

ஆபரேஷனின் போது பணியாற்றிய நர்ஸ், பேஜின் வேண்டுகோளின்படி, ஆலிஸனின் முடியில் கொஞ்சம் வெட்டி வைத்திருந்தாள். வார்டிலிருந்த நர்ஸ் அதை வாங்கி வைத்திருந்து பேஜிடம் கொடுத்தாள்.

அந்தப் பட்டுக் கூந்தலைக் கண்டதும் கண்ணீர் பொங்கி வழிந்தது பேஜின் கன்னங்களில். அந்த முடியை ஒரு கையில் வைத்துக் கொண்டு மறு கையால் ஆலிஸனை மெதுவே தொட்டாள்.

தொட்டபடியே வெகு நேரத்துக்கு நின்றிருந்தாள்.

'இரண்டே இரண்டு நாட்களுக்கு முன்பு வாழ்க்கை எவ்வளவு சீராக, அமைதியாக, சந்தோஷமாக இருந்தது!' என்று அவள் உள்ளம் நினைத்துப் பார்த்தது. அத்தனையும் எப்படி இத்தனை சீக்கிரத்தில் விபரீதமாக மாறிற்று! சே! இனி எதையுமே நம்பக் கூடாது. யாரையுமே நம்பக் கூடாது. விதி என்றும் ஆண்டவன் சித்தம் என்றும் சொல்வதை நம்பவே கூடாது. எல்லாமே குரூரமானவை – பிராடைப் போல.

நினைக்க நினைக்க, ஆலிஸனைப் பற்றி



17

கொடுத்து விடுவோமோ என்ற வேதனை அவளைப் புரட்டியெடுத்தது. பல வருடங்களுக்கு முன்னால், ஆண்டி பிறந்த புதிதில் இதே போன்ற வேதனையை அவள் அனுபவித்தது உண்டு. குறை மாதத்தில் பிறந்த குழந்தையை இன்குபேட்டரில் வைத்திருந்த சமயம்... அது பிழைக்காது என்று பயந்ததும்... இன்குபேட்டருக்குள் ட்யூப்களுடன் அந்தச் சின்னஞ்சிறு உடம்பு உயிரோடு மன்றாடுவதை வெறித்துப் பார்த்தவாறு மணிக்கணக்காக உட்கார்ந்திருந்ததும்... குழந்தை பிழைக்க வேண்டும், பிழைக்க வேண்டும் என்று தனக்குத்தானே வாய் ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்ததும்... கடைசியில் ஆண்டி அதிசயத்தில் அதிசயமாக மீண்டு வந்ததும்...

அலை அலையாக ஞாபகம் வர, ஆலிஸனின் படுக்கைக்கு அருகே இருந்த சிறிய முக்காலியில் உட்கார்ந்து கொண்டாள். ஆலிஸனின் காதுகளையும் சேர்த்துக் கட்டுப் போட்டிருந்தது. இருந்தாலும் அவளுக்குக் கேட்க வேண்டும் என்று தெய்வத்தை வேண்டிக் கொண்டாள். குனிந்து அவள் செவியினருகே பேசினாள். "ஆலி... என் செல்லமே... உன்னை விட மாட்டேனடி கண்ணே. விட மாட்டேன். எங்களுக்கு நீ வேண்டும். உன்னிடம் நான் கொள்ளை ஆசை வைத்திருக்கிறேன், கண்ணே. இதோ பார், நீ தைரியமான பெண்ணாக இருக்க வேண்டும். போராட வேண்டும். போராடியே ஆக வேண்டும், பேபி. ஐ லவ் யூ, செல்லமே. என்றைக்கிருந்தாலும், என்ன நேர்ந்தாலும் நீ என் பேபிதான், ஆலி..."

ஆலிஸனின் உடம்பில் மருந்துகளின் நெடி அடித்தது. சுற்றிலும் இருந்த கருவிகள் பீப் பீப் பீப் என்று மெல்லச் சப்தித்தன. வேறு எந்த ஓசையும் ஆலிஸனிடமிருந்து வரவில்லை. எந்த அசைவும் இல்லை. தாயை அடையாளம் கண்டுகொண்டதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை.

எதுவும் தென்படாது என்று பேஜுக்குத்

தெரிந்தேயிருந்தது. இருந்தாலும் ஆலிஸனுடன் பேசிக் கொண்டிருக்க, உள்ளத்தால் அவனுடன் நெருங்கியிருக்க அவள் தவித்தாள். நீண்ட நேரம் அவள் ஆலிஸனின் அருகில் இருப்பதற்கு நர்ஸ்கள் அனுமதித்தார்கள்.

காலை ஏழு மணிக்கு ஷிப்டு மாறியது. வேறு நர்ஸ்கள் வந்தார்கள். சிற்றுண்டி விடுதிக்குப் போய்ச் சாப்பிட்டு விட்டு வரும்படி அவர்கள் சொல்லவே, பேஜ் அரை மனதாக வெளியே போனாள். ஆனால் காப்பி சாப்பிடச் செல்லவில்லை. மறுபடியும் வெயிட்டிங் அறைக்கே சென்று அதே நாற்காலியில் பிரமை பிடித்தவள் போல உட்கார்ந்து கொண்டாள். முன்பு ஆலிஸன் இருந்த தோற்றத்தையும் இப்போது உள்ள நிலைமையையும் மாறி மாறி எண்ணிப் பார்த்துக் கொண்டாள். அறைக்குள் யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்ற உணர்வே இல்லாமல் உட்கார்ந்திருந்தாள்.

யாரோ அவள் கையைத் தொட்டார்கள். திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

தாரென்ஸன்.

இப்போது அவன் ஷேவ் செய்து உடை மாற்றிக் கொண்டு புத்துணர்வுடன் இருந்தான். வெள்ளை ஷர்ட், ஜீன்ஸ். அடர்ந்த முடியை அடக்கிச் சீவியிருந்தான். நன்கு ஓய்வெடுத்திருந்ததால் தெம்பு பளிச்சிட்டது.

ஆனால் பேஜின் முகத்தைக் கண்டதும் அவனுக்கு எல்லையற்ற வருத்தம் ஏற்பட்டது. இன்று திங்கள் கிழமை, காலை. சனி, ஞாயிறு இரண்டே தினங்களில் எவ்வளவு நலிந்து மெலிந்து போய் விட்டாள்!

"இன்றைக்கும் ராத்திரி பூரா இங்கேயா தங்கியிருந்தாய்?" என்று கேட்டான்.

ஆம் என்று தலையசைத்தாள் பேஜ். தோற்றம் நேற்றைக் காட்டிலும் இன்றைக்கு இன்னும் மோசமாகி விட்டது அவனுக்குத் தெரிந்தது. ஆனால் ஆலிஸனுக்குப் பக்கத்திலேயே இருக்க வேண்டும் என்ற அவளுடைய ஆதங்கத்தைப் புரிந்து கொண்டான்.

''இங்கேயே வெயிட்டிங் அறையில் தூங்கினேன்,'' என்று கூறிப் புன்னகையும் செய்ய முயன்றாள் பேஜ். அது இன்னும் பரிதாபமாக இருந்தது.

"இங்கே எப்படித் தூங்க முடியும்?" என்றான் தாரென்ஸன் – ஓர் அன்பான தந்தை கண்டிக்கிற மாதிரி.

"ஏதோ கொஞ்சம் தூங்கினேன். ஆலிஸனின் பக்கத்தில் இருப்பதற்கு அனுமதி அளித்தார்கள். அதுவே மனசுக்கு இதமாக இருந்தது. க்ளோ எப்படி இருக்கிறாள்?"

"இப்போதுதான் பார்த்துவிட்டு வந்தேன். தூங்கிக் கொண்டு இருக்கிறாள். மயக்க மருந்து கொடுத்திருப்பதால் வலி தெரியாமல் இருக்கிறது. அதிருக்கட்டும். நீ ஏதாவது சாப்பிட்டாயா? பார்ப்பதற்கு மகா கண்ராவியாக இருக்கிறாயே?"



''நேற்று... நேற்று ராத்திரி... ஆண்டிக்காகப் பிஸ்ஸா பண்ணிக் கொடுத்தேன். அதிலேயே கொஞ்சம் நானும் எடுத்துக் கொண்டேன்."

"முதலில் எழுந்திரு, சொல்கிறேன். ஏதாவது சாப்பிட்டு விட்டு வரலாம்,'' என்றான் தாரென்ஸன் மேலும் கண்டிப்பாக. "இப்படிப் பட்டினி இருப்பதால் யாருக்கு என்ன லாபம்? உனக்கு உடம்புக்கு வந்தால் எல்லாருக்குமே கஷ்டம். எழுந்திரு."

அவனுடைய அன்பு அவளை நெகிழ வைத்தது. ஆனால் கொஞ்சம் கூடச் சாப்பிடத் தோன்றவில்லை. இப்படியே சுருண்டு மடங்கிப் படுத்திருந்தால் போதும். உலகத்தை மறந்துவிட்டு... ஆலிஸன் பிழைக்கவில்லையென்றால் நாமும் இப்படியே இறந்து போய் விடலாம்... ஆலிஸன் பழையபடி ஆகப் போவதில்லை. பிராட் பழையபடி ஆகப் போவதில்லை. அவள், அவள் குழந்தை, அவள் இல்லறம், அவள் வாழ்க்கை – எதுவுமே பழையபடி ஆகப் போவதில்லை. இப்போதே இழவு வீட்டில் துக்கம் அனுஷ்டிக்கிற மாதிரிதான் இருக்கிறது....

"தாங்க்ஸ்... சாப்பிடவே பிடிக்கவில்லை," என்றாள்.

"இதோ பார், நீ எழுந்து வந்து சாப்பிட்டாலொழிய நான் இந்த இடத்தை விட்டு நகரப் போவதில்லை. டாக்டரைக் கூப்பிட்டு, நீ இப்படிப் பட்டினி கிடப்பதைச் சொல்லுவேன்,



''ஏம்மா, உங்க வீட்டு டெலி போன்ல என்ன கம்ப்ளெயின்ட்னு சொன்னீங்க?''
''முன்னே மாதிரி, அதிகம் 'கிராஸ் டாக்' வரதேயில்லீங்க!''
— எஸ். யமுனா பார்வதி

நரம்பு வழியாக உனக்கு உணவு செலுத்துவார்கள். அது பரவாயில்லையா?'' என்றவன் அவள் கையை இறுக்கமாகப் பற்றி எழுப்பினான்.

"சரி, சரி, வருகிறேன்," என்ற பேஜ் வேண்டாவெறுப்பாக அவனைப் பின்தொடர்ந்து சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றாள். அவளை நாற்காலியில் உட்கார்த்தி வைத்து விட்டு, அவன் சென்று இரண்டு கையிலும் ஏராளமான சிற்றுண்டிகளைக் கொண்டு வந்தான்.

"மனசில் கஷ்டம் இருக்கும் போதுதான் நன்றாகச் சாப்பிட வேண்டும் என்று எங்கள் நார்வே நாட்டில் சொல்வார்கள். டானாவும் நானும் பிரிந்தபோது, பல நாட்கள் எனக்கு உணவே பிடிக்கவில்லை. இருந்தாலும் வலுக்கட்டாயமாகச் சாப்பிட்டுக் கொண்டுதான் இருந்தேன்," என்றான் தாரென்ஸன். "இன்று நீ வீட்டுக்குப் போய்க் கொஞ்ச நேரம் தூங்கு. நீ வருகிற வரையில் பிராட் இங்கே ஆஸ்பத்திரிக்கு வந்து இருக்கட்டுமே?"

அதைக் கேட்கப் பேஜுக்குச் சங்கடமாக இருந்தது. "பிராட் இன்று ஆபீசுக்குப் போக வேண்டியிருக்கும். காலையில் ஆண்டியை ஸ்கூலுக்கு அனுப்பி விடுவார். ஆனால் சாயந்தரம் அவனைத் திரும்ப அழைத்து வர வேண்டும். மறுபடி பேஸ்பால் விளையாடக் கூட்டிப் போக வேண்டும்..."

"அதை நான் பார்த்துக் கொள்கிறேன். என் மூத்த பையன் நிக்கிற்கு விடுமுறை முடியப் போகிறது. காலேஜுக்குப் போய்விடுவான். சின்னவன் பிஜான் அவனுடைய ஸ்கூலிலேயே இருந்து கொள்வான். என் பெண் க்னோ இங்கே பத்திரமாக இருக்கிறாள். உனக்கு முடியாதபோது என்னிடம் சொல். ஆண்டி எங்கே போக வேண்டும் என்கிறானோ அங்கே அழைத்துப் போகிறேன். கவலைப்படாதே," என்றான் அவன் புன்னகையுடன்.

"பாவம், உங்களுக்குச் சிரமம்..."

"அதெல்லாம் ஒன்றுமில்லை."

பேஜ் கொஞ்சம் கொஞ்சம் சிற்றுண்டிகளைச் சாப்பிட்டாள். அவளுடைய கவலைகளை மாற்றுவதற்காகத் தாரென்ஸன் தான் எழுதும் கதைகளைப் பற்றியும், நார்வேயில் உள்ள தன் உறவினர்களைப் பற்றியும் பேசிக் கொண்டேயிருந்தான். ஆனால் பேஜின் எண்ணங்கள் ஆலிஸனைப் பற்றியும் பிராடைப் பற்றியுமே திரும்பத் திரும்ப ஓடிக் கொண்டிருந்தன.

"பிஜானுக்குப் பள்ளிக்கூடத்தில் ஒரு பரீட்சை இருக்கிறது. அவனை அழைத்துப் போக வேண்டும். சீக்கிரம் வந்து விடுகிறேன். அதுவரை க்னோவையும் பார்த்துக் கொள்," என்று கூறிவிட்டுத் தாரென்ஸன் புறப்பட்டான்.

க்னோவைத் தீவிர சிகிச்சைப் பிரிவான ஐஸியூவில் கொண்டு வந்து விட்டிருந்தார்கள். அங்கேயேதான் ஆலிஸனும் இருந்தாள். எனவே இருவரையும் ஒருசேரப் பார்த்துக் கொள்ள முடிந்தது. ஆனால் க்னோ பிரக்ஞை இழந்த நிலையிலேயே இருந்தாள். பேஜ் வந்து நிற்பதே தெரியவில்லை. உணர்வு வந்து வலியினால் அவள் முனகும்போதெல்லாம் மறுபடி ஊசி போட்டுத் தூங்க வைத்தார்கள்.

பகல் உணவு நேரத்தின்போது பிராட் ஆஸ்பத்திரிக்கு வந்தான். ஆலிஸனின் நிலைமையைப் பார்த்து அவன் கண்ணீர் விடுவது வெளிப்படையாகவே தெரிந்தது.

இருவரும் வெயிட்டிங் அறைக்குத் திரும்பினார்கள்.

'ஸாரி பேஜ்... உன்னை நினைத்து எனக்கு ரொம்பவும் வருத்தமாயிருக்கிறது. ஆலி இப்படி இருக்கிறாள் என்ற வேதனையோடு என் பிரச்னையும் உனக்குச் சேர்ந்து விட்டது," என்றான் அவன்.

பேஜ் அவனுடைய வருத்தத்தை நம்பத் தயாராயில்லை.. வெடுக்கென்று, "எப்போது வீட்டை விட்டு வெளியேறப் போகிறீர்கள்? அந்த ஸ்டிபானியுடன் எப்போது போய்ச் சேர்ந்து கொள்ளப் போகிறீர்கள்?" என்றாள்.

வெயிட்டிங் அறை இப்போது ஒரே கூட்டமாக இருந்தது. அன்புக்குரியவர்களின் உடல் நிலை பற்றிப் பயப்பட்ட நபர்களும், கவலைப்பட்ட உறவினர்களும் நெருக்கியடித்துக் கொண்டு போவதும் வருவதுமாக இருந்தார்கள்.

"பேஜ், ப்ளீஸ். மெல்லப் பேசு. நம் விஷயம் இந்த ஆஸ்பத்திரி மொத்தத்துக்கும் தெரிய வேண்டுமா?" என்றான் பிராட்.

"ஏன்? தெரியட்டுமே? ஏற்கெனவே உங்கள் ஆபீசில் எல்லாருக்கும் தெரிந்தாயிற்று. அது தவிர, எவ்வளவு பேர் உங்கள் இரண்டு பேரையும் சேர்த்து எத்தனை இடங்களில் பார்த்திருக்கிறார்களோ? நான்தான் பைத்தியக்காரி. உலகத்துக்கெல்லாம் தெரிந்த ஒரு அசிங்கத்தை நான் தெரிந்து கொள்ளாமல் இருந்திருக்கிறேன்!"

பேஜின் குரல் உரத்துக் கொண்டே போயிற்று.

(தொடரும்)

கவலை வேண்டாம்!

✉ ஜெ இன்னும் எத்தனை இடங்களுக்குப் பயணம் செய்தாலும் அனுதாபத்தை நிச்சயம் பெற முடியாது. ஜெ. அடித்த கொள்ளைக்கு அளவே இல்லை. இன்னும் ஒருமுறை ஆட்சி செய்தால் தமிழ்நாடு ஜெ.நாடாகவே மாறி விடும். இதை மக்கள் யாரும் மறக்க மாட்டார்கள். கூடும் கூட்டமெல்லாம் திருவிழா காணும் கூட்டம் போல்தான். வோட்டு என்று வரும்போது, மக்கள் சிந்திக்கவே செய்வர். இந்தக் கவலை வேண்டாம்!

விபீஷணபுரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

சூப்பர்!

✉ புலி பூனையாகும் கார்ட்டூன் சிம்ப்ளி சூப்பர்ப்! அரைப்பக்க கார்ட்டூன்தான் என்றாலும் அனைத்தையும் அழகாய் விளக்கியிருக்கிறது!

செங்குன்றம், கே. ரமேஷ்ராமன்.

துணிச்சல்!

✉ உங்கள் காதில் விழுந்தவை எங்கள் மனத்தில் பதிந்தவைகளாயின. மேலும் சேலம் மாநாடு முடிந்ததும் பத்திரிகையாளர்களைக் கவர் கொடுத்து கவர் செய்து அனைவரையும் அதிரச் செய்த பவர்ஃபுல் செய்தி, திருப்தியடையாத சில பத்திரிகைக்காரர்களைத் திரும்பவும் கவனித்ததைத் துணிந்து எழுதிய கல்கியைப் பாராட்டுகிறேன்.

பொறையாறு, கானா.

பறி போனதற்குப் பரிசு

✉ ஆகஸ்ட் 15, 1947-ம் நாளன்று பிறந்தவர்களுக்கு மட்டும்தானா 'கல்கி'யின் இனிய பரிசு? என்னைப் போல அதே நாளில் (ஆகஸ்ட் 15, 1947-ல்) திருமணம் செய்து கொண்டவர்களுக்கும் (என்னிடம் ஆதாரம் உள்ளது) கல்கி 'இனிய' பரிசைத் தரக் கூடாதா! ஒரு வேளை சுதந்தரம் பறிபோன நாள் என்று நினைக்கிறீர்களோ?

மதுரை-11, வி. குப்புசாமி ராவ்.

பொருத்தம்

✉ கவலட்சுமியின் டைரிக்குறிப்பை லேமினேட் செய்ய விரும்பிய வாசகர் கடிதம் இடம் பெற்ற பக்கத்தின் மறுபக்கத்தில் குறைந்த செலவில் லேமினேட் செய்வது பற்றி கட்டுரை! என்ன பொருத்தம் ஐயா!

தக்கலை, லீலா இராம்.

சூரர்

✉ ஆளுக்குத் தகுந்தாற்போல் கேள்வி கேட்பதில் அசகாய சூரர் என்பதை, பூலான்தேவியிடமே வீரப்பனின் பொதுமன்னிப்பு பற்றிய கேள்வியைக் கேட்டு நிரூபித்து விட்டீரய்யா!

திருப்பூர்-1, ப. சங்கர்.

யதார்த்தமான காதல்

✉ காதல் என்றாலே எல்லையற்ற கற்பனையில் மிதப்பது என்ற கவிஞர்களின் எண்ணத்திலிருந்து மாறுபட்டு, ஷாராஜ் படைத்திருந்த வாக்குறுதி கவிதை யதார்த்தமான காதலை அழகுறச் சொன்னது.

கிழக்குவலசை, சந்திரகிரண கலை.

என்ன பொருத்தம்!

கட்டி

✉ 'செவ்வாய் இனி நம் பக்கத்து வீடு!' - குட்டிக் கட்டுரையாகயிருந்தாலும் 'கட்டி'க் கட்டுரையாக இருந்தது!

நாகூர், நிலா காதலன்.

உலுக்...

✉ 'சுபா'-வின் குழலினிது... யாழினிது... சிறுகதையின் ஒவ்வொரு வரியும் ஓர் ஏழைத் தாயின் அவலத்தை வெளிக்காட்டின! உச்சகட்டமாக, 'மகளின் சிறுமடியில் விழுந்து கமலம் அரற்ற' என்ற வரிகள் காட்சியைக் கண் முன் நிறுத்தி நெஞ்சை உலுக்கியது.

மந்தைவெளி, சீதா சதாசிவம்.

மதுரிமா என்றால் என்ன அர்த்தம்?



பாரதிராஜா இயக்கும் படம், சிறகுகள் முடிவதில்லை. இரண்டு கதாநாயகிகள். அதில் ஒருவர், அட்டையில் இருக்கிற மதுரிமா.

மதுரிமா? தேன் என்று அர்த்தமாம்! "சரிகம என்பது போல் ஸ்வரலயமும் கூட" - சொன்னபடி இசையாய் சிரித்தார்.

தமிழுக்குப் புதுமுகம். ஆனால் தெலுங்குக்கும், மலையாளத்திற்கும் அல்ல. மூன்றரை வருடத் திரை அனுபவம். முப்பத்தைந்து படங்கள் முடிஞ்சாச்!

பாரதிராஜா இயக்கத்தில் எப்படி?

"அண்ணா வினய், 'சுழல்' தொலைக்காட்சித் தொடரில் நடிப்பவர். அவர் அலுவலகம் ஜெமினி பார்ஸன் வளாகத்தில். அங்கு சென்றிருந்தேன். இயக்குனர் பாரதிராஜாவின் அலுவலகமும் எதிர்ப் புறத்தில். உற்றுப் பார்த்தார். எனக்குத் தயக்கம். பிறகு அருகில் சென்று வணக்கம் சொன்னேன். 'நான் வேலை பார்க்கும் பெண். அலுவலகம் சென்று கொண்டிருக்கிறேன்' - இப்படி நினைத்திருக்கிறார். ஆட்களை விட்டு என் முகவரி கேட்டார். ஸ்டில்கள் எடுத்து சம்மதம் சொன்னார். ஏற்கெனவே நடிகை என்றதும் கொஞ்சம் ஏமாற்றம்தான் அவருக்கு. பிறகு ஓ.கே.!"

அப்பா தெலுங்குத் திரையுலகில் வினியோகஸ்தர். அம்மாவும் அப்பாவுக்கு உதவி. அத்தை - ஜெயப்பிரபா, தெலுங்கில் பிரபலம். தமிழில் முன்பு ஓரளவு. அத்தையின் ஊக்கம் மதுரிமாவுக்கு உற்சாகம்.

இயற்கை எழில்மிக்க முட்டம். அங்குதான் பாரதிராஜா எடுத்த முதல் ஷாட். கீழிருந்து மேலே ஏறி வருவது போல. (சென்ட்டிமெண்ட்?) "என்ன ஒரு இயக்குனர்! 'முதல் மரியாதை' பல தடவை பார்த்ததுண்டு. ராதிகா, ரேவதி போல் வர விருப்பம்" என்கிறார்.

எந்த கிசுகிசுவும் வந்ததில்லையாம் இதுவரை. வருவதில் விருப்பமும் இல்லை. "செய்தியிலே அடிபடலாம். ஆனா இமேஜ் போயிடுமே?"

வளர்ந்ததெல்லாம் சென்னை. "சிறகுகள்..." படத்தில் கிராமப் பெண்.

"நோ ப்ராப்ளம். பத்தாவது வயதிலிருந்தே நிறைய நடன நிகழ்ச்சிகள் செய்திருக்கேன். வில்லேஜ் டிரெஸ், குறத்தி வேஷம் நிறையப் போட்டாச்சு."

பள்ளியில் படிப்பு அதிகமாய் ஏறலை. நடனமே கவனம். கலைநிகழ்ச்சியா? கூப்பிடு மதுரிமாவை. நைட்டிங்கேல் மற்றும் வேளாங்கண்ணி இரு பள்ளிகளிலும் இதுதான் நிலை.

இன்ஸ்பயர் செய்த நடிகை? "முக்கியமாய் மூணு பேர். ஜெயப்ரதா - ஏற்காத வேஷமில்லை. அத்தனையிலும் வெகு பொருத்தம். சாவித்திரி - நடிப்பு டிக்ஷனரி. அத்தை ஜெயபிரபா - வசன உச்சரிப்பில் ராணி என்று பெயர் வாங்கியவர்."

உள்ளூர் திறமைகள், பம்பாய் இறக்குமதி இத்தனை இருக்க, தமிழில் தாக்குப்பிடிப்பாரா?

"குள்ளமான க்ரோடன்ஸ். உயரமான யுகலிப்டெஸ். ஒவ்வொன்றுக்கும் தனித்தன்மை. ஆண்டவன் கொடுத்தது. தாக்குப்பிடிப்பேன்!"

பொன்மொழியில் நனைந்து போய் வெளிநடந்தோம்.

— குல்லூ

அட்டை வண்ணப்படம்,
படம் : பிரவீண்குமார்

முடிந்து விட்டது.

சுத்தியின்றி, ரத்தமின்றி, ஒரு போர். உக்கிரமான யுத்தம். மனசுக்கும் மனசுக்கும் நடந்த போரில், எதிர்த்து நின்று முழுதும் காயங்களுடன், இனி ஆறவே முடியாத தழும்புகளுடன் ஒரு யுத்தம் முடிந்து விட்டது.

நீயா, நானா என்ற போட்டியில் 'சேலஞ்ஜ்' என்று கட்டை விரலை உயர்த்தியவள் ஜெயித்து விட்டாள்.

யுத்தத்திற்கான காரணபுருஷன் சந்திர மௌலி. முகம் பொத்தி, உடல்குறுகி, ஓரமாய் சுருங்கியிருந்தான்.

மனசு உருகியது. இழுத்து அணைத்து, தலைகோதி முதுகு தடவி ஆறுதல் சொல்ல வேண்டும் போல் பறந்தது சசிக்கு.

முடியாது. தான் தோற்ற பொருள்மேல் சொந்தம் கொண்டாடத் தனக்கு உரிமை யில்லை.

சசியின் தொடுதலை எதிர் பார்த்திருந்த மௌலி, அவளை நிமிர்ந்து பார்த்தான்.

''ஆறுதல் சொல்லக்கூட மனசு இல்லையா சசி.''

''என்ன சொல்றது சந்துரு?''

''என்கிட்ட வந்து என் தோளைச் சுத்தி கை போட்டு தோள்ல சாச்சுக்கோ சசி.''

''அதுக்கு பல்லவி வந்துட்டா சந்துரு.''

''பக்கத்துல வரலாம். மனசுக்குள்ள வர முடியாது.''

தாவி வந்து சசியின் கைகளைப் பற்றி தன் முகத்தில் பொதித்துக் கொண்டான்.

''முடியலை சசி. என்னால முடியலை. நீ இல்லாத லைஃபை நினைச்சுப் பாக்க முடியலை சசி. நாம எங்கேயானும் ஓடிப் போயிடலாமா?''

''எங்க போறது சந்துரு?''

''எங்கியானும்.''

''எங்க போனாலும் மனசு கூடவே வருமே.''

''மனசு... மனசு.. ச்சே. யாருமே அதுக்கு மதிப்பு தரலையே?''

''நாம தந்திருக்கோமே.''

அதுதான் காரணம். அன்பு, கருணை, விட்டுக் கொடுத்தல் எல்லாவற்றையும் இந்த நெஞ்சுக் கூட்டுக்குள் குவித்து வைத்ததுதான் வேதனைகளுக்குக் காரணமாயிற்று.

நேசிகின்ற நெஞ்சம்- அது நேசிக்கின்ற நெஞ்சம்- அது மென்மையாக இருக்க இருக்க அதிகமாகத் துன்புறுகிறது.

மென்மையே கூடாதோ! யாரோ எப்படியோ போகட்டும். தனக்கென்ன, தன் காரியம் நடந்தால் சரி என்று போக வேண்டுமோ?

எப்படி முடியும்! தன்னால் ஒரு குடும்பமே அழிந்து விடும் என்கிற போது சுயநலத்துடன் எப்படி இருக்க முடியும்?

ஆஸ்பத்திரியில், அரைமயக்கத்தில் தன்னைப் பார்த்து இரு கைகளையும் கூப்பி, "என் புள்ளையை விட்ரும்மா. என் குடும்பத்தைக் காப்பாத்து" என்று சந்துருவின் அப்பா கை கூப்பிய போது அத்தனை பிடிவாதமும் கரைந்து போயிற்று.

அதட்டலுக்கும், உருட்டலுக்கும் மசியாத மனம், கெஞ்சலில் உருகி விட்டது.

இந்த இழப்பு பெரிது தான்.

அப்பா, அம்மா இல்லாமல், யாரோ ஒரு சொந்தக்காரரின் தயவில் அன்பே இல்லாமல் வளர்ந்த சசிக்கு, சந்துருவின் காதல் ஒரு புதையல். ஆறுவருஷமாய் காலேஜிலிருந்து தொடர்ந்த காதல்.

''இலக்கியக் காதல்''- சந்துரு பூரிப்பான்.

''ஸாரி சந்துரு. நம்ம காதலை எது கூடவும் ஒப்பிடாதே.''

''ஏன் சசி?''

''இல்லை சந்துரு. எது கூடவும், யார் கூடவும் ஒப்பிடக் கூடாத உணர்வு இது. உன்னை நினைக்கறப்ப எல்லாம் மனசு உருகறது. பனியில நடக்கறாப்பல சிலிர்க்கறது. உடம்பு பூராவும் ஒரு அலை பரவி, அதுல அப்படியே நான் மூழ்கி கரைஞ்சிடணும் போல இருக்கு சந்துரு. இது அனுபவிச்சாதான் புரியும்! எல்லார் அனுபவமும் ஒரே மாதிரி அமையாது.''

சந்துரு நெருங்கி உட்கார்ந்து தோளில்

ஜி.ஏ. பிரபா

சாய்ந்து கொள்வான். மணிக்கணக்கில் மௌனமாய் உட்கார்ந்து விட்டு, பேசாமலேயே பிரிந்திருக்கிறார்கள்.

மழைத் தூறலில் நனைந்தபடி மெதுவாய் நடந்த சாலைகள், யுனிவர்சிடி பில்டிங், காஃபியை ஸ்ட்ராவில் உறிஞ்சிக் குடித்த நாயர் கஃபே. ஆள் இல்லாத ஸ்டேடியத்தில் உட்கார்ந்து முகத்தைப் பார்த்தபடியே எத்தனை நாள்?

எம். எஸ்ஸி முடித்ததும் சசி வேலைக்குப் போனாள். சந்துரு ஆராய்ச்சிப் படிப்புக்கு விண்ணப்பித்தான்.

"இதுக்கு நல்ல சான்ஸ் சசி. அமெரிக்கா போனும். நிறைய சம்பாதிக்கணும். என் ரெண்டு தங்கைக்கு கல்யாணம் செய்யணும். அப்புறம் உன்னைப் பத்தி சொல்லி கல்யாணம் செஞ்சுக்கணும். அதுவரை காத்திருப்பியா சசி?"

சட்டென்று கண்ணில் நீர் கோத்துக் கொண்டது.

"அதைத் தவிர எனக்கு வேற என்ன வேலை சந்துரு?"

இந்த மனசை, கூட்டைக் கலைக்க எப்படி மனசு வந்தது பல்லவிக்கு?


எம்.எஸ்ஸி வகுப்பில் அறிமுகம். பணக்கார வீட்டின் ஒரே செல்லப் பெண். நினைத்ததை அடைந்து பழக்கம். தன் காசு, வசதி, சொல்வாக்கால் எதையும் அடைந்து விட முடியும் என்ற கர்வம்.

அடைந்தும் விட்டாளே!

சந்திரமௌலியை அவளும் விரும்பினாள். அடைந்தே தீருவேன் என்ற வெறியை அவன் மறுப்பு தூண்டிவிட்டது.

காரணம் சசி என்று புரிந்து கொண்டாள்.

தன் காசுக்கும், அழகுக்கும் ஒரு கும்பலே ஜால்ரா அடித்து நிற்க, சசி மட்டும் மதிக்காமல் விலகிப் போனதும். அவள் கம்பீரமும்.




காலேஜில் அவளுக்கிருந்த மதிப்பும் பல்லவிக்குப் பொறாமையைத் தந்தது.

சந்திரமௌலியின் மனதை ஆக்கிரமித்திருப்பது சசி என்று தெரிந்ததும் அந்தப் பொறாமை இன்னும் அதிகரித்தது.

"உன் கர்வத்தை அழிக்கிறேன் பார்"– மூர்க்கம் பிறந்தது.

கல்லூரிப் போட்டிகளில், கலந்து கொண்ட இடத்தில் எல்லாம் சசிக்குக் கிடைத்த வெற்றியும், அந்த வெற்றியின் பெருமிதத்தில் சசியைப் பார்க்கும் சந்துருவின் கண்ணில் விரியும் காதலும் வெறியைத் தூண்டிவிட்டது.



''யார் சார் அது.... ஒவ்வொரு டேபிளுக்கும் போய் 'இட்லி பூ மாதிரி இருக்கா, தோசை ருசியா இருக்கா' னெல்லாம் கரிசனமா விசாரிச்சுக்கிட்டிருக்கார்?''

''நேத்து காசில்லாம சாப்பிட்டுட்டு இட்லி, தோசைக்கு மாவு ஆட்டினவர் தான்!''

— மேல்மங்கலம் பத்ரா

அவள் ஒரு தேர்ந்த வியாபாரியின் பெண். வரவு, செலவுக் கணக்குடன், ஒரு ஆளை எந்த இடத்தில் வீழ்த்துவது என்று தெரிந்தவள்.

வீழ்த்தி விட்டாள். திறமையுடன் ஒரு ஆட்டம் ஆடி காய்களை நகர்த்தி ராணியை வெட்டி விட்டாள்.

பல்லவி, சந்துருவின் குடும்பத்தைப் பிடித்தாள். சந்துருவுக்கு வேலை வாங்கித் தந்து, அமெரிக்கா போய் அங்கு ஆராய்ச்சி செய்ய வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தாள். "அவன் தங்கைகளுக்குக் கல்யாணம் செய்து வைக்கிறேன். ஆனா உன் பையன் என் பொண்ணை கல்யாணம் பண்ணிக்கணும்"- பல்லவியின் அப்பா பேரம் பேசினார்.

பல்லவியின் அப்பா, காதலுக்கு சப்போர்ட். பெண்ணின் ஆசை, சந்துருவைப் பற்றி விசாரித்ததில், அவன் திறமையும், புத்திசாலித்தனமும் தெரிய, அவனை விட அவருக்கு மனதில்லை.

''உன் சந்தோஷம்தான் முக்கியம்.''

''நல்லவர்பா''- பல்லவி.

''திறமைசாலியும் கூட. வெளிநாட்டுக்கு டிரெய்னிங் அனுப்பி நம்ம கம்பெனியிலேயே வச்சுக்கலாம்!''

''நடக்குமா?''

''காசு... காசு...'' அவன் அப்பா வலை விரித்தார். குடும்பம் வீழ்ந்தது.

சந்துருவிடம் வாதாடி, கெஞ்சிப் பயனில்லாமல் அவன் அப்பா மருந்து குடித்தார். ஒரு நாடகம் போல், மருந்து குடித்துவிட்டு, நான் குடிச்சிட்டேன். சாகறேன். என் புள்ளை இப்படிப் பண்ணிட்டான் என்று காம்பவுண்ட் முழுதும் கத்தி, ஆர்ப்பாட்டம் செய்து, எல்லாரும் சேர்ந்து அவன் அப்பாவை ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள்.

அதில்தான் சசி அதிர்ந்து போனாள். இன்னொருத்தர் சமாதி மேல் தன் வாழ்க்கை அமைய வேண்டுமா! பிடிவாதத்தால் சந்துரு வாழ்க்கையில் நல்ல சந்தர்ப்பத்தை விட வேண்டுமா?

''வேண்டாம் சந்துரு. இன்னொருத்தர் சமாதியின் மேல நம்ம வாழ்க்கையை அமைச்சுக்க எனக்கு இஷ்டமில்லை. நம்மால ஒரு நல்லது நடக்கும்னா, அதைச் செய்யறதுல என்ன தப்பு? ஒரு குடும்பத்துக்காக ஒருத்தரை பலி கொடுக்கலாம். ஒரு ஊருக்காக ஒரு குடும்பம். நீங்க ஆசைப்பட்ட ஃபாரின் சான்ஸ், உங்க தங்கைகளுக்கு கல்யாணம் இதெல்லாத்தையும் நம்ம பிடிவாதத்தால கெடுக்கணுமா?''

''உன்னைப் பிரிஞ்சு என்னால இருக்கு முடியாது சசி.''

''முட்டாள்! யாரும் யாருக்கும் எப்போதும் துணையா இருந்துட முடியாது சந்துரு. வாழ்க்கைல எதானும் ஒரு சந்தர்ப்பத்துல இந்தப் பிரிதல், தனிமை இதெல்லாத்தையும் அனுபவிச்சுதான் ஆகணும்.''

சந்துரு பித்துப் பிடித்தவன் மாதிரி இருந்தான். சசி, அவனைத் தேற்றி மாற்றினாள்.

சசி, சசி என்று பேச முடியாமல் தவித்தான்.

''புரியுது சந்துரு. ஆனால் விட்டுக் கொடுத்தல் மூலம் வாழ்க்கை இன்னும் அர்த்தமுடையதா ஆகறதுன்னு சொல்றேன். நீ வாழ்க்கைல ஒவ்வொரு ஸ்டெப் ஏறும்போது இதுக்



''மூன்று எழுத்தில் என் மூச்சிருக்கும்னு உன் கணவர் அடிக்கடி பாடிக்கிட்டிருக்காரே? என்னடி விஷயம்?''

''வேறென்ன? மாமூல்!''

- மல்லிகை மன்னன்

ருக் காரணம் சசியோட தியாகம்னு தோணும்ல?"

"நிச்சயம் சசி."

"எனக்கு இது போதும் சந்துரு. மனசுல ஒவ்வொரு நிமிஷமும் உன்கூட வாழறது நானா இருக்கணும்."

"கண்டிப்பா சசி. நான் சாகறப்போ கூட கடைசி நிமிஷம் என் மனசுல தோணற உருவம் நீயாத்தான் இருக்கும் சசி."

சசி நிறைந்த மனதுடன், வாசலில் உட்கார்ந்து தெருவில் விளையாடும் குழந்தைகளை, வரும், போகும், கார்களைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.

சந்துருவுக்கும், அவன் தங்கைகளுக்கும் ஒரே பந்தலில் கல்யாணம் முடிந்து, டிரெய்னிங் என்ற பெயரில் சந்திரமௌலி அமெரிக்கா போய்விட்டான்.

"ஹாய்" வேகமாய் வந்து நின்ற காரிலிருந்து இறங்கிய பல்லவி முகத்துக்கு நேராக கை வீசினாள்.

சசி எழுந்து நின்று மௌனமாக புன்னகைத்தாள்.

"வான்னு சொல்லக் கூடாதா?"

"இது உன் வீடு பல்லவி."

"என் வீடா?"

"ம். சந்துரு இருக்கிற வீடு உன் வீடுதானே!"

இதென்ன பைத்தியம் என்பது போல் பார்த்தாள் பல்லவி. தன் வெற்றியைக் கொண்டாட, ஜெயித்தவள், தோற்றவளை ஏளனம் செய்ய வந்திருக்கிறாள் என்று புரிந்தது.

"உள்ள வந்து பாரு பல்லவி."

நுழைந்த பல்லவி அதிர்ந்து நின்றாள். நகர விடாமல் அவளின் உயிர்த்துடிப்பை நிறுத்தியது சுற்றுப்புறம். சசியும், மௌலியும் சேர்ந்து நிற்கும் ஆளுயரப் படங்கள் அந்த அறையின் சுவரை அலங்கரித்தன.

ஓரமாக கை கட்டியபடி நின்று அவளின் அதிர்வைப் புன்னகையுடன் பதிவு செய்தது சசியின் மனது.

ஆங்காரத்துடன் வெறித்தாள் பல்லவி.

"ஃபோட்டோலதான் நீ ரசிக்கணும்."

"ஹும்."

"ரசிக்க முடியாதுன்னு சொன்னியே!"

"ம்ம்."

"பாத்தியா. ஜெயிச்சுட்டேன்."

"ஜெயிப்புன்னு நீ எதைச் சொல்றே பல்லவி?"

"சந்திரமௌலி இப்ப என் சொத்து."

"உடம்பாலா? மனசாலா?"

"................"

ஜுக் பல்லவி. ஜெயித்தல் உனக்கு வெளிரீதியாத்தான். 'மனப்பூர்வமா அவர் உன்னை நெருங்கிட்டாரா? ம்? நான் சொல்லட்டா?



"என் தம்பிக்குப் பொருத்தமான வேலை எதுவும் வாங்கித் தரக் கூடாதா?"

"கொஞ்சம் பொறு கமலா! மாடு மேய்க்க ஆள் தேவையானு நானும் விசாரிச்சுக்கிட்டுத்தான் இருக்கேன்!"

— உ. ஜானகி

வெற்றி அடைஞ்ச மாதிரி நீ தோத்துட்டே. தோல்வி அடைஞ்ச மாதிரி நான் ஜெயிச்சிருக்கேன்!"

"எப்படி?"

"அவருக்காக நான் தியாகம் பண்ணியிருக்கேன். அவரைத் தவிர இன்னொருத்தருக்கு நான் சொந்தம் ஆக மாட்டேன்னு தெரியும். என் செய்கையும், பிரியமும் அவர் மனசுல எனக்கு பெரிய இடம் தந்திருக்கு. உன் கூட வாழற ஒவ்வொரு நிமிஷமும் அவருக்கு என் நினைப்புதான். சாகற நேரத்துல கூட தோணற கடைசி உருவம் என்னுதாத்தான் இருக்கும்."

சசி நிறுத்தி, பல்லவியின் முகத்தைக் கூர்ந்தாள்.

"சொல்லு. இது உனக்கு கேவலமாயில்லையா! உன் புருஷன் மனசுல ஒருத்தியை சுமந்துட்டு அவ நினைப்போடதான் உன்னோட வாழுவான். நெஞ்சுக்குள்ள இருக்கற பிராண வாயு போல என் நினைப்புதான் மனசுல பரவி இருக்கும். காதலர்களைப் பிரிக்கலாமே தவிர காதலைப் பிரிக்க முடியாது. பல்லவி. இப்ப சொல்லு. ஜெயிச்சது நீயா? இல்லை நானா?"

பல்லவி கண் அகல விரைத்து நின்றாள். சிறிது, சிறிதாக அது சுருங்கி, ஆள் கண்டு மறையும் பாம்பு போல் சரசரவென்று இறங்கி ஓடினாள்.

அந்த விலகலையும் பின்வாங்குதலையும் கண்டு, சசியின் புன்னகை கர்வத்துடன் விரிந்தாலும், கண்ணோரத்தில் வழிந்து இறங்குவதைத் தடுக்க முடியவில்லை.

சமீபத்தில் காலமாகிவிட்ட மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஏ. நல்லசிவத்துக்கு மூன்று காரணங்களுக்காகத் தமிழகம் நன்றிக்கடன் பட்டிருக்கிறது என்கிறார் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் சங்கரய்யா. 1940லிருந்தே நல்லசிவமுடன் இணைந்து பல போராட்டங்கள், சிறை அனுபவங்கள் கண்டவர் சங்கரய்யா. அவரைச் சந்தித்தபோது:

தோழர் நல்லசிவம் ஆரம்பத்தில் ஒரு காந்தியவாதி. நெல்லை மாவட்டம் பிரமதேசம் என்கிற கிராமத்தில் அப்போது கே. செல்வராஜ் என்றொரு மின்சாரத் தொழிலாளி இருந்தார். அவர் ஒரு கம்யூனிஸ்ட். செல்வராஜுடன் வாதம் செய்து, கம்யூனிஸம் அல்ல; காந்தியமே தலைசிறந்த மார்க்கம் என்று நிரூபிப்பதற்காக நண்பர்களால் அவரிடம் அழைத்துச் செல்லப்பட்டார் நல்லசிவம்.

ஆனால் என்ன ஆயிற்று தெரியுமா? செல்வராஜுடன் பேசப் பேச, இவருக்குக் கம்யூனிஸத்தில் ஈடுபாடு வந்துவிட, அவர் மூலமாகவே கம்யூனிஸ நூல்களைப் பெற்றுப் படித்து, விஞ்ஞான சோஷலிஸத்தில் ஆர்வம் கொண்டு, இவரே ஒரு கம்யூனிஸ்ட் ஆகிவிட்டார்!

தோழர் நல்லசிவம் ஓர் அருமையான தொழிற்சங்கவாதி. விக்ரமசிங்கபுரம் பஞ்சாலைத் தொழிற்சாலையின் தொழிற்சங்க நடவடிக்கைகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு, பல போராட்டங்களை நடத்தியவர்.

அந்நாளில் (1940-42) நெல்லை மாவட்டத் தொழிற்சங்கங்கள் மிகப் பிற்போக்கான மனப்பான்மை கொண்டிருந்தன. அதை மாற்றி, தொழிற்சங்க இயக்கத்தை முற்போக்குப் பாதையில் நடைபோடச் செய்தவர் நல்லசிவம்தான்!

அந்த முயற்சிகளில் அவர் சந்தித்த பிரச்னைகள் கொஞ்ச நஞ்சமல்ல. 'நல்லசிவத்தை ஒழித்தே விடுவது' என்கிற எண்ணத்தில் அவரை ஒரு கொலை வழக்கில் சம்பந்தப்படுத்தி ஒரு வருடம் விசாரணைக் கைதியாக உள்ளே வைத்தார்கள்.

ஜாமீனே தரப்படாமல் அந்த ஒரு வருடம் முழுவதும் சிறையில் அவர் பட்ட பாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல.

1949ல் இந்தியா முழுவதும் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டபோது நெல்லை சதி மற்றும் கொலை வழக்கில் நூற்றுக்கணக்கான கட்சித் தோழர்களுடன் நல்லசிவம் மீண்டும் சிறை வைக்கப்பட்டார்.

சில ஆண்டுகள் நடந்த இந்த வழக்கிலும் ஜாமீன் கிடையாது! சிறைக் கொடுமைகள் சொல்லி மாளாது! அவரோடு சிறையில் இருந்தவன் என்கிற முறையில் அவரது நடவடிக்கைகளை மிகக் கூர்ந்து கவனித்தவன் நான்.

சிறையில் தோழர்கள் உற்சாகம் குன்றா வண்ணம் பேசிப் பேசி, அரவணைத்துச் செல்வார்!

அப்போது மதுரை பாலு என்கிற தோழர், சதி வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட, இந்தப் பொய் வழக்கையும் தீர்ப்பையும் எதிர்த்து சிறைக்குள்ளே மாபெரும் கிளர்ச்சி நடத்தியவர் தோழர் நல்லசிவம்.

பாலுவைத் தூக்கிலிடக் கூடாது என்று கேட்டு சிறைக்குள்ளே உண்ணாவிரதம் இருந்தபோது, காவலர்களால் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டார். அவரது வலது கை மணிக்கட்டே உடைந்து போகும் அளவுக்கு!

தான் தாக்கப்படுவதைப் பற்றி அவர் கவலைப்பட்டவரே இல்லை! ஆனால் பிற தோழர்களுக்கு இன்னல் வரும்போதுதான் துடித்து விடுவார்!

மதுரைச் சிறையில் அந்த உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து நடத்தப்பட்ட மிருகத்தனமான தாக்குதலில் நாச்சியார்புரம்

போராட

ராமநாதன் என்கிற தோழர் இறந்தே போனார்! இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், சிறையைப் பார்வையிடவும், சிறைக்குள்ளே நடக்கிற அநியாயங்களைப் பற்றி விசாரிக்கவும் வந்த அந்நாளைய சிறைத்துறை அமைச்சர் மாதவமேனனை நல்லசிவமும் பிற தோழர்களும் சந்திக்க மறுத்து விட்டனர். பிறகுதான் சிறை மேலாளர் மாற்றப்பட்டுக் கொஞ்சம் அமைதி திரும்பியது.


• சங்கரய்யா

சிறை அனுபவங்கள் என்பது தோழர் நல்லசிவத்துக்கு வாழ்வோடு பின்னிப் பிணைந்து அமைந்துவிட்ட ஒன்று என்றே சொல்ல வேண்டும். எமர்ஜென்ஸி கால கட்டத்திலும் மீண்டும் சிறை கண்டவர் அவர்! தாக்குதல்களில் அவர் பட்ட ரணங்கள் கொஞ்ச நஞ்சமல்ல!

மக்கள் நலன், தொழிலாளர் நலன் என்பதைத் தவிர வேறெது பற்றியும் அவர் சிந்தித்து நான் பார்த்ததில்லை!

ராஜ்யசபா உறுப்பினராக இருந்திருக்கிறார். ஒவ்வொரு எம்.பி.க்கும் ஒரு கோடி ரூபாய் வளர்ச்சி நிதியாக வழங்கப்பட்டதல்லவா?

பிற எம்.பி.க்கள் அதை என்ன செய்தார்களோ? தோழர் நல்லசிவம் தமக்கு அளிக்கப்

பட்ட ஒரு கோடியை என்ன செய்தார் தெரியுமா?

தமிழகத்தில் மிகப் பின்தங்கிய மாவட்டமான தர்மபுரிக்கு அந்தப் பணத்தை - நலத் திட்டங்களுக்காக அளித்து விட்டார்! இன்று அந்த உதவியால் தர்மபுரி மாவட்டத்தில் பல பள்ளிகளும் மருத்துவமனைகளும்



• ஏ. நல்லசிவம்

சிறப்பாக இயங்குகின்றன. இதில் கவனிக்க வேண்டிய விஷயம் - நல்லசிவம் நெல்லை மாவட்டத்துக்காரர்! தம் மாவட்டத்துக்கு அளிக்கவில்லை அவர்! பின் தங்கிய ஒரு மாவட்டம் பலன் பெற வேண்டும் என்று கருதிச் செயல்பட்டார்!

அவரது இரண்டாவது முக்கிய சாதனை - வாச்சாத்தி பெண்கள் மானபங்க வழக்கு தொடர்பானது.

அப்பாவி மலைவாழ் பெண்கள் கொடூரமாக மானபங்கப்படுத்தப்பட்டபோது, அன்றைய அரசு அதை மூடி மறைக்கப் பார்த்தது. தோழர் நல்லசிவம் தாமே அந்த மலைப் பகுதிக்குச் சென்று, பார்த்து நிலைமையை அலசி ஆராய்ந்து, 'இந்த வழக்கு மத்தியப் புலனாய்வுத் துறையால் விசாரிக்கப்பட்டாலொழிய உண்மை வெளி வராது' என்று முடிவுக்கு வந்தார். இன்றைக்கு அந்த வழக்கு சி.பி.ஐ.யால்தான் விசாரிக்கப்படுகிறது என்றால், அதைப் போராடிச் செயல்படுத்தியவர் தோழர் நல்லசிவம் தான்!

மூன்றாவதும் மிக முக்கியமானது மான அவரது சாதனை - தமிழகத்தில் 69 சத இட ஒதுக்கீடு சம்பந்தமானது.

ஜெயலலிதா ஆட்சியில் இந்தப் பிரச்னை கொண்டு வரப்பட்டு,

நிறைந்தவர்

சட்டமாக்கப்பட முயன்றபோது அதற்கு ஜனாதிபதியின் அனுமதி கிடைக்கவில்லை.

இந்த ஒதுக்கீடு மிக அவசியமானது என்று தோழர் நல்லசிவம் தீவிரமாக நம்பினார். ஜனாதிபதியை நேரில் சந்தித்துப் பேசுவது என்று முடிவு செய்தார்.

நானும் அவரும் டில்லிக்குப் பயணமானோம். ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினோம். 'தமிழகத்துக்கு இந்த 69 சத இட ஒதுக்கீடு எத்தனை அத்தியாவசியமானது' என்பதை விரிவாக எடுத்துச் சொன்னோம்.

அந்தச் சட்டத்துக்கு அங்கீகாரம் கொடுப்பது மட்டுமல்ல, நீதிமன்றத்தில் அதை எதிர்த்து யாரும் வழக்காட முடியாதபடி ஷெட்யூல் 9ன் கீழ் அதைக் கொண்டு வரவும் வழி செய்யக் கோரி, வெற்றி காணப்பட்டது!

(எனினும் இதை எதிர்த்து, சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டிருப்பதால், சட்டம் நடைமுறைக்கு வர இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது)

இந்தச் சாதனைகளுக்காக என்றென்றும் நினைத்துப் பார்க்கப்பட வேண்டியவர் தோழர் நல்லசிவம்.

சந்திப்பு: **கிச்சா**

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Annual Subscription : India Rs. 208/-; Overseas Rs. 1200/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 104/-; Overseas Rs. 600/- (Air Mail)

● இளையராஜா சிறப்புப் பேட்டி!

— இதுவரை பேசாத விதமாகப் பேசுகிறார்.

● என்றும் இளமையாக இருப்பது எப்படி?

– புதிய பகுதி

● பற்களைப் பாதுகாப்போம்

– பயனுள்ள சிறப்பு இணைப்புப் பகுதி

கல்கி 17.8.97 இதழ்...



● அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி முடிவுகள், முதல் பரிசுக் கதை

அதிக பக்கங்கள்! அதே விலை

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/97 * Registered No. TN / MS (S) M4392/97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka